Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 20

# ஈழநாடு
வார மலர்

மலர் 11 | சௌமிய கார்த்திகை 23 | றம்ழான் 27 | (8-12-69) | திங்கட்கிழமை | இதழ் 298

மில்க் வைற் சோப்

பாவிப்பாளர்களுக்கு
ஓர் அன்பான வேண்டுகோள்

பாவித்த 50 மில்க் வைற் சோப்
மேலுறைகளை சேகரித்து
அனுப்பி
ஓர் அழகான படத்தை
இனமாகப்
பெற்றுக்கொள்ளுங்கள்

### வேலை நிறுத்தம் தொடருகிறது

# புகையிரதப் பகுதிக்கு 3 கோடி ரூபா நஷ்டம்

## வேலை செய்யும் ஊழியருக்கு அட்வான்ஸ்கொடுக்கபணமில்லை

கொழும்பு, திங்கள் புகையிரதசேவை நாடு முழுவதும் முற்றாக ஸ்தம்பித்ததா ் தினமும் சுமார் 50 லட்சம் ரூபா நஷ்டமென்றுபுகையிரதப்பகுதி அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார். 6 நாட்கள் தொடர்ந்து புகையிரதப்பகுதியில் நடைபெறும் வேலைநிறுத்தத்தால் சுமார் 3 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புகையிரதபகுதியில் வேலை செய்துவரும் மற்றும் ஊழியர்களுக்கு அட்வான்ஸ் கொடுப்பதற்காக, கையிருப்பில் பணமில்லாததால் புகையிரதப்பகுதினர், வங்கி சேமிப்பிலிருந்துபணமெடுத்ததாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார் இதுவரை காலமும் நாளாந்தவருமானத்திலிருந்தே அட்வான்ஸ் கொடுக்கப் பட்டதாகவும் இதற்கு முன் வங்கி சேமிப்பிலிருந்து பணம் எடுக்கப் படவில்லையென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

புகையிரதப் பகுதியை சேர்ந்த கார்ட்மார்சங்கமும் சாரதிகள்சங்கமும் தொடர்ந்து 7 நாட்களாக வேலை நிறுத்தம் செய்துவருகின்றன.

இன்று பிரயாணிகள் வண்டி சேவை ஒன்றும் நடைபெறுது என்றும் நாளை காரியாலய ஊழியாகளுக்கான மட்டுபபடுக்தப்பட்ட சேவை நடைபெறுமென்றும் ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரிசி, மா, எரிபொருள் ஆகிய அத்தியாவசிய பொருள்களை ஏற்றிச்செல்லுவதற்கென 13 சரக்குவண்டிகள் இப்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். அநுராதபுரம் பஸ்சேவை விஸ்தரிப்பு

புகையிரதப் பகுதியினரின் வேலைநிறுத்தத்தால் பஸ்பிரயாணிகள் அதிகரித்ததைத் தொடர்ந்து நேற்று முதல் யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரத்திற்கு மேலதிக பஸ்கள் சேவைக்குவிடப்பட்டுள்ளதாக, இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்ப்பாண டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் பிரயாணிகள் கூடுதலாக இருந்தால், மற்ற இடங்களுக்கும் மேலதிக பஸ்கள் சேவைக்கு விடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை

## பட்டினசபை தேர்தல் முடிவுகள்

மாவிட்டபுரம்,திங்.

நேற்று நடைபெற்ற காங்கேசன்துறைப் பட்டின சபைத் தேர்தலில் வெற்றி பெற்றோர்விபரம்வருமாறு:-

1-ம் வட்டாரம்: க. ஜெயபாலசிங்கம்538, எஸ்.சோதி 137

2-ம் வட்டாரம்; ஆ, வ. சதாசிவம் 378 (தற்போதயதலைவர்) கே. தேவராசா 326,

3-ம் வட்டாரம்: எஸ் குருசாமி (போட்டியின்றித் தெரிவு)

4-ம் வட்டாரம்: எஸ். நாகரத்தினம் 559, எஸ். வன்னியசிங்கம் 470. கே.வேலாயுதம் 137.

5-ம் வட்டாரம்: வி. இரத்தினராசா 322, சி. கணபதிப்பிள்ளை 314.

6-ம் வட்டாரம்: வி பேரின்பநாயகம் 366. செ. மரிசலீன் 301, எஸ் இராமநாதன் 290.



யாழ்ப்பாணம் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் விழாவில் செல்வி யோககுமாரி நடராஜா (வயது 6) உரை நிகழ்த்தினர். விழாவுக்கு சித்தாந்த வித்தகர் வே. நாகலிங்கம் ஜே பி. யு எம். தலைமை தாங்கினர் செந்தூர்ப் புராணப் பிரசுரகர்த்தர் திரு. எஸ் எஸ். நடராஜாவும் கலந்துகொண்டார்.

## யாழ். தபாற்கந்தோரிலும் 10-ந் திகதி வேலைநிறுத்தம்?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் தபாற்தந்கோர், பொறியியலாளர் பகுதியைச் சேர்ந்த தொலை தொடர்பு பரிசோதகர் சங்கத்தின் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப் படாவிடில், வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்னறிவித்தல கொடுத்துள்ளது. இம் மாதம் 10-ம் தேதிக்கு முன்னர் கோரிக்கை நிறைவேற்றப்படாவிடில், வெளிநடப்பு செய்வார்கள் என பரிசோதகர் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பொறியியலாளர் பகுதியில் உள்ள சுமார் 150 ஊழியர்கள் பாவித்துவந்த மலசலகூடம், கடந்த பல மாதங்களாகப் பழுதடைந்திருப்பதாகவும், இதனைச் சிரமதானமூலம், திருத்துவதற்கு பொறியியலாளர் பகுதி ஊழியர்கள் முன்வந்த போதும், தபாற் பகுதியினர் இதற்கு அனுமதியளிக்கவில்லையென்றும், பொறியிய

[16ம் பக்கம் பார்க்க]

நத்தார்--புத்தாண்டு
மலிவு விற்பனை!
ஆரம்பம்: 9-12-69

டயருமஸ்



54-60, பிரதான வீதி :: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சரம் — அரசியல் நிருபர்

# வேலை நிறுத்தங்களுக்கு முடிவு காண பிரதமர் பிரான்ஸைப் பின்பற்றுவாரா?

நீங்கள் இதைப் படிக்கும்போது வேலை நிறுத்தங்கள் முடிவடைந்திருக்கலாம் அல்லது இதர சில துறைகளுக்கும் வேலை நிறுத்தம் பரவக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கலாம்.

ரயில் என்ஜின் சாரதிகளினதும் கார்டுகளினதும் வேலை நிறுத்தம் அரசாங்கத்துக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியிருப்பதுடன பொது மக்களுக்குப் பெரும் கஷ்டத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. ரயில்வே ஊழியரின் வேலை நிறுத்தமானுலென்ன வேறு எந்த ஊழியரின் வேலைநிறுத்தமானுலும் அரசாங்க ஊழியரின் வேலை நிறுத்தத்துக்கு பொது மக்கள் மத்தியில் இக்காலத்தில் பொதுவாக ஆதரவு குறைவுதான். காரணம்படித்தவர்களும், படித்துப் பட்டம் பெற்றவர்களும், அதிகம் படிக்காதவர்களுமாக சுமார் மூன்று லட்சம் பேர் வேலையில்லாமலிருக்கவும், சம்பளத் திட்டமோ, சமசம்பள உயர்வோ, மற்றும் வசதிகளோ இல்லாமல் தனியார்துறை ஊழியர் பலர் இருக்கவும், அன்றுடம் உழைத்து உண்டு நோய்வந்தால் ஆஸ்பத்திரியே தஞ்சம் என்ற நிலையில் பலர் இருக்கவும் குறிக்கப்பட்ட சம்பள விகிதத்தில் வேலைக்குச் சேர்ந்து சம்பள உயர்வுகளையும் பெற்று மற்றும் சகலவசதிகளையும் அனுபவிப்பவர்கள் அரசாங்க ஊழியர் என்பது பொது மக்களின் அபிப்பிராயம்.

துறைமுக ஊழியரும் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர். ரயில்வே ஊழியரின் வேலை நிறுத்தம், ஆஸ்பத்திரி ஆய்வுகூட தொழில்நுட்ப ஊழியரின் வேலை நிறுத்தம், பல்கலைக்கழக மாணவரின் பகிஷ்கரிப்பும் கிளர்ச்சியும் மற்றொருபுறம்.

பிரான்சில் தொழிலாளர் வேலை நிறுத்தங்களும் மாணவர் கிளர்ச்சிகளும் அதிகரித்து ஜெனரல் டிகாலின் ஆட்சியே ஆட்டம் காணும் நிலைமையேற்பட்டது. தொழிலாளர் சம்பள உயர்வு கோரினர்; மாணவர் தங்களுக்குச் சலுகையும் வசதியும்கோரினர். தொழிற் சங்கத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் அரசாங்கம் ராஜினுமாச் செய்யவேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். தொழிலாளருக்குச் சம்பள உயர்வு கொடுக்கக்கூடிய நிலையில் நாட்டின் நிதி நிலைமை இல்லை என்று அரசாங்கம் அறிவித்தது. ஆனுலும் தொழிலாளரின் வேலை நிறுத்தமும் மாணவர் பகிஷ்கரிப்பும் நீடித்தது. பிரான்ஸ் தேசமே ஸ்தம்பிதமடைந்தது. இந்நிலையில் ஜெனரல் டிகால் ஆட்சிமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குத் திகதியும் நிர்ணயித்தார். தொழிலாளரின் கோரிக்கையும் மாணவர் கிளர்ச்சியும் பொதுத் தேர்தலில் முக்கிய பிரச்னையாக வைக்கப்பட்டது. தேர்தலும் நடைபெற்றது. ஜெனரல் டிகாலின் கட்சியே வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிக்கு வந்தது.

அடுத்த பொதுத் தேர்தல் நெருங்கும் சமயத்தில் இங்கும் வேலைநிறுத்தங்கள் பரவத் தொடங்கியிருப்பதாலும், அரசாங்க ஊழியருக்கு சம்பள உயர்வும், இதர வசதிகளும் அளிக்கப்பட்டிருப்பதாலும், முன்னைய வேலை நிறுத்தத்தின்போது, ''விவசாயிகளின் உழைப்பை அரசாங்கஊழியருக்குக் கொடுப்பதா?'' என்று பிரதமர் கூறியதுபோல், இப்போதும்



இந்த வேலைநிறுத்தங்களை முக்கிய பிரச்னையாகவைத்து அடுத்த தேர்தலுக்குப் பிரதமர் திகதி நிர்ணயிக்கக் கூடும்.

இரத்தினபுரித் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. தனபால அட்டிகல காலமானதால் காலியாகியிருக்கும் அந்த ஸ்தானத்துக்கு உபதேர்தல் நடைபெறமாட்டாதென்றும் அடுத்த பொதுத்தேர்தல் நெருங்குவதே இதற்குக் காரணம் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது. எனவே சம்பள உயர்வுக்கோரிக்கைகளை முன்வைத்து நடைபெறும் வேலை நிறுத்தங்களை முக்கிய பிரச்னையாக்கி அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆளும் கட்சி முன்வரக்கூடும்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் சகல அரசாங்க ஊழியரின்கோரிக்கைகளும் நிறைவேற்றப்படுமென்றும் சம்பள உயர்வு அளிக்கப்படுமென்றும் எதிர்க்கட்சியினர் உறுதியளித்து தொழிலாளரின் வாக்குகளைப்பெறமுடியும். யார் வாக்குறுதியளித்தாலும் ஆட்சிபீடம் ஏறிய பின் அதை நிறைவேற்றத் தவறினுல் மீண்டும் வேலை நிறுத்தங்களும் கிளர்ச்சிகளும் ஏற்படும்.

இவை கடந்த கால அனுபவம். வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத்திரும்பினுல் தான்பேச்சுவார்த்தை நடைபெறுமென்று அரசாங்கம் கூறுவதும் இதற்கு வேலைநிறுத்தம் செய்யும் தொழிற்சங்கங்கள் மறுப்பதும் பின்னர் அரசாங்கம் அத்தியாவசிய சேவையென சில சேவைகளைப்பிரகடனப்படுத்துவதும் அதன்பின்னர் பேச்சுவார்த்தைமூலம் இருதரப்பினரும் கௌரவத்துடன் விட்டுக்கொடுத்துநிலைமையைச் சமாளிப்பதும் வழமையான சமாச்சாரங்கள்.

தொழிலாளர் பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணவும் தொழிலாளர் பிரச்னையை அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்துவதில்லையென்ற ஒரு நிலைமையையேற்படுத்தவும் அரசியல் தலைவர்களும் தொழிற் சங்கத்தலைவர்களும் என்று முன்வருகிறுர்களோ அன்றுதான் தொழில் அமைதியேற்படும்; நாடும் முன்னேறும். தொழிற்சங்கம் என்பதற்கு ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதுதான் சரியான அர்த்தம். ஆனுல் நமது நாட்டிலோஒருதொழிலுக்குப் பல சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஒன்ருக இறங்கும்இந்தச்சங்கங்களுக்கிடையில் எப்படியோ அபிப்பிராய பேதமேற்படுவதும் பின்னர் காட்டிக்கொடுத்துவிட்டார்கள் 'துரோகிகள்' என்று ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்தி அறிக்கை விடுவதும் இங்கு நடைபெறும் சம்பவங்கள்.

இந்த நிலை என்று மாறுமோ? ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று ஏற்பட்டால்தான் தொழிலாளருக்கும் விமோசனம்.


நாளைமுதல் குதூகல ஆரம்பம்

**பொகுமால்ஸ் ஸ்தாபனத்தாரின்**

**நத்தார் - புதுவருட மலிவு விற்பனை**

முக்கியமாக நத்தார் திருநாளை குதூகலமாக கொண்டாட புதிதாக வரவழைக்கப்பட்ட பல ரக சேட்டுகளை கொள்ளை மலிவில் விற்றுமுடிப்பதே எமது நோக்கம்.

| பல ரக சேட்டுகளில் சில: | வ. வி. | ம. வி. |
|---|---|---|
| டிப்ளோமற் டெரலின் (லக்ஸறி) சேட் | 29-50 | 21-00 |
| டிப்ளோமற் டெற்றேன் கொட்டன் சேட் | 22-50 | 16-00 |
| டிப்ளோமற் அரஸ்டிகோட் சேட் | 17-50 | 11-50 |
| ஸோடியக் டெரலின் சேட் | 22-50 | 12-50 |
| ஸ்கைவே டெரலின் சேட் | 24-50 | 16-00 |
| மான்கற்றன் நைலோன் சேட் | 26-50 | 17-00 |
| டியூரோ நைலோன் சேட் | 29-50 | 16-00 |
| மொட்டெக்ஸ் டெரலின் சேட் | 24-50 | 13-00 |

இன்னும் ஆயிரக்கணக்கான சேட்டுகள் மீளப்பெற முடியாத விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சகல விற்பனைப் பகுதியிலும்விலைகள் மிகமிகக்குறைக்கப்பட்டுள்ளது:

மற்றும் உங்களுக்குத் தேவையான டெற்றேன், கொட்டன் சேட்டுக்கள்
மான் கற்றன் 'டொக்கோமா'' கென்லி 'சுப்பிரிமா''
டயா ''றேஸ னற்'' கென்லி''டிலாக்ஸ்''
லின்டன் ''லக்ஸறி'' மக்சிம் ''அரஸ்டி கோட்''
டிப்ளோமற் றிஜன்ட்

இன்னும் அனேக சேட்டுகள் மலிவு விலையில் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். பொன்னுன இந்த வாய்ப்பைத் தவறவிடாதீர்கள். எந்நாளும் உங்கள் ஆதரவை நாடும்

**பொகுமால்ஸ் சேட்மாளிகை**

49, மெயின்வீதி :: யாழ்ப்பாணம்


# உலக மேடை

# கிழக்கும் மேற்கும் ஒன்று சேர்கிறது

## காங்கிரஸ் பிரிந்தே விட்டது

கிழக்கு கிழக்குத்தான்; மேற்கு மேற்குத்தான். இரண்டும் ஒருபோதும் ஒன்று சேராது என்று எவரோ ஒருத்தர் எதற்காகச் சொன்னுரோ தெரியவில்லை.

இதுவரை காலமும் எதிரும் புதிருமாக இருந்த சோஷலிஸ நாடுகளான கம்யூனிஸ்ட் நாடுகளும் முதலாளித்துவ நாடுகள் என வர்ணிக்கப்பட்டு வந்த மேற்கத்திய நாடுகளும் ஐரோப்பாவில் நெருக்கடியைத் தணிக்க ஒத்துழைக்க முன்வந்துள்ளன. சோஷலிஸ நாடுகள் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவை, எதிலும் ஒன்றுசேரமாட்டாதவை எனக் கருதப்பட்டுவந்த கிழக்கும் மேற்கும் ஐரோப்பாவில் நெருக்கடியைத் தணிப்பதற்காக ஒத்துழைக்கப்போகின்றன. இந்த ஒத்துழைப்பு எப்படி இருக்கும்? இப்பொழுதே வார்சா நாடுகள் விஷயத்தில் கவனமாக இருக்கும்படி 'நேட்டோ' நாடுகளை அமெரிக்க ராஜாங்க அமைச்சர் எச்சரித்திருக்கிறார். [illegible] எனப்படும் வட அத்லாந்திக் ஒப்பந்த ஸ்தாபனம், 'சியாட்டோ' எனப்படும் தென்கிழக்காசிய பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனம் 'சென்டோ' எனப்படும் மத்திய பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனங்கள் அமெரிக்காவின் உதவியுடன், அதன் தலைமையில் பெரும்பாலும் அமைக்கப்பட்டவை. இவை இராணுவக் கூட்டுக்கள். இவற்றுக்குப் பதிலாக சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளும் சேர்ந்து இராணுவக் கூட்டு ஏற்படுத்தினர்.

சோவியத் யூனியனும் அமெரிக்காவும் ஒன்றின்மீது ஒன்று அச்சமும் அவநம்பிக்கையும் கொண்டிருந்ததன் விளைவுதான் இந்த இராணுவக் கூட்டுக்கள் தோன்றக் காரணம்.

### எஸ். எம் ஜி.

சமீப காலமாக சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் சில சில விஷயங்களில் கருத்தொற்றுமை ஏற்பட்டு வருகிறது. நவசீனுவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் ஏற்பட்ட வேறுபாடு அதிகரித்து கைகலப்பும் ஏற்பட்டதால் சோவியத் அமெரிக்க உறவில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்

கிழக்கு மேற்கு நாடுகள் ஐரோப்பாவில் நெருக்கடியைத் தணிப்பதற்கு ஒத்துழைப்பது சம்பந்தமாக இருதரப்பினரும் ஆராய்வதற்கு இன்னும் சில மாதங்களாவது செல்லும்.

ஐரோப்பாவில் நெருக்கடியைத் தணிப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளில் ஆலோசிக்கப்படவிருக்கும் விஷயங்களில் நேட்டோவிலுள்ள இராணுவத்தையும் 'வார்சா'விலுள்ள இராணுவத்தையும் சம அளவுக்குக் குறைக்க வேண்டுமென்பதும் ஒன்ரும்.

இவையெல்லாவற்றையும் விட மிகச்சுலபமான வழி இராணுவக் கூட்டுக்கள் அனைத்தையும் கலைத்துவிடுவதும் வெளிநாடுகளில் உள்ள தங்கள் தளங்களைக் கலைத்து, தங்கள் துருப்புக்களையும் வல்லரசுகள் திரும்ப அழைத்துக்கொண்டால் ஐரோப்பாவில் மட்டுமல்ல ஆசியாவிலும் நெருக்கடி குறையும். அமைதியும் திரும்பும். மக்களுக்கும் நிம்மதி.

**வி. எஸ்,**

### மந்திரியாவாரா?

அகில இந்தியக் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்து

[15ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலரும்— வினுவிடையும்



ஔவை துரைசாமிப்பிள்ளை

"நாவலர் வினு—விடை நூல்களைத் தமிழில் புகுத்த ஒரு புரட்சியை ஏற்படுத்தினுர். நாவலருக்கு முந்திய காலத்தில்-பதினைந்தாம் நூற்றுண்டு முதல் பதினெட்டாம் நூற்றுண்டுவரை 'ஏன்? எதற்கு?' என்று சிந்திக்கும் பண்பைத் தமிழ் மக்கள் இழந்திருந்தனர். பல்வேறு வல்லரசுகள் வலிந்து திணித்து அடிமைப்படுத்தியதன் விளைவாக இந்த மந்த நிலை ஏற்பட்டது. பதினுலாம் நூற்றுண்டில் தெள்ளாறெறிந்த மூன்றும் நந்திவர்மன் காலத்தில் பெண்கள்கூட நீதிச் சபைகளின் தலைவர்களாக இருந்திருக்கிருர்கள்.

ஒரு நாள் மாலை பெண்கள் வழக்கம்போல் நீர் மொண்டுவர ஆற்றங்கரை சென்றிருந்தனர். வழியில் குடிபோதையில் நின்ற ஒருவன் இவர்களைத் தொந்தரவு செய்தான். அவர்கள் வந்து அவன் மனைவியிடம் முறையிட்டனர். மனைவிதான் அந்த ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவி சபையைக் கூட்டும்படி அவள் உத்தரவு கொடுத்தாள். சபை கூடியது. தலைவி உலகுடையதேவி விசாரணை முடிவில் குடிபோதையில் நின்றவனை (தன் கணவனை) குற்றவாளியெனக் கண்டு தீர்ப்பு வழங்குகிருள். அவ்வூரிலிருந்த ஒரு கோவிலில் மாலை நாலு மணி முதல் இரவு மூன்றும் சாமம்வரை இரண்டு கிழமைகளுக்கு விளக்கேற்றி வைக்க வேண்டும் என்று தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனையை நிறைவேற்றியபின் இரண்டு கிழமை உலகுடையதேவியும் விளக்கேற்றினுள். தன் கணவன் வாழ்வில் தனக்கும் சம பங்குண்டென்று அதற்கு விளக்கமும் தந்தாள். இந்தச் செய்தி ஒரு கல்வெட்டில் தரப்பட்டுள்ளது.

இப்படிப் பெண்களே உயர் நிலையிலிருந்த தமிழகம் தாழ்ந்திருந்தபோது கிறிஸ்துவ மிஷனரிகள் கையாண்ட வினு-விடை முறையைப் பயன்படுத்தி தமிழர் மத்தியில் புத்துயிர் ஊட்ட, புதுவலிமை சேர்க்கப் பாடுபட்டார் நாவலர். அந்த வகையிலே அவர் கையாண்ட வினு-விடை முயற்சி ஒரு புரட்சியாக அமைந்தது."

—ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, (மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்)

(இது 21-5-69 மாலை யாழ் மத்திய கல்லூரியில் நாவலர் பற்றி ஆற்றிய உரையிலிருந்து திரட்டப்பட்டது. திரட்டியவர்: ஆ. தேவராசன்.)

# காங்கேயன் துறையின் அநாதியான பெயர் யாது?

## புராணங்களும் வரலாறுகளும் கூறும் தகவல்கள்

— வ. குமாரசாமி —

சிவபக்தனுகிய இராவணேசுபரனுடைய நவகோடி இலிங்கப் பிரதிஷ்டையினுலே இலங்கிக்கொண்டிருப்பதும் முத்துக்களும் மணிகளும் நிறைந்து காணப்படுவதும் எழில்மிகு இயற்கை வனப்புடையதும் அந்நிய நாட்டவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளதுமான ஈழத்திருநாட்டின் சிகரமாக விளங்கும் செந்தமிழ் மணம் கமழும் யாழ். நகரின் வடபால் ஆதிகாலத்தில் குரக்கன்துறை, பருத்தித்துறை, உசமன்துறை, ஜம்புநாவல்துறை. வீரமாணிக்கதேவன்துறைபோன்ற துறைமுகங்கள் பிரசித்தி பெற்று விளங்கின. இத்துறைமுகங்கள் மூலமாக நம் நாட்டவர்களும் பிறநாட்டவர்களும் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனரென சரித்திரம் கூறும். வடபகுதியில் உள்ள இத்துறைமுகங்களினுலே யாழ்ப்பாணமும் மற்றும் ஈழத்தின் பகுதிகளும் பொலிவுற்று விளங்கின. இங்கே வரும் பிறநாட்டு வணிகர்கள் மூலமாக ஈழநாட்டின் புகழ் உலகம் முழுவதும் பரவியது. கிரேக்கர், ரோமர் போன்ற அந்நிய நாட்டவர்களும் இந்நாட்டின் சிறப்பைக் கேளவிப்பட்டு இங்கே வந்தார்களென்ற வரலாறு நூல்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. இத்துறைமுகங்கள் வாணிபத்துக்குமட்டுமல்லாமல் பாரத நாடுபோன்ற பிற நாடுகளிலுள்ள சமயசம்பந்தமான புனித ஸ்தலங்களுக்கும் மக்கள் பிரயாணஞ் செய்யும் கப்பற்துறைகளாகவும் விளங்கின. இத்துறைகளுள் குரக்கன்துறை மிகப் பிரசித்தி பெற்று விளங்கியது.

### குரக்கன்துறை

இது முன்னே தெல்லிப்பளையுடன் கூடிய கிராமமாகும். இத்துறைமுகத்தின் வழியாகக் குரக்கன் சாமை போன்ற ஈழத்துணவுதானியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதன் காரணத்தினுல் ஆதியில் குரக்கன் துறை எனப் பெயர் பெற்று விளங்கியது பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டதுறை எப்படிப் பருத்தித்துறையென அழைக்கப்படுகின்றதோ அதேபோன்று குரக்கன் ஏற்றுமதி செய்யப்பட்ட துறையும் குரக்கன்துறையென அழைக்கப்பட்டது. யாழ்ப்பாண வியாபாரிகள் நாகபட்டினச் சந்தைக்குச் சென்று வியாபாரஞ் செய்தனரென சரித்திரம் கூறுகின்றது. தென் கடல் முத்துங் குணகடற்றுகிரும் ஈழத்துணவும் எனப் பட்டினப்பாலையென்ற நூலில் கூறப்படுவதிலிருந்து ஈழத்துணவு பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகியதென்பது புலனுகின்றது. மக்களிடம் அதிக வட்டி வசூல் செய்த காரணத்தினுல், அரசனுல் நாடு கடத்தப்பட்ட பரத கண்டத்துச் செட்டிகள் ஈழத்தின் கரையோரப் பகுதிகளாகிய குரக்கன்துறை, பருத்தித்துறை, ஜம்புநாவல்துறை, முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற இடங்களில் குடியேறியதாக நூல்கள் மூலம் அறியக்கிடக்கின்றது.

இன்று யாழ்ப்பாணமென அழைக்கப்படும் பிரதேசம் ஆதியில் அந்தகக்கவிவீரராகவனுக்கு முன் மணற்றியென அழைக்கப்பட்டதாகச் சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். இன்று யாழ்ப்பாணமெனப் பெயர்பெற்றுலும் இதன் பழைய நாமமாகிய மணற்றி இன்றும் இந்நகரின் சில பகுதிகளுக்கு உரிய நாமமாக விளங்குகின்றது. அதேபோன்று இன்று குரக்கன்துறை, காங்கேயன்துறை என்ற நாமத்தைப் பெற்று விளங்கினுலும் குரக்கன்துறை என்ற ஆதி நாமம் காங்கேயன்துறையின் சில பகுதிகளுக்கு உரிய பெயராக விளங்குகின்றது பரம்பரைபரம்பரையாக இங்கு வாழ்ந்துவரும் மக்கள் இன்றும் குரக்கன்துறையென்ற நாமத்தைப் பேச்சுவழக்கில் கைக்கொள்ளுகின்றனர்.

### புராதன கோவில் பகரும் சான்று

காங்கேசன்துறை குரக்கன்துறையென அழைக்கப்பட்ட ஆதிகாலத்தில் இங்கு வாழ்ந்த மக்களும் இத்துறை மூலமாக வாணிபம் செய்த மக்களும் சங்கத் தமிழ் வளர்த்த மதுரைமா நகரிலிருந்து தங்கப்பேழையில் யந்திர ரூபமாகக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்யப்பட்டவரும், "குரக்கன்துறைக்குரலோன்" எனப் போற்றிப் புகழப்படுபவரும், பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் மதிக்

[4ம் பக்கம் பார்க்க]

# கயரோகத்தைக் கண்டு பயப்பட வேண்டாம்

கயரோகம் என்ற பெயரைக் கேட்டவுடனே ஜனங்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடிப்போய் 'ஐயோ, போச்சு' ஆள் முடிஞ்சு போச்சு! என்று ஓலமிட்ட காலம் ஒன்றிருந்தது. இந்நோய் வந்தால் அதற்கு மருந்தில்லை, சுடுகாட்டில்தான்மாறும் என்று நம்பியகாலம் அது. அந்தக் காலம் எப்பொழுதோ மலையேறிவிட்டது. கயரோகத்தை தற்காலத்து நவீன மருந்துகள் வென்று விட்டன.

### எப்படி உண்டாகிறது?

கயரோகம் உண்டாவதற்கு காரணமாயிருப்பது 'டியூபக்கிள்' என்னும் ஒரு கிருமி இது ஒருவருடைய தேகத்தின் எப்பாகத்தையும் தாக்கும். ஆனுல்பெரும்பாலும் சுவாசப்பைகளையே அது விரும்புகிறது. கயரோகம் பரம்பரையாகப் பிறப்பில்உண்டாகும் நோயன்று. அ ஒரு தொற்றுநோய். கிருமிகள் வலிமைகுறைந்த தேகத்தில் புகுந்தவுடன் வெகுவேகமாகப் பெருகும். நோயாளியின் ஓர் எச்சில் துளியில் சுமார் 50 லட்சம் கிருமிகள்இருக்கும். நோயாளியுடன் உடலுக்குடல்நெருங்கிப் பழகுவதாலும் அவர் பாவித்த பொருட்களைப் பாவிப்பதாலும் கிருமிகள் தொற்றும். நோயாளிகள் உமிழ்ந்த எச்சில் காயும்போது தரைப்புழுதியுடன் கலந்து காற்ருேடு சேரும். இதை சுவாசிப்பவர்களையும் கிருமிகள் தொற்றிக் கொள்ளும்.

நோயாளி இருக்கும் அறைக்குள் நுழைந்தவுடனேயே நோய் தொற்றிவிடும் என்பதல்ல. அப்படியாயின் நோயாளிகளைக் கவனிக்கும் டாக்டர்கள், தாதிமார்கள், சமூக ஊழியர்கள் எல்லோருமே இத்தறுதியில் கயரோகிகளாய் இருப்பார்கள். நோயாளியுடன் வெகுகாலமாக மிக நெருங்கிப் பழகினுல்தான் நோய் தொற்றும்.

கயரோகம் குழந்தைகளை மிக இலகுவில் தாக்கிவிடும். நோயாளியுடனே அவர் படுக்கும் அறையிலோ குழந்தைகள் படுத்தால்ஆபத்து. நோயாளியுள்ள அறையில் காற்றில் 'டியூபக்கிள்' கிருமிகள் இருப்பது அவர் அடிக்கடி பலமாக இருமுவதையும் துப்புவதையும் பொறுத்தது: நோயாளி கவனமாயிருந்து காற்றுக் கிளறப்படாவிட்டால் ஆபத்து மிகக் குறைவானதே.

[ சுப்புடு ]

### நோயின் அறிகுறிகள்

ஆரம்பகாலத்தில் அறிகுறிகள் காண்பது அபூர்வம். நல்ல சுகமுடையவராகக் காணப்பட்டாலும் ஒருவர் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆண்டி என்றும் அரசன்என்றும் கயரோகம் பாரபட்சம் காட்டமாட்டாது. அறிகுறிகள் காணப்படுவதற்கு முன் எக்ஸ்ரே படம் எடுத்துக் கொண்டால் நோய் இருக்கிறதா இல்லையா என்பது தெரியவரும். நோய் [illegible] அறிகுறிகள் தென்படும். பின் வருவனவற்றில் ஒன்ருே அல்லது பலவோ காணப்படலாம். எடைகுன்றவு, பசியின்மை, களைப்பு, மார்பு நோ, உடல் உஷ்ணம் அதிகரித்தல், இரவில் வியர்வை, வரண்டஇருமல், இரத்தம் உமிழ்தல், சிலரிடம் இந்த அறிகுறிகள் தோன்றுமலும் நோய் பற்றிக் கொள்ளும். ஆகையால் சந்தேகமுள்ளவர்கள் 4, 5, மாதத்திற்கு ஒருதடவையாவது எக்ஸ்ரே படம் பிடித்துக் கொள்வது நல்லது.

எக்ஸ்ரே எடுப்பதற்கு முன்பு மார்பு சிகிச்சை நிலையங்களில் 'டியூபக்குலின்' சோதனை என்பதாக ஒரு சோதனையும் செய்வார்கள். அம்மைப்பால் குத்துவது போல இந்த 'டியூபக்குலின்' மருந்தில் ஒரு துளியைமேல் சருமத்தில் புகுத்தி விடுவார்கள் இரண்டுநாள் கழித்து அவ்விடத்தில் ஒன்றும் காணப்படாவிட்டால் நோயில்லை என்று கொள்ளலாம். குத்தப்பட்ட இடம் சிவந்து வீங்கியிருந்தால் தான் எக்ஸ்ரே படம் பிடிப்பார்கள்.

### கயரோகத்தை மாற்றமுடியும்

ஸ்ரெப்டோமைசின் போன்ற மருந்து வகைகளாலும் பூரணமாக ஓய்வு எடுத்துக் கொள்வதாலும், தீவிரமான நோயாலுல், சத்திர சிகிச்சையாலும் கயரோகத்தை இலகுவில் மாற்றிவிடலாம். இலங்கையில் கயரோக சிகிச்சைக்கென்று புறம்பாக வெலிசறை, ருகம, புத்தளம், கந்தானை, காங்கேசன்துறை, விரவில் ஆகிய இடங்களில் வைத்தியசாலைகள் உண்டு. இவற்றைத்தவிர சுமார் 22 அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் கயரோக சிகிச்சைக்கென தனி அறைக்ள் உள்ளன. ஒருவருக்கு கயரோகம் இருக்கிறதென்று சந்தேகம் ஏற்பட்டால் அண்மையிலுள்ள மார்பு சிகிச்சை நிலையம் ஒன்றுக்குப் போய் சோதனை செய்தபின்னர் மேற்கூறிய ஆஸ்பத்திரிகளில் ஏதாவதொன்றில் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

### கயரோகத்தை தடுப்பது எப்படி?

வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல்நன்று. சுலபமும் கூட. பொதுவாக எந்த நோய்க்குமே இது பொருந்தும் ஒருகயரோகம் ஏற்படாமல் தடுக்கவேண்டுமானுல்பின்வரும் முறைகளை ஒழுங்காக கடைப்பிடித்தல் வேண்டும்: உணவு, ஓய்வு, தொழில் முதலியவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளல், ஆரோக்கியமான சூழ்நிலை, சுத்தமான காற்றும் சூரிய வெளிச்சமும், உடலை மிகவும் தாக்கும் வேலைகளை அகற்றுதல், நோயாளிகளுடன் நெருங்கிப்பழகாமலிருத்தல், வருடத்தில் ஒருமுறையாவது மார்பு சோதனை

ஒருகாலத்தில் இலங்கையிலே மிகவும் கொடிய நோய் என்று கருதப்பட்டு வந்த கயரோகம் நவீன மருந்துகளாலும், இலங்கை கயரோகத் தடுப்பு இயக்கத்தின்முயற்சிகளினுலும் இப்பொழுது மிகவும் உக்கிரம் குன்றிப் போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழையடியும் அவர் 'புது வாழ்வும்'

— 'காங்கேயன்' —

இன்றெல்லாம் எத்தனையோ பேர் கதை எழுதுகிறார்கள். பல மாதிரியாக நவீன உத்திகளைக் கையாண்டு எழுதுகிறார்கள் பலநோக்கங்களுடனே எழுதுகிறார்கள். எழுதும்போது கதை படித்து மகிழும் வாசகர்களை மனதில் நினைக்கிறார்களோ இல்லையோ என்று அவர்கள்எழுதியகதைகளைப் படிக்கும் போது பல சமயம் நமக்குத் தோன்றுவதுண்டு. இலக்கிய விமர்சகர்கள் எனப்படும் நுண்ணாய்வாளர் இவர்கள் எழுதும்கதைகளில் புதைந்துள்ள நயங்களை எடுத்துக்காட்டி அவர்கள் சிறந்த கதாசிரியர்கள் என அறிமுகப் படுத்துகிறார்கள். ஆனால் தாழையடி சபாரத்தினத்தின் கதை சொல்லும் திறன் இதற்கெல்லாம் விலக்காக நின்று ஒளிர்கிறது. கதை படிப்பவர்களுக்காக-அவர்களை மகிழ்வித்து சிலநேரம் தன்னோடு லயப் படுத்திவிடும் ஒரே சிந்தனையுடனே-அவர் கதைபுனைந்து அந்தக்கதையை அழகாகச் சொல்கிறார். இதில் அவர் பெரும் வெற்றியே கண்டார் என்று நிச்சயமாகக் கூறமுடியும் அத்துடன் கல்கி ஆசிரியர் தொடக்கி வைத்த கதை இலக்கிய மரபை ஒட்டி எழுதிப்பரிசு பெற்ற இலங்கையர் என்ற பெயரை நிலைநாட்டிக் கொண்டவரும் ஆகிறார். இலக்கிய விமர்சகர்களைப் பற்றி அவர் கவலைப்பட்டதே இல்லை. கதை சொல்லும் திறமை கதைகள் படித்து அவர்கற்றுக்கொண்டதல்ல. இயற்கையாக அவருக்குக் கைவந்த கலை.

தாழையடி சபாரத்தினத்தின் சிறுகதைத் தொகுதி ஒன்று அவர் காலமாகி ஈராண்டுகளின்பின் வெளிவந்திருக்கிறது. கதாசிரியரின் மனைவி திருமதி மீனா சபாரத்தினம்தான் வெளியிட்டிருக்கிறார். 220 பக்கங்களில் அவரது 20 தேர்வுக் கதைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. பழைய நாள் நட்சத்திர சிறுகதை எழுத்தாளரும் சபாவின் நன்மதிப்புக்குரிய வருமான 'சம்பந்தன்' சுருக்கமாக இரண்டே பக்கங்களில் இந்நூலுக்கு எழுதியமுன்னுரையில் ''திரு. சபாரத்தினம் மிக இளம்பராயத்திலேயே பொதுமக்களின் அதிர்ஷ்டக் குறைவால் மறைந்து விட்டார். இன்னும் சில வருடங்களாவது இருந்து எழுதுவாராயின் எத்தனை சிறப்பைப் பெற்றிருப்பார்!'' எனக் கவலையுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

தொகுதியில் சபாரத்தினம் முன்பொரு சமயம் ''கல்கி'' சிறுகதைப்போட்டியில் பரிசுபெற்ற சிறுகதை பின்பு வானொலி நாடக அவதாரமெடுத்து ஒலிபரப்பானதை அப்படியே வானொலி எழுத்துப் பிரதிரூபமாகவே சேர்த்திருக்கிறார்கள். அத்துடன் இலகுவாக வாசித்து ரசிக்கமுடியாத கோலத்தில் அது புத்தகத்தில் முதல் முப்பத்தைந்து பக்கங்களைப் பிடித்துக்கொண்டு சிறுகதை வாசகநேயர்களின் கண்களுக்கு எரிச்சலையூட்டுகிறது. அத்துடன் கிழக்5 வெழுத்தது, சூருவழி. பிதிரார் ஜிதம், திவிஷம், இளயவன், செனுத்தி, ஒக்களை, தழும்பு, தனையன், கோழ், ரெயின், தழுவிகிறீர், ஸிட்டர், கற்பவதி, உருகி பஸ்ஸில், பாட்டுக்கள் போன்ற அச்சுப் பிழைகளுடன் பஸ்கொன்டக்டர் கண்டக்டராகவும் கண்டக்டராகவும் அடிக்கடி மாறி முதல் சில பக்கங்களைப் புரட்டிய மாத்திரத்திலேயே கதாசிரியர் (அவர் இன்று உயிர்வாழ்ந்து இதனைப் பார்க்கநேர்ந்திருப்பின்) முகத்தில் அசடுவழியும்படி செய்துவிடுகின்றன. அதற்குமேல் அவர் என்ன செய்வார் என்பதை ஒருகணம் கண்ணை மூடிக்கொண்டு என்மனம்கற்பனை செய்துபார்க்கிறது.

உள்ளே சமையல் கட்டில் வேலைபார்த்துக்கொண்டிருக்கும் அவர்மனையாளை அணுகி ''இதெல்லாம் என்ன மீனா? இதுதான் நீ பள்ளிக்கூடம் போய் படித்தலட்சணமா?'' என்று வழக்கமான அதிகார தோரணையில் ஓர் அதட்டல் அதட்டிவிட்டு முகக்கடுப்புடனே புத்தகத்தை அவர் முன்னால் வீசிவிட்டு அவரிடமிருந்து ஒரு பத்துச்சதம் வாங்கிக்கொண்டு பக்கத்துக் கடைக்குப்போய் அதற்கு ஒரு சிகரெட் வாங்கிப் பற்றவைத்து அதன் நறுமணத்தில் அனைத்தையும் மறந்து புகைச்சுருள்எழுப்பியவராக நாற்காலியில் ஆழ்ந்துவிடுவார். அப்பொழுது நண்பர்கள் யாராவது வந்தால் மெதுமெதுவாக அவர் குரலில் தொனி பிறந்து வாய் கதை அளக்க ஆரம்பிக்கும். நண்பர்கள் இருபேருக்கு மேல் என்றால் சீட்டுக்கச்சேரி நடக்கும் யாருமில்லை என்றால் அவரது எழுதுகோல் அவர் கைவிரல்களுக்கிடையே தன்னை நுழைத்துக்கொண்டு கதை அளக்கத் தொடங்கிவிடும். வாய்பேசாமல் அப்படி மனதுக்குள்ளே பேசிக்கொண்டதைத்தான் ஆயிரக்கணக்கானோர் எங்கெல்லாமோ இருந்து 'கேட்டு' மகிழ்ந்தார்கள். மத்திரிகைவாயிலாக இன்று கவர்ச்சியான அவரது முகம் பொலியும் நிழலுருவப்படத்துடனே வெளிவந்திருக்கும் புத்தகத்தில் அவர்கதைகளை [illegible] வாயைப்பார்த்துக் கொண்டே தங்கள் திறந்த வாய் மூடாது கதை கேட்கும் வாய்ப்புப்பெற்றவர்களாகிறார்கள். 'சம்பந்தன்' மாஸ்டர் சொல்வதுபோல அவர்கள் 'பாக்கியசாலிகள்'. இருபதுகதைகளையும் கேட்டு முடிந்தபின் அவர்கள்எழுந்து போகும் போது ''சபா அண்ணே, நாளைக்கு வருகிறோம். கட்டாயம் வருகிறோம்'' என்று சொல்லி விடைபெற்றுச் செல்வார்கள். தெருப்படலை தாண்டி அவர்கள் வெளியேறும் போது ஒருவர் கைக்கடிகாரத்தில் நேரத்தைப்பார்த்துவிட்டு ''சே, மனுஷனோடு உட்கார்ந்து இருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. ஒருநாள் வேலையே கெட்டுப்போச்சு'' என்று தங்களுக்குள்ளேபேசிச்சிரித்துக்கொள்வது என் காதில் விழுகிறது.

நேற்றும் இன்றும் நாளையும் தாழையடி சபாரத்தினம் உயிர்வாழ்ந்த காலத்திலும் காலமாகியபின்பும் நண்பர்கள் மத்தியில் ஓர் இனிய நண்பராகவே ஒளிர்கிறது.

குடும்பஸ்தவரானவர்கள் பிரமச்சாரிகளான நண்பர்களைச் சம்சாரசாகரத்தில் ஆழ்த்திவிட மற்றுமுள்ள மூத்தோருடன் சேர்ந்து பல உபாயங்களைக் கையாளுவார்கள். 'டக்கோவார்' கயிறிழுப்புப் போட்டிபோல இந்தப்போட்டி இன்றைக்கும் நாளைக்கும் உண்டு. இதனால் நகர்ப்புற வாலிபர்கள் பெரும் சோதனைக்குள்ளாவார்கள்; சங்கடங்களில் மாட்டிக்கொள்வார்கள். பட்டணத்தில் வாழும் பிரமச்சாரிகள் காதல், வெருளி, மயக்கங்களைத் தவிர்த்து ஒதுங்கி வாழ்வதால் எப்பொழுதும் வில்லங்கமான காரியம். தொகுதியிலுள்ள 'கிழவனார் சொன்ன கதை'க்குப் பொருளாகியிருப்பது ஒரு விஷயம்தான். தொகுதியில் அது சிறந்த கதைகளில் ஒன்றாகியிருக்கிறது.

''எனக்கு வேறே யாரிருக்கிறார்கள்?'' -தப்பி ஓட வழி தெரியாமல் தவித்துக் கொண்டே கூறினார்.

''நான்தான் அகப்பட்டேனா?'' என்றாள் அவள்.

ஒரு பிரமசாரியின் காதல் சங்கடம் காதல் மனோராச்சியம் திடீரென இப்படிச் சரிந்து வீழ்வதுடன் கதை முடிகிறது. இம்முடிவு கதைக்குச் சிகரம் வைத்தாற்போல அமைந்துவிட்டது. கதையைச் சொல்ல ஆரம்பித்த கிழவனாரை கதாசிரியர் மறந்துவிட்டார் போலிருக்கிறது.

'பந்தயம்' என்ற கதையில் கதாசிரியர் மகாதுணிச்சலாக மோட்டார் சைக்கிள் விடுகிறார்-தமது அண்ணன்மார்களைப்போல

கையில்லாத கந்தை கதாசிரியரிடம் சிக்கி புத்தம் புதிய 'ரெடிமேட்' ஆகியிருக்கிறது 'ஷேட்' என்ற சிறுகதையில்.

தான் மனதில் எண்ணியிருந்தவள் வேறொருவனுக்கு வாழ்க்கைப்படப் போகிறாள் என்பது தெரிந்தது முதலாக குமுறிக்கொண்டிருந்த ஒருவனின் உள்மனம் அப்பெண்ணைக்கீரிமலைக்குநீராட அழைத்துச்செல்கிறது. கேணிக்குள்ளேஅவளைக் தண்ணீருக்குள் ஆழ்த்தித் திருகிக் கொன்றுவிடுகிறான். 'மனக்குகை' என்ற இந்தச் சிறுகதை தமிழ்நாட்டுவாழ்க்கை மரபுக்கு ஒத்ததாக அமையுமா என்பது பற்றி கதை இலக்கிய விமரிசகர்கள் சில காலத்துக்கு முன் சர்ச்சையில் ஈடுபட்டதாக ஞாபகம்.

வெசாக் விழா பார்க்கப் போன வாலிபன், வகையறியாமல் காடையர்களிடம் சிக்கித் தவித்த ஓர் இளம் பெண்ணுக்கு உதவிசெய்யப் போனவிடத்தில் உதவிக்குப் பிரதியாக பொலிஸ் நிலையத்தில் வைத்து அப்பெண்ணின் கணவனிடமே அடி வாங்க நேர்ந்த புதிய அனுபவம் 'உதவியும் பிரதியும்' கதையாயிருக்கிறது.

தலைமன்னார் துறையில் சோகமே உருவாய் வாடிய கொடிபோல் இன்னமும் நம் கண்முன்னே நிற்கிறாள் சுனந்தாவதி இந்திய வாலிபன் ரகுவிடம் அவள் தகப்பன் கிழவன் கூறும் பிரிவு மொழி மனதைத் தொடுகிறது.

பெண்ணின் பெருமை, புதுவருஷப் பரிசு, ஏழு ரூபாய், 'யப்பானியன் படம்', 'கடமையும் கருணையும்', 'சைக்கிள் சக்கரம்...' என்பன தொகுதியிலுள்ள மற்றும் பல நல்ல கதைகளில் சில.

**புதுவாழ்வு:** (சிறுகதைத் தொகுதி) ஆசிரியர்: தாழையடி சபாரத்தினம். வெளியிடுவோர்: திருமதி மீனா சபாரத்தினம், உடுப்பிட்டி. விலை ரூபா: 4-00.

# காங்கேயன்துறை...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

கக்கூடிய அரசவிருட்சத்தைத் தல விருட்சமாகப் பெற்றவருமாகிய குரக்கன் துறை ஸ்ரீவீரபத்திர குரு சுவாமியை வணங்கி வந்தார்கள். அவ்வாலயம் இன்றும்குரக்கன்துறைஸ்ரீவீரபத்திர குரு சுவாமி கோயிலென இத்துறையின் பழைய நாமத்துடன் விளங்குகின்றது. அதுவுமல்லாமல் இங்கு வாழ்ந்த மறத்தமிழர் கூட்டம் இத்துறையின்கண் அநாதி மூர்த்தியாக வீற்றிருக்கும் இப் பெருமானைத் தங்கள் வீரத்தெய்வமாகவும் குருவாகவும் வணங்கினர். அந்நியருடன்போர் புரியவேண்டி நேரிடின் இப் பெருமானை முதலிலே வணங்கியே போருக்குப் புறப்படும் வழக்கம் இருந்துவந்ததென்பதை இங்குள்ள கர்ண பரம்பரைக் கதைகள் மூலம் அறியக்கிடக்கின்றது இப்புராதன ஆலயத்தின் மூலமாகவும் குரக்கன் துறை என்ற நாமம் காங்கேசன்துறைக்குரிய பழைய நாமம்என்பதை அறியலாம்

**கயாத்துறை**

ஈழநாட்டிலுள்ள புத்தமதத்தவர் தங்கள் புனிதஸ்தலமாகிய புத்தகயாவுக்கு இத்துறையில் மரக்கலமேறி யாத்திரை செய்துவந்தார்கள். இக்காரணத்தினாலே நாளடைவில் குரக்கன்துறையென்ற நாமம் மாறி கயாத்துறையென்ற புது நாமம் வழங்கலாயிற்று. சமயசம்பந்தமான யாத்திரையின் காரணத்தினால் இப்பெயர் சரித்திரத்தில் திடமான இடத்தைப் பிடித்துக்கொண்டது.

**காங்கேயன்துறையில் கதிர்காமக்கந்தன்**

கந்தக் கடவுளாகிய காங்கேயப்பெருமான் தேவிமாரிருவருடன் பல சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு வேதாரணிய சமுத்திரக் கரையை அடைந்து மரக்கலமேறி ஈழத்திருநாட்டின் வடபால் உள்ள கடற்கரையில் இறங்கினரெனவும் இதனாலேயே காங்கேசன்துறையென்ற நாமம் ஏற்பட்டதெனவும் இங்கே இறங்கிய காங்கேய பெருமான் அவ்விடத்தில் ஒரு ஆலயத்தை அமைத்து, அங்கே தங்கிப்பின் வன்னிக்காடாகிய கந்தவனத்தையடைந்து அங்கிருந்து கந்தமலை, சமனலயம், கண்டகி, வடகாந்தாரம், உகந்த மலை முதலிய இடங்களில் தங்கி இறுதியாகக் கதிர்காமத்திலுள்ள சிந்தாமணி ஆலயத்தில் எழுந்தருளியிருந்தாரென தக்ஷிண கைலாச புராணம் கூறுகின்றது.

**மாவைக்கந்தன்**

சோழ இளவரசியாகிய மாருதப்புரவீகவல்லி முற்பிறவியில் முனிவரொருவர் இட்ட சாபத்தினாலே இப்பிறவியில் கொடிய குன்ம நோயினாலே பீடிக்கப்பட்டாள் எனவும், இக்கொடிய நோயைத் தீர்க்கும் பொருட்டு முனிவர் ஒருவரின் ஆலோசனையின் பேரில் ஈழநாட்டின் வடபாலுள்ள கீரிமலைக்குச் சென்று அம் மலையடிவாரத்திலுள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடி கோவிற் கடவையிலுள்ள முருகப்பெருமானை வணங்கித் தன் நோய் நீங்கப்பெற்றாளெனவும், அப்பெருமானின் திருவருளை நினைந்துருகி அப்பெருமான்குடிகொண்ட புராதன ஆலயத்தைச்சிறந்த முறையிலே அமைப்பித்து அங்கே பிரதிஷ்டை செய்விப்பதற்காகபாரததேசத்திலிருந்து காங்கேயப்பெருமானின் விக்கிரகத்தை வருவித்தாளெனவும், அவ்விக்கிரகம் இறக்கப்பட்ட துறையே காங்கேயன்துறையெனவும் சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர்.

**காங்கேயன்**

காங்கேயன் என்ற பெயரையுடைய தளபதியினாலே ஆட்சிசெய்யப்பட்ட இடம் அவன் நாமத்தை நினைவுபடுத்தும்முகமாக காங்கேயன்துறையெனப் பெயர் பெற்றதெனவும் சரித்திர நூல்களில் காணக்கிடக்கின்றது.

சரித்திர நூல்களும் புராணங்களும்வெவ்வேறாகக்கூறினாலும் காங்கேயப்பெருமானாகிய முருகப்பெருமான் வந்திறங்கிய காரணத்தினாலேயே காங்கேயன்துறையென்ற நாமம் ஏற்பட்டதாகவே பெரும்பாலான மக்களிடையே கருத்து நிலவுகின்றது.

குரக்கன்துறை, காயத்துறை, காங்கேயன்துறை என முழுப்பெயர் பெற்று விளங்கும் இப்பூமியின் பண்டைய சரித்திர உண்மைகளையும் பெருமையையும் பேணிக்காப்பது இவ்வூர் அரசினதும் மக்களதுகடமையாகும்.

# நம் வாழ்க்கை

பூவுலகில் நாம் வாழும் வாழ்க்கை, பெண்கள் அணியும் உடைந்துபோகிற கண்ணாடி வளையல்கள்மாதிரி நிலையற்றது. ஒரு பெட்டியில் போட்டுப் பத்திரப் படுத்தினால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கூட அந்த வளையல்கள் நிற்கும். ஆனால் நம்முடைய ஆயுளோ ஓர் இமைப்பொழுதில் அழிந்து போகக்கூடும். ஆகையால் உயிருள்ளபோதே இப்போதே உள்ளங்களைச் சுத்தி செய்துகொள்வோம்.

# தாய்த்திருநாடு

—நல்லைக்குமரன்—

தாய்த்திரு நாடெங்கள் உயிருக்கு நேர் - அதன்
தாழ்வொடு வாழ்வெங்கள் வாழ்க்கையின்வேர்
வாய்த்த இவ்வேளையில் வாய்மையுடன் - எங்கள்
வளமிகும் ஈழத்தைக் காத்திடுவோம்.

நெஞ்சிலுரங் கொண்டு வாழ்ந்திடுவோம் - நல்ல
நேர்மைத் திறனுடன் பேசிடுவோம்
வஞ்சப் புலன்வழிச் செல்லாது - உயர்
வாய்மை வழிச்சென்று வென்றிடுவோம்.

பிறந்த பொன்னாட்டைப் பேணுதலே - என்றும்
பேரறம் என்ப துணர்ந்திடுவோம்
மறந்தும் விலக்கிய தீச்செயல்கள் - தமை
மனத்திலும் எண்ணுதல் செய்யோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் போட்டிக்கு வந்த ஓரங்க நாடகங்களில் இதுவுமொன்று.

# நீறு

ஜே. எம். இராசு

### கதாபாத்திரங்கள்

| | |
|---|---|
| கிருஷ்ணஜீ: | (ஒரு துறவி) |
| ராமு: | (அங்கவீனன் குரூபி) |
| தெய்வானை: | (ராமுவின் தாய்) |
| கந்தானைக்கந்தப்பு | (ஒரு வயோதிபர்) |
| ஜோதி: | (தெய்வானையின் மூத்தமகன்) |
| சொக்கன்: | (முரடன் அல்லது கள்ளன்) |
| முத்து: | ( ,, ,, ) |
| சண்முகம்: | (தெய்வானையின் தம்பி) |

இடம்: காட்சி ஒன்று

பிள்ளையார்கோவிலும் அதை அடுத்துள்ள சத்திரமும்

இருள் மடிந்து பகல் விடிந்து கொள்கிறது. காலை நேரம்-

ஆதவனின் பொற்கிரணங்கள், இதமான சுகானுபவத்தைத் தரும் மென்மையோடு, அந்தப் பிள்ளையார் கோயிலையும், அதனையடுத்திருக்கும் அந்த சத்திரத்தையும், தனது பூரண ஆட்சிக்குட்படுத்தி சுதந்திரமான தனது ஆட்சியை செலுத்திக்கொண்டு இருக்கிறது.

உலக லௌகீக விவகாரங்களிலிருந்து விலகி, உலகத்தை வெறுத்து, உறவுகளை நீக்கி உணர்ச்சிகளையும், உணர்வுகளையும் அடக்கிக் கொண்டவரான துறவி கிருஷ்ணஜீ பிள்ளையார் கோவிலுக்கு வருகிறார்.

எதிலுமே பற்றற்ற நிலையில், பரம்பொருளிடம் பரிபூர்ண சரணாகதியடைந்து ஆலயங்கள்தோறும் அவனைக்கண்டு நித்தியமான ஆத்மாவை புனிதப்படுத்தும் கிருஷ்ணஜீ, முற்றிலும் கற்றுணர்ந்தவரென்பது அவரது பண்பட்ட, நிஷ்களங்கமில்லாத அமைதி நிறைந்த தோற்றம் சொல்லிக்கொண்டிருந்தது. அங்கங்கள் செயலிழந்து முகம் விகாரமாகி, பற்கள் வெளியே தள்ளி, நீண்டு கோரமாகி, பார்ப்பதற்கே பரிதாபமான அந்த ஜீவனை ஒருமுறை உற்று நோக்கிவிட்டு, பிள்ளையார் கோவில் முன்போய் கரங்களைக் குவித்துக்கொண்டு மோனநிலையில் சில நிமிஷங்கள் அப்படியே நிற்கிறார் கிருஷ்ணஜீ

அவரது உதடுகள் அசைகின்றன. வழக்கமாக அங்கு அவர் பாடும் அந்தச் சுலோகம் மெல்லிசையில் ஒலிக்கிறது. சத்திரத் திண்ணையில் துவண்டுகிடந்த ராமு திடுக்குற்று எழுந்து, கரங்களைக் குவித்துக்கொண்டு பிள்ளையாரை மானசீகமாக வேண்டுகிறான்.

கிருஷ்ணஜீ: (கனிவான குரலில்) விநாயகா, வினை தீர்ப்பவனே. கணேசா. கற்றோர்க்கு முன்சுழியே, ஆனைமுகத்தோனே, அடியார்க்கு அணிகலனே, ஆதரவு நல்கிடுவாய்! அடியேனை அணைத்திடுவாய் குருவே சரணம், திருவே சரணம்.

ராமு: சாமியாரே!

கிருஷ்ணஜீ: ராமு (அவனருகில் வந்து) இப்போது தான் புறப்படுகிறேன். படைத்தவன் விருப்பம் எதுவோ இன்று அதுநிறைவேறட்டும். ராமு! கடவுள் உன்னை உயிரோடு வைத்து தன்னை மனிதர்களுக்கு நினைவுபடுத்துகிறார். ம்... அவனது சிருஷ்டியின் விநோதங்கள்தான் என்ன? ஆமாம் ராமு! உன் தாய் தெய்வானை எங்கேயப்பா?

ராமு: யாருக்கோ புது ஓடுகள் கொஞ்சம் கொடுக்க வேணுமாம். அதுதான் வெள்ளனத்தோடு போயிற்ருங்கள் சாமி!

கிருஷ்: 'நாய்த்தோலென்றாலும் தாய்த்தோலாக' இருக்கவேண்டுமென்பார்கள். எவ்வளவு உண்மையான வாசகம். ம்... ராமு நான் இப்பொழுது செல்கிறேன், பிற்பொழுது இவ்விடம் வரும்பொழுது உனக்கு நான் தினமும் வழங்கும் ஆகாரத்துடன்தான் வருவேன். வருகிறேனப்பா. (போகிறார்)

ராமு: (இடைமறித்து) சாமியாரே! இன்று எங்கே போகிறீர்கள்?

கிருஷ்: (நின்று) தொடக்கம் எது? முடிவு? எது என்று அவன் சொல்லவில்லையப்பா முற்பொழுது தொடக்கம் தெரியவில்லையப்பனே, பிற்பொழுது இந்தக்கட்டை இங்கு வந்தால் தெரியும். அப்பொழுது கேள் சொல்கிறேன்.

ராமு: கொஞ்சம் நில்லுங்க சாமி. சாமி எங்கம்மாவை நினைச்சால், எனக்குத் துக்கமாக இருக்குசாமி. அது படுகிற கஷ்டமும், வேதனையும் எவ்வளவு. சாமி தினமும் ஓடு சுமந்து, சுமந்து ஓயாம வேலை செய்து ஓடாப் போயிற்றுதே சாமி இந்த உதவாத உடலையும் உயிரையும் வாழவைக்கிறதுக்காக, அது படுகிற கஷ்டத்தைப் பார்த்தா, சாமி — (விக்கி) எனக்கு முன்னமே அம்மா-?

கிருஷ்: செத்துப் போய் விடுவாளென்று பயப்படுகிறாயா?

ராமு: ஓம்- எனக்குப் பயமாயிருக்கு, வேறு யாருமே இந்த உலகத்தில் எனக்கில்லையே சாமி. சாமி நான் பேசுவதால்தானே மற்றவர்கள் மனுசனாக என்னை நினைக்கிறார்கள் இல்லை இந்தப் பூஞ்சை உடம்பைப் பார்த்து......

கிருஷ்: பார்த்து...?

ராமு: (குரல் கம்ம) சாமியாரே!

கிருஷ்: சொல்லேன் -அபூர்வப்பிராணி சொல்வார்கள் அப்படியென்றால் இந்த அபூர்வப் பிராணிக்கும் ஒரு தாய் இருந்து, அவளுக்கு நீ ஒரு பூரண மனிதனாக இருக்கிறாயே! அந்தவரையில் நீ கவலைப்படவே கூடாது. ராமு வினைப்பயன் இதுதான். அவன் சித்தமும் இதுதான். கவலைவேண்டாம். தொடக்கம் எது? முடிவு எது? இது நமக்குத் தெரியாது. இடையில் நடப்பதோ அதுவும் நமக்குப் புரியாது. விந்தைகள் நிறைந்த இந்தப் பிறவியை எண்ணிச் சிந்தையைக் குழப்பாதே. நிம்மதியாகத் தூங்கு. நான் போய்வருகிறேன். (போகிறார்)

(அவர் போவதையே பார்த்துக்கொண்டிருந்த ராமு சில நிமிஷம் கழித்து நீண்டதோர் பெருமூச்சை வெளியே விடுகிறான். பிள்ளையார் கோவிலை ஒருமுறை உற்றுநோக்கித் தன் இரு கரங்களையும் உயர்த்திக் கும்பிட்டுவிட்டு சத்திரத் திண்ணையை தட்டிப் படுத்துக் கொள்கிறான் ராமு.

தளர்நடையுடன் அங்கு வரும் கந்தானைக் கந்தப்பு நெற்றி வியர்வையை வழித்துவிட்டு பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டு ராமு படுத்திருக்கும் சத்திரத் திண்ணைக்கு வருகிறார் குழிவிழுந்த அவர் கண்கள் திண்ணையில் சுருண்டு கிடக்கும் ராமு மீது நிலைகுத்தி விடுகின்றது.

க. கந்தப்பு: பாவம்......!

(தெய்வானை வேகமாக வருகிறாள்)

தெய்: என்ன கந்தானை கந்தப்பு— என்ன அவனையே பார்த்துக்கொண்டு நிற்கிறாய்?

க. கந்த: உன்ர மகன் நல்ல நித்திரைபோல இருக்கு... ஆமா தெய்வானை வெள்ளனக் காலம நீ எங்கே போயிற்று வாறாய்?

தெய்வா: நம்ப கோவில் ஐயர் வீட்டுக்கு, புது ஓடுகள் நாலு வேணுமென்றார். அதுதான் வெள்ளனத் தோட கொண்டுபோய்க் குடுத்திட்டு வாறன்.

கந்த: நீ என்ன மாதிரி இருக்கவேண்டியனி. இப்படியெல்லாம் மாடாய் உழைக்கவேண்டுமென்று ...

தெய்: என்னங்க செய்கிறது. சோறு பொங்கணுமென்றால் உலை பொங்கித்தானே ஆகவேண்டும். தன்மானத்தோடு நாம வாழணுமென்றால் வேதனைகளையும் அனுபவிக்கத்தான் வேணும். ஆனாலும் இந்த வேதனையில இருக்கிற நிறைவு இருக்கே. அதை வேறு எதிலும் நான் கண்டிடுவன் என்றால், அது சுத்தப் பைத்தியக்காரத்தனம்தான்.

க கந்த: எடி தெய்வானை நீ இப்படிப் பேசிப் பேசி உண்மையிலேயே பைத்தியக்காரியாக்கிவிட்டாய் இல்லையென்றால் நீ ஏன் கோவில் சத்திரத்தில் வாழவேண்டும்? அவனோடு சேர்ந்து அவன்ர பேச்சைக் கேட்டிருந்தால்.

தெய். (ஆக்ரோஷமாக) அந்தப் பேச்சுப் பேசாதே கந்தப்பு: நீ அந்தப் பேச்சுப்பேசாதே. அவனைப்பற்றி நீ இன்னொருமுறை பேசவே கூடாது ஆமா.

க. கந்த: அவனிலை என்ன பிழையென்றுதான் நான் கேட்கிறேன்?

தெய்: இங்கேபார் கந்தப்பு, உங்களைப்போல மனுஷரெல்லாம் வாழ்க்கையை மேலாகப் பார்த்துச் சீவிக்கிறீங்க, என்னைக்காணும் போதும், இந்தக் கோவிலுக்கு அடிக்கடி நீ வரும் போதும், அவன் சொன்னதை வைச்சுக்கொண்டு இப்படிப் பேசுகிறீயே. பதினலு வருஷத்துக்கு முந்தி அவன் செய்தது சொன்னது, நடந்தது இவைகளைப் பற்றி உனக்குத் தெரியுமா?- "ம்"... (வருந்தத்தோடு) அவன் எங்களுக்குச் செய்ததைப்பற்றி நான் சொன்னால்? கந்தப்புக்கந்தானை நான் சொன்னால்-?

க கந்த: ஒருக்கா சொல்லேன் பார்ப்போம்-?

தெய்வா: 'ஜோவ்'... கந்தானை, நம்ம பல்லைத் தோண்டி இதை மணந்து பார் என்று அடுத்தவனைக் கேட்கிறதுக்கு, நான் அவனைப்போல அவளவு மானரோஷம் கெட்டவனில்லைத் தெரியுமா உனக்கு?

க. கந்த: என்னதான் அவன் உனக்குச் செய்து போட்டான்-!

தெய்வா: அவன் செய்தது ஒன்றையும், நான் உனக்கு சொல்லப்போவதில்லை ஆனா ஒன்றைமாத்திரம் சொல்லிப்போடுகிறேன். வடிவாகக் கேளு- என்னைப் பெத்தவங்க கண்ணைமூடிட்டாங்கள். கட்டின புருஷனும் இரண்டு பிள்ளைகளோடு தனியாக என்னை விட்டிட்டு மண்டையைப் போட்ட பின்பு- இவனுக்காக, இவன் வாழ்வுக்காக கூலிக்கு ஓடு சுமக்கத் தொடங்கி, 'கல்லிலாச் சோறும், முள்ளிலா மீனும்'' கொடுத்து வளர்த்து, அவனைப் படிப்பிச்சேன். பாரு- அது ஒன்றை மறந்து போறானே. அவன் ஒரு மனுஷனா-? இல்லைக் கேட்கிறேன் அவன் ஒரு மனுஷனா கந்தானை இப்ப சொல்லு பார்ப்போம்,?

க. கந்த. அதெல்லாம் பழைய கதை தெரிஞ்சதுதானே! என்றாலும் இப்ப பாரு அவன் சொன்னதானை நியாயம் இருக்கத்தானே செய்யுது.

தெய்வா: நிறுத்தையா பேச்சை- பெரிய நியாயத்தைக் கண்டிட்டாரு. பெரிய நியாயத்தை- அவனிருக்கிறானே பாரு சண்முகம் அவன் என் தம்பி. இங்கே பார் அடிச்சுப்போட்ட பாம்பாட்டம் சுருண்டு கிடக்குதே "ராமு" இது நான் சுமந்து பெத்த பிள்ளை. கூன் குருடு முடமானாலும் இவன் என்ர பிள்ளைதான்.

க. கந்த: காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்பார்கள்.

(12-ம் பக்கம் பார்க்க)

ஈழத்தின் பண்பை நாட்ட ஈழநாடு
தமிழக தனத்தை ஈட்ட தம்பி அன் கோ.

"சிறுதுளி பெருவெள்ளம்" "நூற்றுக்கு மேல் ஊற்று"

தம்பி அன் கோ.,

நவீன சேமிப்பில்
ரூபா நூறு நூறுகச் சேர்த்து
ரூபா ஆயிரம் ஆயிரமாக எடுக்கலாம்.

மாதம் ரூபா 100 வீதம்

| | | | | |
|---|---|---|---|---|
| 12 மாதம் | ரூபா 1200/- | கட்டினல் | ரூ. 1280/- | வாங்கலாம் |
| 24 ,, | ரூபா 2400/- | ,, | ரூ. 2670/- | ,, |
| 36 ,, | ரூபா 3600/- | ,, | ரூ 4200/- | ,, |
| 48 ,, | ரூபா 4800/- | ,, | ரூ. 5950/- | ,, |
| 60 ,, | ரூபா 6000/- | ,, | ரூ. 7600/- | ,, |
| 72 ,, | ரூபா 7200/- | ,, | ரூ. 9500/- | , |
| 75 ,, | ரூபா 7500/- | ,, | ரூ. 10000/- | ,, |

முக்கியகுறிப்பு:
இச்சேமிப்பில் எப்பொழுதும் சேரலாம்
எப்பொழுதும் லாபத்துடன் எடுக்கலாம்

மறுவிபரங்கட்கு:

தம்பி அன் கோ.,

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா எப்போ வருவாள்?

— எம். கே. ராஜன் —

(சென்றவாரத் தொடர்ச்சி)

சேர்த்து வைத்திருந்த மிகச்சொற்ப பணமும் அப்பாவின் வைத்தியத்திற்காகக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்தது.

லில்லியக்காவை அம்மா சிஸ்சரிடம்தையலுக்குஅனுப்பினா. எஸ்தர் அக்கா எப்போதும் அருகிலேயே இருந்து அப்பாவைக் கவனித்துக்கொண்டாள்.

அப்பாவுக்குக் குணம்காணவில்லை. இருமல் கூடிக்கொண்டே இருந்தது. மீண்டும் வயிற்றுப் போராட்டம் தலைவிரித்தாடத் தொடங்கியது.

ஊரில் அப்பாவின் இருமலைப்பற்றியே கதைத்தார்கள்; எங்களையும் ஒருமாதிரியாகப் பார்க்கத் தொடங்கினார்கள். இதையெல்லாம் சகிக்க முடியாமல், நாங்கள் தடுத்ததையும் மீறித் தன் நோய் எங்களுக்கும் பற்றிவிடும் என்று அப்பா ஆஸ்பத்திரியில் போய் படுத்துவிட்டார்.

பெரியக்காவுக்காவது தன்னால் ஒருவழிபண்ண முடியவில்லையே என்றுதான் அடிக்கடி ஏங்கினார். நானும் அம்மாவும் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தபோது—'கோவிலுக்கு வரும் பையன் யாராவது விரும்பினாலும் லில்லிக்குச் செய்துவிடலாம், இல்லையா?' என்று கேட்டார். கான்- வென்டுக்கே கூட போகவேண்டாமென்ற அப்பாவின் மனம் இப்படியும் மாறும் காலம் வந்ததே என நினைத்தபோது எனக்கு அழுகை அழுகையாக வந்தது. அம்மாவின் கண்களும் கலங்கி விட்டன. நான் நினைத்ததைப்போல நினைத்தே அம்மாவும் அழுதிருக்க வேண்டும்.

எங்கள் யாருக்கும் என்றுமே கடிதம் வந்தது கிடையாது. அன்றுதான் முதற் தடவையாக ஒருதபாற்சேவகன் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறான். அவன் கொண்டுவந்தது ஒருதந்தி. அதை வாங்க நான் எவ்வளவு ஆவலோடு ஓடினேன். அதை என்னிடம் தந்தால் என்னவாம்? ஆஸ்பத்திரியிலிருந்து வந்தால் அம்மாவிடம்தான் கொடுக்கவேண்டுமாக்கும்? அந்தத் தந்தியை அம்மா பிரித்துப் பார்த்தா. எங்கள் தைரியம், எங்கள் நம்பிக்கை, எங்கள்ஆறுதல், எங்கள் வாழ்க்கை எல்லாவற்றையுமே தன்னுள் சமாதி செய்துகொண்டு அது வந்திருந்தது. எங்களைக் காயப்படுத்தவே வந்ததுதான். கண்ணீர்வற்றி ரத்தமாகுமட்டும் அழுதோம். ஆனந்தமும் நிம்மதியுந்தான் எங்களுக்குச் சொந்தமல்லாததாய் இருக்கலாம்; ஆனால் உடலும், உயிரும்தந்த அப்பாவுமா எங்களுக்கு அப்படியாகவேண்டும்.

கோவிலுக்குக் கொண்டு போனோம். அங்கே வேதக்காரருக்கான மயானத்தில் அப்பாவுக்கு இடங்கொடுக்க முடியாதென்றார்கள். அப்பா உண்மையான கத்தோலிக்கனாக வாழவில்லையாம். கிறிஸ்தவ சட்ட திட்டங்களையும், திருச்சபைக் கட்டளைகளையும், தேவ திரவிய அனுமானங்களையும் அவர் செவ்வனே அனுசரிக்கவில்லையாம். அப்பா விரக்தியோடு அடிக்கடி ஒரு பழமொழி சொல்வார் - ஒரு த்கப்பன் கோவணத்தோடு கிடந்தாலும், மகன் இழுத்து மூடுங்களப்பா என்றானும்'-என்று. அப்படித்தானிருந்தது இந்த நிலையும். அப்பா ஒரு செல்வச்சீமானாக இருந்திருந்தால் கோவிலில்லா ஊரில் குடியிருந்திருக்கமாட்டார், கோவிலிலேயே குடியேறியிருப்பார்தான். இராம கிருஷ்ணர் என்று ஒருமகான் இருந்தாராம், அவர் கடவுளோடேயே பேசியிருக்கிறாராம். அந்த ஞானியே 'வயிறு காய்பவனுக்குத் தெய்வம் இல்லை' என்று சொல்லியிருக்கிறாரே. பிரின்சிபால்தான் ஆண்டுவிழாவில் சொன்னார். அப்படியிருக்க எங்களின் வயிறுமட்டும் எம்மாத்திரம்?

0 0 0

எங்கள் மூவருக்காகவும் அம்மா சிரிக்கவேண்டியிருந்தது. சிரிப்பதற்கு நேரம்தானிருக்கவில்லை.

லில்லியக்கா தான் சிஷ்டராகப் போவதாக கூறினா. முதலில் அம்மா தடுத்தா. தான் நன்றாக யோசித்துவிட்டுத்தான்- மிகவும் விரும்பித்தான் போகப் போவதாகச் சொன்னா. அம்மா வற்புறுத்தவில்லை. தடையேதும் சொல்லாமல் சம்மதித்து விட்டா. அதைப்பற்றி விசாரித்தவர்களுக்கெல்லாம் 'கர்த்தரின் அழைப்பிருந்து லில்லி சிஷ்டராகப்போறா. அப்படியான வாழ்க்கைக்கு எவ்வளவு பாக்கியம் செய்திருக்கவேண்டும்' என்று அம்மா சொன்னா. சிலரிடம் தானே வலிந்துபோய்க்கூட 'லில்லி சிஷ்டராகப்போறா. கர்த்தர் அவளை அழைக்கிறார். அவள் பாக்கியம் பெற்று ஞானவாழ்வுகாணம் போறா' என்றெல்லாப் சொல்வா, அந்த வேளையில் அவவின் விழிகளை மறைக்கப் பொங்கிவரும் கண்ணீரை எதிர்நோக்க எங்களுக்குத் திராணியிருந்ததில்லை, 'என் மகளைக் கரைசேர்க்க வழியில்லையே'-என அங்கலாய்ப்பதைவிட இப்படிச் சொல்வதால் அம்மாவின் மனம் ஆறுதலடைந்தது.

அக்காவைக் கான்வென்டில் விட்டுவரச் சென்றோம். அம்மா, நான், சின்னக்கா எல்லோருமாகத்தான் சென்றோம். அங்கிருந்த 'மதர் மார்' எங்களை மலர்ச்சியோடு வரவேற்றார்கள், சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம், பிறகு பிடித்தமான ஆடையை அணிந்து கொள்ளச் சொன்னார்கள். அக்காவிடம், அவ தன் பெட்டியோடு உள்ளே போய்விட்டு அந்த பூப்போட்ட சாறியைக் கட்டிக்கொண்டு வந்தா, பெரியக்காவிடமிருந்த நல்லசாறி அது ஒன்றுதான், அதிலிருந்த கிழிசல்களை வெளியே தெரியாதவாறு அம்மா தைத்துக் கொடுத்திருந்தா. அது எப்போது வாங்கப்பட்டது என்பதுகூட மறந்துவிட்டது, அக்கா தாவணி அணியும் காலத்தில் அம்மாவுக்கு அப்பா வாங்கிக்கொடுத்தது என்பதுமட்டும் தெரியும். அதே சேலையைக் கட்டிக் கொண்டுதான் எங்களின் ஞாபகத்துக்காக அக்கா ஒரு புகைப்படம் எடுத்திருந்தா ஒருகிழமைக்கு முன்பு. அதற்கான பணத்தை முதலாளியம்மாதான் கொடுத்தார்கள்.

அக்கா எங்களோடு வாங்கில் உட்கார்ந்துகொண்டாள். அம்மா அக்காவையே பார்த்துக்கொண்டிருந்தா. அம்மா எழுந்து வெளியே போனா. நானும் கூட அவவோடு சென்றேன். அம்மா முற்றத்திலிருந்த ரோசாச்செடியருகேசென்றா. அந்தச் செடிநிறைய முட்களிருந்தன. கை வைத்தால் நிச்சயம் முட்கள் கிழித்துவிடும். அந்தச் செடியின் உச்சியில் அழகான மூன்று ரோஜாக்களிருந்தன. அதில் ஒரு மலரை அம்மா மிகலாவகமாகப் பறித்தா. அத்தனை முட்களையும் பொருட்படுத்தாமல் எப்படித்தான் அந்தப்பூவைப் பறித்தாளோ? அதைகொண்டுவந்து அக்காவுக்குச் சூட்டிவிட்டு அவவின் முகத்தை ஒரு அகல் விளக்கை ஏந்துவதைப் போல அணைத்தவாறு நெற்றியில் முத்தமிட்டா. அக்காவின்கண்கள்கலங்கிவிட்டன, அதை அம்மா துடைத்தபோது அந்தக் கண்ணீரில் இரத்தம் கலந்திருந்தது. எல்லோரும் திகைத்துவிட்டோம், ரோஜாமுள் விரலில் கீறிவிட்டது என அப்போதுதான் அம்மா சொன்னா.

அக்காவை ஒரு மதர் உள்ளேஅழைத்துக்கொண்டு போனா, சிறிது நேரத்தில் எங்கள் இதயங்களில் ஆணி அறைவதைப்போல அக்கா வந்தாள், அக்கா சிரித்துக் கொண்டேதான் வந்தாள். அவளுடலை நீண்ட ஒரங்கி போர்த்திருந்தது. அது தொளதொளவென்று விரல்கள்வரை நீண்டிருந்தது. அம்மா ஸ்தம்பித்து நின்று விட்டா. சின்னக்கா முகத்தைப் பொத்திகொண்டு விம்மினாள், என்னால் தாங்க முடியவில்லை. ஓடிச் சென்று அக்காவைக் கட்டிக்கொண்டேன், 'அக்கா! வா, அக்கா வீட்டுக்குப் போவோம்' என்று கையைப் பிடித்து இழுத்தேன்.

அப்போது என் தலையுச்சியில் இரு துளிகள் இளஞ்சூட்டோடு விழுந்தன. ஞானஸ்நானத்தின்போது தலையிற்தான் தண்ணீர் வார்ப்பார்கள் நிமிர்ந்து அக்காவின் கண்களைப் பார்த்தேன். அவவின் முகம் ஸ்பிரீத்துசாந்து ஒரு மாடப்புறு உருவில் இறங்கிவருவதைப்போல என்னை நோக்கியிருந்தது. 'வா அக்கா' என்றேன் அவவின் கை தன் நெஞ்சிற் தொங்கிய சிலுவையைப் பற்றிக்கொண்டது. [illegible] ஆதரவாகக் கோதிவிட்டா. அவவை விட்டுவிட்டு பிரியமுடியாமல் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு புறப்பட்டபோது அந்தப் பூப்போட்ட சேலையை சின்னக்காவுக்கே கொடுத்தா.

பெரியக்காவின் அந்தக் கோலத்தைக் கண்டது முதல் ஒரு புதிய உணர்வு என்னுள் பெருக்கெடுத்தது. அந்த உணர்வு அடிக்கடி எங்களுக்காக உழைத்துக் கொண்டேயிருந்த அப்பாவின் திருவுருவமாக விசுவரூபம் எடுத்து நிற்கும்.

எனக்காகவும்சின்னக்காவுக்காகவும் இப்போது அம்மா அதிக பொறுப்புக்களைச் சுமந்து கொண்டா. அதனால் நான் படிப்பை விட்டுவிட்டு வேலைக்குப் போகிறேன் என்றேன். 'இதற்காகத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டேன்' என்று சினந்தா. 'இப்போ என்ன நடந்து விட்டது நீ வேலைக்குப் போக......இனி இப்படியான கதை எடுத்தாயோ பிறகு...? என்றவாறு போய்விட்டா. எனக்கு அப்படியான கவலைகளே இருக்கக் கூடாதாம். அப்போதான் திறமையாகப் படிக்கலாமாம். எனக்கு மட்டும் படித்துப் பட்டம்பெற ஆசையில்லையா என்ன?

பக்கத்திலிருந்த கடைக்குக் கொடுப்பதற்காக அம்மா அதிகாலையிலேயே எழுந்து அப்பம் சுடத் தொடங்கினா. அம்மாவைப் படுத்திருக்கச்சொல்லிவிட்டு அந்த வேலையைச் சின்னக்கா நாலு மணிக்கெல்லாம் எழுந்து செய்வாள். அதைக் கூட பள்ளிக்குப் போகும் போது கொண்டு போய்க் கொடுக்கிறேன் என்றால் விடமாட்டா. தானேதான் கொண்டுபோவா. என் எண்ணங்கள் குடும்பத்துக்குள்ளே வரக்கூடாது என்றுதான் அப்படியெல்லாம் கவனமாயிருந்தா. ஆனால் எனக்கென்னவோ கரும்பலகையிலிருந்த எழுத்துக்களிற் கூட அம்மாவின் மெலிந்த உருவமும், சின்னக்காவின் நைந்த பார்வையுமே பிரதிபலித்தன.

ஒருநாள் மழையில் நன்றாக நனைந்துவிட்ட அம்மாவுக்குக் காய்ச்சலும் இருமலும் வந்தது. காய்ச்சல் மட்டும் விட்டு விட்டது. அடிக்கடி இருமலிருந்தது. அதைக்கண்டு அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் பலவிதமாகவும் கதை கட்டி விட்டார்கள். ஆஸ்பத்திரியிற் போய்ப் படுத்திருக்கலாம். நானும் அக்காவும் இருக்கின்றோமே. அதனால் போகவில்லை. இருமல் கூடிற்று.

முதலாளி வீட்டில் அம்மாவை வேலைக்கு வரவேண்டாம் என நிறுத்தி விட்டார்கள். அம்மாவுக்குச் க்ஷயரோகமாம். பொல்லாத வியாதியாம். தங்களுக்கும் தொற்றிவிடுமாம். அவர்களின் வீட்டுப்பக்கம் கூட வரக்கூடாதென்று சொல்லி விட்டார்கள். எனக்கும் அக்காவுக்கும் எல்லாம் சூனியமாக இருந்தது.

வேறு இரண்டு கடைகளையும் வாடிக்கையாகப்பேசி அப்பம் சுட்டு விற்கத்தொடங்கினா. அவர்களும் பிறகு அம்மாவுக்குக் கசம் என்று அப்பம் வேண்டாம் என்றார்கள். இருமல் அதிகரித்தது. உடலும் மெலிந்தது.

அம்மா ஒவ்வொரு வீடாகச் சென்று மா இடித்துக் கொடுத்தும், நெல் குற்றியும், வேறு எடுபிடி வேலைகள் செய்தும் மீண்டும் எங்களுக்காக உழைத்தாள். அம்மாவைப்பற்றிக் கேள்விப்பட்டு எந்த வீட்டுக்காரரும் அம்மாவை வேலைக் கேற்கவிரும்பவில்லை.

அம்மாவுக்குக் கசம் என்று பள்ளிக்கூடத்திலும் கதைத்தார்கள் சில ஆசிரியர்கள் என்னோடு முகம் கொடுத்துப்பேசவே விரும்பவில்லை. எனக்கு மிகவும் பிரியமான நண்பர்களேகூட என்னை 'டி- பீ — டி-பீ' என்று கேலி செய்தார்கள்.

அம்மா தொடர்ந்து எங்களுக்காகக் கஷ்டப்பட்டாள் ஏதோ ஒரு பறவை இருக்கிறதாம். உணவுகிடைக்காவிட்டால் அது தன் நெஞ்சைக்கொத்தி இரத்தத்தைத் தன் குஞ்சுகளுக்குக் கொடுக்குமாம். அம்மாவும் அப்படித்தான். எங்களின் பசியைப் போக்குவதற்காக இரத்தக்கட்டிகளைத் துப்பத் தொடங்கினாள்.

நான் ஒரு ஒட்டலிலாவது வேலைக்குப் போகப்போகிறேன் என்றேன். முரட்டுத்தனமாகப் பிடிவாதம் செய்தேன். சம்மதிக்காவிட்டால் எங்காவது ஒடிப்போயாவனென்றேன். அப்போது என் கன்னங்களிற் சரமாரியாக அடிகள் விழுந்தன. நான் தேம்பித் தேம்பி அழுதேன். அக்கா ஒடிவந்து 'அவனை வேலைக்கனுப்பினால்தான் என்னவாம், கொஞ்சம் நிம்மதியாகவாவது இருக்கலாமே' என்றாள்.

இதைச்சிறிதும் எதிர்பாராததைப்போல அம்மா அக்காவை முறைத்துப் பார்த்தா. கடுமையாகத் திட்டினா. என்னைப் பற்றிப் பேசக்கூடாதென்றா. 'என் உயிரைக் கொடுத்தாவது ஏ. சே. ஸி. வரை படிப்பிப்பேன் -என்றா.

அதன் பிறகு அம்மா எங்கெங்கோவெல்லாம் வேலைக்குப் போய் வந்தா. நானும் சிக்கிரம் படித்து ஒரு உத்தியோகம் பார்த்து அம்மாவுக்கு நிறைய டானிக்குகளும், ஊசி மருந்துகளும் வாங்கிக் கொடுக்கவேண்டும்; சேலை, ரவிக்கை எல்லாம் புதிது புதிதாய் வாங்கிக் கொடுக்கவேண்டும் எனத் தீர்மானித்தேன். நான் சம்பளம் வாங்கி சின்னக்காவுக்கும் கேட்டதையெல்லாம் வாங்கிக்கொடுப்பேன். அவவுக்கு எல்லாம் நான்தானே- என்றெல்லாம் உறுதி செய்துகொண்டேன். இதை பள்ளித்தோழர்களிடம்கூடக் கூறினேன். அம்மாவுக்குக் கைநிறைய தங்கக் காப்பு, தோடு எல்லாம் செய்து கொடுப்பேன் என்றேன். அப்படிச் சொன்னபோது சுந்தரம், புருசன் செத்தால் அதெல்லாம் அணியக்கூடாதே என்றான். என்னுடைய பணத்தில்நான் வாங்கிக் கொடுப்பேன். போட்டுக் கொண்டால் என்னவாம் என்றேன். எல்லாரும் ஏசிப்பேசுவார்களாம். ஏசினால் தெரியும்; ஏசுபவர்களைக் கழுத்தைப் பிடித்து நெரித்துவிடமாட்டேனா என்ன என்று சவால் விட்டுவிட்டேன்.

அம்மா சின்னக்காவைப் பற்றி அடிக்கடி யோசித்தா. நித்திரையிற் புலம்பினா.

அந்த வருடம் நத்தார் வந்தது. அம்மா எவ்வளவோ கஷ்டப்பட்டும் எங்களுக்குப் புத்தாடைகள் வாங்கமுடியவில்லை. யேசுபாலன் நள்ளிரவிற் பிறக்கப் போகின்றார். தேவன் ஏன் இரவில் பிறக்கவேண்டும்? எங்களைப்போன்ற ஏழைகள் கோவிலுக்கு வரும்போது கந்தலாடைகளின் பீத்தல்கள் யாருக்கும் தெரியவேண்டாம் என்பதனால்தானா?-நத்

[10ம் பக்கம் பார்க்க]

'ஈழநாடு' பத்தாண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட இலக்கியப்போட்டியில் பாராட்டுப்பெற்ற சிறுகதைகளில் இதுவுமொன்று.'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பட கதாநாயகிகள் "கெடுபிடி"

தமிழ்ப்படவுலகில் கதாநாயகிகளின் 'கெடுபிடி' லட்சக்கணக்கில் பணத்தைக் கொட்டி படம் எடுக்கும் தயாரிப்பாளர்களுக்குப் போதும் போதும்' என்ருகிவிட்டது!

வால்பிடித்து, கால் பிடித்து, எப்படி எப்படியெல்லாமோ திரைக்குள் நுழைந்து, இன்று முன்னணிக்கு வந்துவிட்ட இன்றைய முன்னணி நடிகைகள் 'பழையகதை'யை மறந்து படத்துக்கு ஒழுங்காக 'கால்ஷீட்' கொடுக்காது, தம்மை நம்பிப் படம் எடுக்கும் தயாரிப்பாளர்களை ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிருர்கள். லட்சக்கணக்கான நோட்டுக்களை விரயமாக்கி, படத்தைப் பிடிக்க ஆரம்பித்துவிட்டு, நடிகைகளுக்குப் பணத்தையும் கொடுத்துவிட்டு கடைசியில் அவர்களின் வீடுகளுக்கு அலைந்து கொண்டிருக்கிருர்கள்.





## ஜெயலலிதா

ஜெயலலிதாவை நம்பி படம் எடுக்கும் சில தயாரிப்பாளர் படும் இதே கதியாகத்தானிருக்கிறது. எம். ஜி ஆருடன் கதாநாயகி நடிக்கும் படங்களைத் தவிர்ந்த மற்றைய படங்களை நேரகாலத்துக்கு முடித்துக் கொடுக்காமல், தயாரிப்பாளர்களை அலையவைத்துக் கொண்டிருக்கிருராம். எம். ஜி. ஆர். இல்லாமல் தனித்து இவரைக் கணா முடியாமல் இருக்கிறது. எம். ஜி. ஆர். இருக்கும் இடத்தில்தான் இவர் இருக்கிருர். அத்துடன் எம். ஜி.ஆர். 'ரேட்' இப்போது 8 லட்சம் ருபாயாக உயர்ந்துவிட்டதால், ஜெயலலிதா தனது 'ரேட்'டை ஒரு லட்சத்துக்கு மேலாக உயர்த்திவிட்டாராம்.

## பத்மினி

சினிமாவுக்கு முழுக்குப் போடப்போவதாகக் கூறிக் கொண்டு சென்று, பின்னர் மீண்டும் திரையுலகுக்குள் நுழைந்த திருவாங்கூர் சகோதரிகளில் ஒருவரான பத்மினியை நம்பி கதாநாயகியாகப் போட்டவர்கள் பாடுகூட திண்டாட்டமாகத்தானிருக்கிறதாம். இந்தி படங்களில் வேறு இவர் நடிப்பதால், தமிழ்ப் படங்களை சரிவர முடித்துக் கொடுக்காமல் பம்பாய்க்குப் பறந்து திரிகிருராம். அத்துடன் நடன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிருர். இதனுல் இவரை நம்பிய தயாரிப்பாளர்கள் தவிக்கிருர்கள்.

## தேவி

கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவியை நம்பி கதாநாயகியாகப் போட்டுப் படமெடுப்பவர்கள் பெங்களூருக்குப் 'பிளேன்' டிக்கட் எடுப்பதிலும் 'டிரங்கோல்' சார்ஜ் கொடுப்பதிலும் போதுமென்ருகிவிடுகிறது. எம். ஜி. ஆருடன் இவர் ஜோடியாக நடித்தபோது கொடுத்த 'ரேட்' கொடுக்க வேண்டிய அவசியம் இப்போது இல்லாவிட்டாலும், இவரை 'புக்' பண்ணியவர்களை இவர் திண்டாட வைத்துவிடுகிருரே!

## விஜயா

சொந்த விமானம்வைத்து பறந்துதிரியும் கோடீஸ்வரர் வேலாயுதத்தை இவர் திருமணம் செய்தபிறகு ஒழுங்காகக் குறித்த நேரத்தில் சூட்டிங்குக்கு வருவதில்லையாம் வேலாயுதம்'பினன்ஸ்' பண்ணும் படங்களில் மட்டும் குறித்த நேரத்தில் நடிப்பார். அத்துடன் இப்போது சொந்தப் படத்திலும் நடிக்கத்தொடங்கிவிட்டாரல்லவா? அத்துடன் இப்போது விஜயா ஊதவும் தொடங்கிவிட்டார்; முன்னைய கவர்ச்சியையும் இழக்க ஆரம்பித்துவிட்டார்,

சௌகார், விஜயகுமாரி போன்றவர்கள் குறித்த நேரத்தில் படங்களில் நடிக்கிருர்கள். ஆயினும் இவர்களை கதாநாயகிகளாகப் போட்டு படத்தை எடுக்க, தயாரிப்பாளர் விரும்புகிருர்களில்லை, வாணிஸ்ரீ, லக்சுமி, ஜெயந்தி போன்ற புதிய முகங்களுக்கு இப்போது செல்வாக்கு ஏற்படத் தொடங்கியுள்ளது.

முன்னணி நடிகைகளின் 'கெடுபிடி'களைத் தவிர்க்க. இப்போது புதிய படங்களை எடுக்கும் தயாரிப்பாளர்கள் புதுமுகங்களைத் தேடித்திரிகிருர்கள்; இந்தி நடிகைகளையும் விரும்புகிருர்கள்.

-விசேஷ நிருபர்.

# வில்லிசையில் பக்திச்சுவை தந்த அச்சுவேலி காண்டீபன் கலைக்குழு

வில்லுப்பாட்டு ஒரு தனிக்கலை. பல கலையும் பக்குவத்தோடு சேர்ந்த ஒரு பண்புக் கலையாக அது விளங்குகின்றது. வில்லிசைக் கலைஞர் ஒருவருக்குப் பாராட்டு வர வேண்டும்; நடிப்புத் திறனும் தக்க அளவுக்கு இருத்தல் வேண்டும்; இவற்ருேடு புலமையும் நிரம்பப் பெற்றிருத்தல் வேண்டும்.

இவையாவும் கைவரப் பெற்ற கலைஞர்கள் பலர் அச்சுவேலி காண்டீபன் கலைக்குழுவில் காணப்படுகின்றனர். நாவற்காடு காட்டுமலைக் கந்தசுவாமி கோவிலில் இக் கலைக்குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியொன்று அண்மையில் நடைபெற்றது. செல்வன் எஸ். விவேகானந்தன் தலைமையில் கலைஞர்கள் எஸ். செல்வநாயகம், எஸ். சிவசாமி, எம். சுந்தரலிங்கம், எம். எஸ். இரகுபதி, வி. தங்கமணி எம். இராசையா ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றினர்.

'திருநீலகண்டர்' கதை யாவரும் அறிந்த கதை. ஆயினும் முற்றிலும் புதிய தொரு கதையைக் கேட்பதுபோன்ற ஓர் உணர்வைக் கதை சொல்லும் விதத்தால் கலைஞர்கள் ஏற்படுத்தி விட்டனர். ஆர்வத்தோடும் அமைதியோடும் உற்றுக் கேட்டிருந்த பெருங் கூட்டம் இதற்குச் சான்று பகர்ந்தது.

## எடுப்பான குரல்

அன்பர் விவேகானந்தனின் ஆற்றலைச் சிறப்பாகக் குறிப்பிடல் வேண்டும். உணர்ச்சி பாவத்தோடும் நடிப்புத் தொனியோடும் அவர் கதைசொன்னவிதமே தனி. கேட்பதற்குச் சுவையாகப் பாடும் விவேகானந்தனின் எடுப்பான குரலும் நிகழ்ச்சியின் தரத்தை உயர்த்தி விட்டது.

பக்திச்சுவை நிறைந்த கதைப்போக்கு. ஏற்ருற் போல் பண்பு வாய்ந்த பகடிகள் கதை முழுவதும் இழையோடியிருந்தன. இப்பங்கை திருவாளர்கள் எஸ். செல்வநாயகமும் எஸ். சிவசாமியும் நயமுறச் செய்தனர்.

## கலாவிநோதனின் நல்ல பயிற்சி

விற்குடம், உடுக்கிசை, ஆர்மோனியம், மிருதங்கம், ஆகியனவும் அருமையாக இருந்தன. மொத்தத்தில் இக்கலைஞர்கள் புதிதாக அரங்கிற்கு வந்தவர்கள் போன்று காணப்படவேயில்லை. அனுபவம் வாய்ந்த வில்லிசைக் கலைஞர்கள் போன்று காணப்பட்டனர். இது அவர்கள் மேற்கொண்ட பயிற்சிகளை நன்கு காட்டுகின்றது. இந்த இடத்தில்தான் காண்டீபன் கலைக்குழு வில்லிசை இயக்குநராக விளங்கும் கலாவிநோதன் திரு. கே. என். கணபதிப்பிள்ளை பாராட்டைப் பெறுகிருர். கலை நுணுக்கங்களையும் பொருத்தமான பாணியையும் அழகுறச் சொல்லிக்கொடுத்து நன்கு தன் சீடர்களைப் பயிற்றுவித்திருக்கிருர் அவர். திரு- கணபதிப்பிள்ளை நன்கு பிரபல்யமான வில்லிசைக் கலைஞர். புகழ் பெற்ற கலைமிர்கள் தம் கலைத்துறை நுணுக்கங்களைச் சீடர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதில்லை என்ற ஒரு பொதுவான குறை தமிழருக்கே உரியதாகிவிட்டது. ஆனுல் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் இதற்கு விதிவிலக்கு. மனம் வைத்துப் பழக்கியிருக்கின்ருர்.

காண்டீபன் கலைக்குழுவினருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. ஆற்றல் உள்ளவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் புறக்கணித்ததில்லை. புறக்கணிக்கவும் முடியாது. வில்லிசைக் கலை இவர்களால் மேலும் [illegible] உறுதி.

கவிஞர் வி. கந்தவனம்



நாவற்காடு காட்டுமலைக்கந்தசாமி கோயில் முன்றலில் அச்சுவேலி காண்டீபன் கலைக்குழுவின் வில்லுப்பாட்டு அரங்கேற்றம் நடைபெற்றபோதுஎடுக்கப்பட்டபடம்.




தயாரிப்பு

- மேகலா

ஈழத்து சிங்கள திரையுலகில் ஒளிவிடும் நட்சத்திரமான

**காமினி பொன்சேகா**

கலையரங்கத்துக்கு அளித்த விசேஷ பேட்டி விரைவில் வெளியாகும்.

## ஜோதிலட்சுமி பாம்பு வளர்க்கிருர்

நடிகை ஜோதிலட்சுமி நல்ல பாம்பொன்றை வளர்த்து வருகிருர். ஒவ்வொரு புதன்கிழமையும் அதற்குப் பாலும் முட்டையும் கொடுத்து வருகிருர். வீட்டில் யாரும் இல்லாதசமயத்தில் இந்தப்பாம்புவீட்டு வாசலில் காவல் செய்கிறது. ''பத்தாள் அம்மா'' என்று இந்தப்பாம்பை அவர் செல்லமாக அழைக்கிருர்.



இலங்கையில் தயாராகி யாழ்ப்பாணம் உட்பட இருபத்திரண்டு தியேட்டர்களில் இப்போது ஓடிக் கொண்டிருக்கும் 'பாராவலலு' என்ற சிங்களப் படத்தில் வில்லனுகத்தோன்றி சக்கை போடு போடுகிருர் இந்த சுதாஸ்! திரையுலகுக்கு இவர் புதுமுகமானுலும் அருமையாக நடித்திருக்கிருர். தமிழ்நடிகர் ரி. நமசிவாயமும் (ஜயகாந்த்) இப்படத்தில் நடித்திருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனதில் பக்தியால் கோயில் கட்டுங்கள்

## காலம் வந்தது

(அப்பச்சி மகாலிங்கம்)

ரவீந்திரநாத் தாகூரின் 'உபகுப்தா' என்ற கவிதையின் ஆங்கிலப் பிரதியைத் தழுவிய கவிதை)

(மதுரை நகரில் ஒரு இரவு)

ஒளி விளக்கு எதுவும் இல்லை
ஒருகதவும் திறந்து இல்லை
மழைமேகம் விண்மீனை
மறைத்து நின்ற அவ்விரவில்,
வழுவற்ற தவ நெறியில்
வாழ்ந்து வரும் உபகுப்தன்,
புழுதியிலே, மதுரை நகர்ப்
புறத்தினிலே தூங்குகிறான்.

இளந் துறவியின் தூக்கம்
இடை நடுவில் 'குழம்பியது
சலங்கையொலி' கேட்டுச்
சட்டென் றெழுகையில், வான்
பிளந்துவரு மின்னலொரு
பெண்ணுருவம் கொண்டதென
இளம்வயது ஒரு மங்கை
எதிர்நின்று புன்னகைத்தாள்.

வெளிர்நீல மேலங்கி
மெருகூட்ட, அந்தஇளம்
தளிர்மேனியாள் கையில்
தாங்கி நின்ற தீபத்தின்
ஒளியினிலே, துறவிமுகம்
உரமான தவ நெறியால்
அழகாகத் தெரிவதனை
அவள் கண்டு, மெய்மறந்தாள்.

''புழுதி நிறைந்த இந்தப்
பூமியிலா தூங்குவது?
எழுக! இளந்துறவீ!
என்னோடு வாருங்கள்''
தொழுது அவள் கேட்கத்
தூயவனும் சொல்லுகிறான் ''இப்
பொழுது உன் பாதையிலே
போய் விடுவாய் நிற்காதே.

''காலம் வரும் ஒருநாள்
கட்டாயம் நான் வருவேன்''
நூலிடையாள் அது கேட்டு
நூபுரங்கள் தாம் புலம்ப
வேல் விழியில் நீர்தேக்கி
வேதனையாய் போகையிலே
ஓலமிடுவது போல
உறுமிற்று வானந்தான்.

(நாட்கள் பல சென்றன. வசந்தகாலத்து ஒருஇரவில்)

அந்த நகர்த் தெருவில்
அன்றிரவு யாருமில்லை
முந்தி விழாக் காண
மொய்த்துவிட்டார் கானகத்தில்
பந்துபோல் முழுமதியம்
பார்த்து நிற்க, உபகுப்தன்
சிந்தனையின் பாய்ப்பட்டுச்
செல்லுகிறான் நகர் ஓரம்

காலடியில் சுவர் நிழலில்
கண்டதென்ன இளந்துறவி?
தோல் கருகிப் புண்பட்ட
துயர் ஒருபால், நாட்டுமக்கள்
கோலெடுத்துத் துரத்தியதால்
கொண்டதுயர் மற்றொருபால்
வேல் விழியாள், ஆடல் மகள்
வேதனையால் வாடுகின்றாள்.

கண்டான் இளந்துறவி
கடுகி அருகமர்ந்து
ஒண்டொடியாள் தலைதூக்கி
உதடுகளில் நீர் நனைத்து
கொண்டு வந்த தைலத்தைக்
கோதை உடல் தடவி
தொண்டுகளில் மேம்பட்ட
தொண்டு செய்து நிற்கின்றான்.

மங்கை யவள் கண் விழித்து
''மாகருணை உள்ளவரே
இங்கு வந்த நீவீர் யார்?''
என்று மெல்லக் கேட்டவுடன்
''நங்காய் உன்னைக் காணும்
நாள் இன்று வந்ததினால்
இங்கு நான் வந்துள்ளேன்''
என்றிட்டான் உபகுப்தன்.

இலங்கையில் கொழும்பில் கொச்சிக்கடை தெருவில் ஸ்ரீ ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரருக்கு ஓர் அருமைக் கோயிலும் எடுத்துசில பள்ளிக்கூடங்களையும் கட்டியிருக்கும் மகான் ஸ்ரீ ல ஸ்ரீ சர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் விண்ணுலகத்தொடர்பு பெட்டி(இறந்தவர்கள் பேசும் பலகை) மூலமாக தனது தினம் (26-11-69) அன்று தமிழில் நிகழ்த்திய ஓர் அரிய அருளுரை.

பொன்னம்பலம் இராமநாதன் பேசுகிறேன். நான் என் தினத்தன்று, இறந்த பிறகு உலக மக்களுக்கு ஓர் உரை ஒன்றை நிகழ்த்த இப்போது செல்வி வித்தகம் மூலமாக, இறந்தவர்கள் பேசும் பலகை மூலமாக பேசிக்கொண்டு இருக்கிறேன்.

அன் பார்ந்த என் ஈழநாட்டு மக்களே! நீங்களும் எனக்கு இதை இவ்வுலகத்தில் இருக்கும் போதுதான் பரப்ப முடியாமல் போய்விட்டது. இருந்தாலும் நான் இப்போது இவ்வுலகில் இருந்து கொண்டு திரு. மாணிக்க வாசகம் அவர்களுக்கு உறு துணையாக நின்று உதவி செய்வேன்; செய்தே தீருவேன். அந்தப்பாக்கியம் எனக்கு அவ்வுலகில் வாழும் போதுதான் கிட்டவில்லை. ஆனால் இப்போது அந்தப் பாக்கியம் கிட்டி விட்டது. இனி அதைக் கைவிடேன்.

நான் என்ன அவ்வளவு முட்டாளா? இதை இனி மேலும் கைவிட. அவ்வுலகத்தில் இருக்கும்போது தான் எனக்கும் பல புண்ணியங்களைத் தேடிக் கொள்ள முடியாமற் போனாலும் அதற்குப் பதிலாக இப்போது இவ்வுலகில் தேடிக்கொள்வேன். இதை நான்மட்டும் உணர்ந்து தில் இருந்து கொண்டே கண்ட கண்டதை எழுதி வம்புப் பேச்சுப் பேசி மக்களைக் கெடுப்பார்கள். ஒன்று, எப்படியாவது தானாக அறிவதற்கு முயல வேண்டும். அல்லது அறிய வைக்கிறோம் புரியவைக்கிறோம் என்று அழைப்பவர்களின் பேச்சுக்கு இணங்கியாவது அறியவேண்டும். இரண்டுமில்லாமல் சும்மா அர்த்தமில்லாமல் வம்புப் பேச்சு பேசுபவர்கள் எல்லோரும் ஆறறிவு படைத்தவர்களாக இருக்கமுடியாது. ஒன்று ஐந்தறிவுள்ளவர்களாக இருக்கவேண்டும் அல்லது ஏழறிவுள்ளவர்களாக இருக்கவேண்டும். இதைப் பற்றி எல்லாம் மக்கள் சிந்திக்கவேண்டும். அப்படி மக்களைசிந்திக்கவைப்பதற்கு நாங்கள் பேசுபவைகளையும் விளக்கம் கொடுப்பவைகளையும் ஈழநாடு துணிந்து வெளியிடுவதை நான் மிகவும் பாராட்டுகிறேன். மக்களுக்கு

## சேர். பொன் இராமநாதன் விடுக்கும் செய்தி

என்னுடன்பேசவேண்டுமா, வாருங்கள் செல்வி வித்தகம் இருக்கும் இடமான மீரிகாமத்திற்கு. நீங்கள் என்னுடன் பேசி உங்கள் ஐயங்களை தீர்த்துக்கொள்ளலாம்.

நான் அவ்வுலகில் இருக்கும் போது எனக்கு இந்த இறந்தவர்களுடன் பேசும் முறையைப்பற்றி சரிவரத் தெரியாமல் இருந்து விட்டதை நினைத்து மிகவும் வருத்தம் அடைகிறேன். எனக்கு மட்டும் இது அவ் உலகத்தில் தான் வாழும் போது தெரிந்திருந்தால் இதைப்பரப்புவதில் மக்களுக்கு உணர்த்துவதில் நான் தான் முன்னணியில் நின்றிருப்பேன்.

இந்த இறந்தவர்களுடன் பேசும் முறையை ஒரு பத்துப்பேருக்கு தெரியவைத்து புரியவைத்து பேசவைத்தால் ஒரு கோயிலைக்கட்டிய புண்ணியமும் பல யாகங்கள் செய்த புண்ணியமும் கிடைக்கும். இது எனக்கு நான் அவ்வுலகத்தில் வாழும் போதே தெரியாமல் போய்விட்டது. தெரிந்திருந்தால் நான் நிச்சயமாக ஒருகோயிலைக்கட்டி விட்டு அந்த புண்ணியத்தோடு சும்மா இருந்திருக்காமல் பத்துப்பேருக்குமட்டுமல்ல நூறு, ஆயிரம், லட்சம், கோடி மக்களுக்கு தெரியவைத்து புரியவைத்து பேசவைத்து சொற்பகாலத்திற்குள்ளே பல கோயில்களை கட்டிய புண்ணியத்தையும் பல யாகங்கள் செய்த புண்ணியத்தையும் தேடிக் கொண்டு இங்கு இப்போது இறைவனுடனேயே இருக்க வழிசெய்து கொண்டிருப்பேன்; என்பது நிச்சயம், நிச்சயம் நிச்சயம். நிச்சயம் நிச்சயம் நிச்சயம்.

ச்சா! எனக்கு இது தெரியாமல் போய்விட்டதே எவ்வளவு புண்ணியங்களை நான் எளிதில் தட்டிக்கொண்டிருக்கலாம். எனக்குத்தான் அந்தப்பாக்கியம் கிட்டவில்லை. ஆனால் உயர் திரு மாணிக்க [illegible] டவனே அப்பாக்கியத்தை நல்கிவிட்டான்.

காணாது. அவ்வுலகத்திலுள்ள ஒவ்வொருவரும் இதை உணரவேண்டும். அவர்கள் இதை உணர்ந்து தெளிந்து கடைப்பிடிப்பதே எனது விருப்பம். என் அருமை மக்களே! நீங்கள் கோயில் கட்ட வேண்டாம். இறந்தவர்களுடன் பேசுங்கள், பிறகு அதை மற்றவர்களுக்கு புரியவைத்து அவர்களையும் பேசவையுங்கள் நீங்கள் ஊரில் கல்லால் கோயில் கட்டவேண்டாம். மக்கள்மனதில் பக்தியால் கோயில் கட்டுங்கள். மக்கள் எல்லோரையும் பாவ புண்ணியங்களைத்தெரிந்து உணர்ந்து புண்ணியத்தைத் தேடும் வழிகளில் செல்லவையுங்கள். இது தான் நீங்கள் எனக்குக் கொடுக்கும் உண்மையான மரியாதை. சந்தேகம் இருப்பவர்கள் மீரிகமத்திற்கு ஓடிவாருங்கள். உங்கள் சந்தேகங்களையும் ஐயப்பாடுகளையும் தீர்த்து வைக்க விண்ணுலகத்தில் ஒரு பெரிய குழுவே இருக்கிறது. ஒன்றா இரண்டா பெயரைச்சொல்ல கணக்கு வழக்கேது!

பலருக்குப் பல சந்தேகங்களும் ஐயப்பாடுகளும் தோன்றலாம், தோன்றும். ஆனால் அதைத் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்வதே புத்திசாலித்தனமானது. எல்லோருக்கும் இது ஆச்சரியத்தைத் தரக்கூடும். அதை எல்லாம் நம்ப நேரில் பார்த்தாலே அன்றி ஒரு நாளும் நம்பமுடியாது. ஒரேஒருமுறை செல்வி வித்தகம் மூலமாக நாங்கள் பேசுவதை நீங்கள் பார்த்தால் அதுவே உங்கள் வாழ்நாள் பூராவுக்கும் போதும். சந்தேகங்களோ ஐயப்பாடுகளோ இருப்பின் அதைத் தெளிவுபடுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அதற்கல்லாமல் சிலர் வம்புப் பேச்சுப் பேசுகிறார்கள். அது அறிவீனம்; முறையுமல்ல. நேரில் பார்த்துப் பேசி பிறகு வலியுறுத்தி [illegible] அதில் தப்பில்லை. சிலர் இருக்கிறார்கள் அழைத்தாலும் பயந்துகொண்டு வருவதில்லை. இருந்த இடத்

இன்றுஉண்மையான சேவை செய்துகொண்டிருப்பது அப்பத்திரிகைதான். இன்று பல ஆசாமிகள் இருக்கிறார்கள். இதைப்பற்றி நன்றாகப் புரிந்துகொண்ட பின்னரும் சும்மாவேனும் தலையைத் தலையை ஆட்டிவிட்டு பிறகு இதைப்பரப்பு அதாவது கொஞ்சம் கடுமையான வேலைகளில்இறங்கச் சொன்னால் அப்பாடி என்று தைரியமாக ஒதுங்கிவிடுவார்கள். அப்படிப்பட்ட ஆசாமிகள் பலருக்கு இடையில் ஸ்ரீ ஐயாறன் அவர்கள் உண்மையை தெரிந்துகொண்ட உடனேயே பத்திரிகையில் போட முன்வந்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன். அப்படிப்பட்ட மனிதர்களைத்தான் நாங்கள் தேடுகிறோம், தேடிக்கொண்டே இருக்கிறோம்.

ஸ்ரீ ஐயாறன் அவர்களுக்கும் பல கோயில் கட்டிய புண்ணியங்களும் பல யாகங்கள் செய்த புண்ணியமும் கிடைக்கும் என்பதில் துளி கூட ஐயமில்லை. அந்தத் துணிச்சலானமனிதரை நான் மிகவும் பாராட்டுகிறேன். பல கோயில்களைக் கட்டிய புண்ணியங்களையும் பல யாகங்கள் செய்த புண்ணியங்களையும் சில மக்கள்மட்டுமன்றி பல மக்களும் அதை அடைய நான் ஆண்டவனை பிரார்த்தித்துக் கொண்டு எனது தினத்தன்று நான் நிகழ்த்தும் இவ்வுரையை இனிது முடித்துக்கொண்டு விடை பெறுகிறேன்.

எல்லோரையும் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் காத்தருளட்டும்.

நன்றி.

### 5 நிமிஷ மடையன்

எவனொருவன் கேள்வி கேட்கிறானோ, அவன் மடையனாய் இருப்பது ஆக ஐந்து நிமிஷம்தான். எவனொருவன் கேள்வியே கேட்காமல் இருக்கிறானோ அவன் தன் வாழ்க்கை முழுவதுமே மடையனாய் இருக்கிறான்.

—(சீனப் பழமொழி)

"ஆ
இ

ஆவி உல
உண்மைதான். இ
பதற்கோ, இ
விவாதம்புரிவதற்
மில்லை. இது ஒ
வித்தையுமல்ல. நா
ஆண்டுகொழும்பில்
னசில் வசித்தபே
வருள்தவயோகசே
தேசிக பரமாச்சா
மிகள் எழுதிய இ
கள் வாழும் நிலையு
முறையும்என்ற புத்
நான்வாசித்தேன். இ
ஆவிகளுடன் கதை
டுமென்றே ஆசைய
சுவாமிகள் எழு
கத்தில் 230-ம் 
ஆவிகளுடன் பே
மிகவும் இலகுவா
ஒன்று காண்பிக்
றுக்கின்றது.




பேசும் தட்டை
மான கடதாசியில்
போல் தயாரித்து
போட்டுவைத்திரு
செவ்வாய் வெள்
ளில் இரவு 7
பின் தாம்பூலம்,
தூபம், தீபம்
இட்டு நானும் எ
னும் வடக்குத்
மாக இருந்து
பின்மூடியை நடுவி
பரிசு
வண ம். உங்
பேசவிரும்புகிறேன்
செய்து என்னுடன்
வந்து பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆவியுலகப்பேச்சு உண்மைதான்"

ஆவி உலகப்பேச்சு ...ண்மைதான். இதை மறுப் ...ற்கோ, இதைப்பற்றி ...வாதம்புரிவதற்கோ இட ...லே. இது ஒரு ஏமாற்று ...தையுமல்ல. நான் 1959ம் ...ண்டுகொழும்பில்கிருண்ட் ...சில் வசித்தபோது திரு ...ள்தவயோகசோமசுந்தர ...சிக பரமாச்சாரிய சுவா ...ள் எழுதிய இறந்தவர் ... வாழும் நிலையும் பேசும் ...றையும்என்ற புத்தகத்தை ...வாசித்தேன். இதன்பின் ...விகளுடன் கதைக்கவேண் ...மென்றே ஆசையுற்றேன். ...சுவாமிகள் எழுதிய புத்த ...தில் 230-ம் பக்கத்தில் ...விகளுடன் பேசுவதற்கு ...வும் இலகுவான முறை ...று காண்பிக்கப்பட்டி ...கின்றது.

HIJKLMN O P Q R S T U V W X Y

...சும் தட்டைச் சதுர ...ன கடதாசியில் இப்படம் ...ல் தயாரித்துப் பிறேம் ...ட்டுவைத்திருந்தேன். ...வ்வாய் வெள்ளி நாட்க ... இரவு 7 மணிக்குப் ... தாம்பூலம், பழவகை, ...ம், தீபம் முதலியன ...டு நானும் எனது மக ... வடக்குத் தெற்குமுக ... இருந்து மின்சூளின் ...மூடியை நடுவில்வைத்து ...ின்களுக்கு ...ம். உங்களுடன் நான் ...விரும்புகிறேன். தயவு ...து என்னுடன்ஒருவரை ... பேசும்படி கேட்டுக்கொள்ளு கின்றேன் என்று கூறிமுடி யின்மேல் இருவரும் தொட் டுக்கொண்டு இருந்தோம். மூடி நகர்ந்து வணக்கம் என்று கூறியது. இவ்வொலி காதுக்குக் கேட்பதில்லை. எழுத்துக்களின்மூலம் காண் பிப்பது. VANAKKAM. இனித் தொடர்ந்து பேச்சை ஆரம்பிக்கலாம். கேட்கப்ப டும் கேள்விகள் யாவற்றிற் கும் எழுத்துக்கள்மூலமே பதில் கூறும். இப்படி நெடுங் காலமாகப் பேசி ஆவியுல கில் இருட்பகுதி, வெளிச் சப்பகுதி என்பன இருக்கின் றனவென்றும், இருட்பகுதி யில் இருப்பவர்களுக்குப் பேசும் ஆற்றல் இல்லை என் றும், மறுபிறவி உண்டென் றும், சாதி, சமய வேறுபாடு கள் இல்லை என்றும், கடவுள் வணக்கம், கூட்டுப் பிரார்த் தனைகள் உண்டென்றும்பல ஆவிகள் கூறின.

...குச்செய்த அநியாயத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர் கள் என்று கேட்டபோது மிகவும் துன்பப்படுகிறேன். உங்களை ஆசிர்வதிக்கின் றேன் என்றுகூறியது. செவ் வாய், வெள்ளி நாட்களில் இது எனக்கு ஒரு முக்கிய வேலையாகிவிட்டது. சில ஆவிகள் சாத்திரம் சொல் லும் பாவனையாகவும் சில செய்திகளை வெளியாக்கின.

மனிதர்களில் வஞ்சகம் உள்ளவர்கள் போல ஆவிக ளிலும் வஞ்சம் கொண்ட ஆவிகளும் உண்டு. இக்பால் என்ற ஓர் ஆவி என்னுடன் பிடிவாதம்பிடிக்கத்தொடங் கியது. பொருத்தமில்லாத பதிலைக் கூறி எனக்குக் கோபத்தையும் உண்டாக் கும். இப்படியாக இருக்கும் போது எனக்கு வயிற்றில் கோளாறு ஏற்பட்டு என் னைக் கஷ்டப்படுத்தியது. சிலநேரம் என்னுடன் யாரோ கதைப்பது போல வும் நான் என்னில் உணர் வேன். இதன்பின் நான் ஆவி களுடன் பேசுவதை நிறுத்தி முருகப்பெருமானை வணங் கிக்கொண்டு வருகிறேன். ஆவிகளுடன் பேசுவோர் ஆசாரம், கடவுள்பத்தி, மன அடக்கம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம்.

— வே. இரத்தினம் —
ஆசிரியர் தனங்கிழப்பு

சில ஆவிகள் தங்களுக்கு உணவு தரும்படியும் கேட் டன. அவைகள் கேட்கும் உணவுகளை உடனே கொடுக்க வசதி ஏற்படாது. வாங் கியோ; செய்தோ வேறொரு நாள் கொடுக்கலாம். ஆவி களுக்குக் கொடுக்கப்படும் உணவு மிகவும் சுத்தமுடை யதாக இருக்கவேண்டும். சுத்தமில்லாவிட்டால்வேண் டாம் என்ற பதிலைத்தரும், சாப்பிட்டதானால் போதும் என்ற பதிலைத்தரும். நான் பேசியபோது இனத்தவர் களின் ஆவிகளும் வேறு சம யத்திலுள்ள ஆவிகளும் வந்து பேசின.

டி. எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யு. ஆர். டி. பண் டாரநாயக்கா ஆகிய மந்திரி களின் ஆவிகளும் வந்து பேசின. பண்டாரநாயக்கா வின் ஆவியை நீங்கள் பூவுல கில் இருந்தபோது தமிழருக்...

## பிஜித்தீவு

322 தீவுகளைக்கொண்டது தான் பிஜித்தீவு! இதில் 106 தீவுகளில் மட்டும் மக்கள் வாழ்கிறார்கள். மற்றத் தீவெல்லாம் காடுகள். இத் தீவுகள் ஆஸ்திரேலியாவுக்கு அருகில் அமைந்துள்ளன.

# நாவலர் தம் தொண்டு: கஞ்சி வார்த்தல் தொடக்கம் அரசியல் வரை



பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

ஆறுமுக நாவலர்மறை ந்து தொண்ணூறாம் ஆண்டு இந்த ஆண்டு. நாவலர் அவர்கள் மறைந்த பின், வந்துபோன ஆண்டுகளுக் குள் எல்லாம், தலைசிறந்த ஆண்டு இந்த 1969-ம் ஆண்டு. இந்த ஆண்டில், நாவலர் அவர்களின் அருமை பெருமைகள், பெரி தும் சிந்திக்கப்படுகின்றன. 'நிழலின் அருமை வெய்யி லில் தெரியும்' என்பது பழ மொழி.

சைவர்கள் நாவலர் அவர் களை 'ஐந்தாங்குரவர்' என்று பாராட்டி இதுகாறும் விழா எடுத்து வந்தார்கள். இப் பொழுது தமிழர்கள், தமி ழர் அல்லாதவர்கள் —இத் தேசத்தவர்கள் —இத்தேச த்தவர் அல்லாதவர்கள் யாவரும் ஏகோபித்துக் கொண்டாடும் நிலைதோன்றி யிருக்கிறது.

நாவலர் அவர்களுக்கு வெண்கலச்சிலை எடுத்து இந்த ஆண்டில் பெரிய தொரு கொண்டாட்டம் நிகழ்த்தியிருக்கிறார்கள். அதன் காரணம் சிந்திக்கப் பாலது.

மகாத்மா காந்தியடிகளை உலகம் முழுவதும் கொண் டாடுகிறது. மகாத்மா சத் தியம், அகிம்சை என்ற தர் மங்களைப் பயன்படுத்த, வாழ்நாள் முழுவதும் முய ற்சி செய்த மகான்.

சத்தியம், அகிம்சை என்ற இரு தர்மங்களையும் ஒரு ங்கு திரட்டி, இரண்டெழு த்தாலான ஒரு சிறிய வார் த்தையினாலே சொல்லிவிட லாம். அந்த வார்த்தை தான் நீதியென்ற வார் த்தை. அது கூரியவாள் துனி யிலும் நுண்ணியது. அதனை 'அக்கினி ஆற்றிலிட்ட மயி ர்ப் பாலம்' என்றும் வர் ணிக்கலாம். அப்படிப்பட்ட நீதியில் தம் வாழ்க்கையை நடத்தியவர் நாவலர்பெரு மான்.

'நீதி வழுவா நெறிமுறை யில் இட்டார் பெரியோர்' என்பது தமிழ் அன்னையின் வாக்கு. அவ்வாக்கில் 'இட் டார்' என்பதற்குப் பொருள் நீதி நெறியில் தம் வாழ்க் கையை வைத்துக்கொண்ட வர் என்பதாகும்.

மகாத்மா காந்தி, நீதியிலி ருந்து விலகினால் தமது மனைவியையும் விலக்குவத ற்கு ஆயத்தமாயிருந்தார். அவ்வாறு ஆயத்தத்தில் எத்துணையும் குறைந்தவ ரல்லர் நாவலர். கூடிய வர் என்றும் கூறுவர்.

நாவலர் இந்த உலகத்தில் மிக்க பற்றுவைத்த ஒரு மனி தர் இருந்தால், அந்த மனி தர் அவர் மருகரும், மாணாக்கருமான வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளையேயாம். இலக்கிய இரசனையில் பொன்னம்பல பிள்ளைக்கு ஒப்பாரும் மிக் காரும் இல்லையென்றே கூறலாம். பொன்னம்பல பிள்ளை அபர கம்பர். கைம் மாறு கருதாது எந்த நேரத் திலும் மாணவருக்குப் பாடஞ்சொல்லிக்கொண்டே யிருப்பார்.

வித்துவக் கூட்டமொன்று எப்பொழுதும் வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளையை மொய்த்தபடியி ருக்கும். இப்படிப்பட்ட பொன்னம்பலபிள்ளையிடம், நாவலருக்குப் பற்றுண்டான தில் நூதனம் இல்லை.

ஒருமுறை தமது பற்றுக் குப்பாத்திரமான பொன் னம்பலபிள்ளை, நீதியிலிருந்து விலகியபோது அதனை நீதி ஸ்தலத்தில் தெட்டத் தெளிய எடுத்துச்சொன்னார் நாவலர்; கண்ணீர் விட்டுக் கொண்டே சொன்னார். அத னாலே தம்முடைய அருமை மருமகனை ஐந்துவருடச் சிறைவாசம் செய்யவைத் தார் நாவலர்பெருமான்.

அப்பொழுது வித்துவ சிரோன்மணியின் கண்களிலி ருந்துநீர் துளிர்த்தது. தமது சிறைவாசத்துக்கு அஞ்சித் துளித்த துளியன்று அத் துளி. தமது அருமை மாம னாரின் நீதி வழுவா நெறி முறையைக்கண்டு உருகித் துளித்த துளியேயாகும் அத் துளி.

மகாத்துமாகாந்தியை ஓர் இந்துவே சுட்டுக்கொன் றான். நாவலர் தமக்குப் பகைவர் தம்மவராகிய தமதுசமயத்தவரே என்கின் றார்.

"பூர்வ காலத்திலே சைவ சமய விருத்தியின்பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்கு மதிப்பும் பரசமயிகளாலே இடையூறும் செய்யப்பட் டன. தற்காலத்திலே சைவ சமய விருத்திப் பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவசமயிகளாலேயே அவ மதிப்பும் இடையூறும் செய் யப்படுகின்றன. பரசமயி களோ எனக்கு இடையூறு செய்யவுமில்லை, என்னை

(12-ம் பக்கம் பார்க்க)


நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும்
அறவே ஒழிக்க உபயோகியுங்கள்




'என்றெக்ஸ்'20
என்றின் என்னும் பொருளின் வலுமிக்க உருவம்

நெற் பயிரைத்தாக்கும் கிருமிப் பீடைகள் பல உள்ளன. ஒவ் வொன்றிற்கும் ஒவ்வொரு வகை கிருமி நாசினி உயர்ந்த விலை களில் கிடைக்கின்றது. இவையனைத்தும் இவ்வுயர் விலைகளில் தனித் தனியாகச் செய்ய வல்லதை ஒரே முறையில் சிக்கனமாகச் செய்ய வல்லதே "என்றெக்ஸ் 20" "என்றெக்ஸ் 20" இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல்வேறு பாகங்களிலும் வெற் றிகரமாகப் பாவிக்கப் படுகிறது. தற்பொழுது, நெற்கிருமிப் பீடை களுக்கு மட்டுமின்றி, புகையிலை, பருத்தி, காய்கறி வகைகளைத் தாக்கும் கிருமிப் பீடைகளையும் உடன் அழிக்கக் கைதேர்ந்ததென நிரூபிக்கப்பட்டு, உங்களுக்குச் சிபார்சு செய்யப்படுகிறது. நெற்பயிர் 10-14 நாளய பருவத்திலிருக்கையில் முதன் முறையாகத் தெளிப் பின் பயிர்கள் முழுப்பாதுகாப்பு பெறும். பின்னர் மாதத்திற் கொருமுறை பாவிப்பின் பீடையற்ற செழிப்பான பயிர் பெறுவீர்கள். நெற்பயிர், புகையிலை, பருத்தி, காய்கறிவகையின் கிருமிப் பீடை யழிப்பிற்கு 1 திரவ அவுன்ஸ் "என்றெக்ஸ் 20" உடன் 2 கலன் நீர் கலந்து 32-40 கலன் கொண்ட இத்திரவத்தை ஒவ்வொரு ஏக்கருக்கும் பாவிக்க.

அதிக விளைச்சலைப் பெறவும் பீடையற்ற நற்தாவரங்களுக்கும் ... ஏக்கருக்கு ரூ. 9/- சிக்கனமான 'என்றெக்ஸ் 20' மட்டுமே.

பிறரால் அகற்ற முடியாத இப் பொறிப்பு முத்திரையே தரச் சிறப்பிற்கு, உங்கள் உறுதி.

ஷெல் ரசாயனப் பொருட்கள்
SHELL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கதை

[6ம் பக்கத் தொடர்ச்சி[

தார் பூசைக்குப் போனோம். தேவசுதனின் பிறப்பைப் பெரிய சுரூபங்களைக் கொண்டு ஜோடனை செய்திருந்தார்கள். தேவபாலன் ஒரு குகையில் மாட்டுக் கொட்டிலில் - வைக்கோல் மீதுதானே அவதரித்தார். அப்படிப் பிறந்தவர் தன் பிறந்தநாள் விழாவுக்கு நாங்கள் மாத்திரம் பட்டும், பீதாம்பரமும்அணிந்துதான் வரவேண்டுமென விரும்புவாரா என்ன? சின்னக்காவின் அருகில் வந்திருந்த பெரியஇடத்துப் பெண்ணொருத்தி அக்காவைப் பார்த்து முகத்தைச் சுளித்தவாறு தள்ளிப்போயிருந்தாள். அக்காவுக்கு மிகவும் அவமானமாகப்போயிற்று.

அன்றிலிருந்து அக்கா, தான் வேலைக்குப்போவதாகச் சொன்னாள். அம்மா அதை விடும்பவில்லை. எனக்கு யோசனையாகிவிட்டது.

அன்றொருநாள் நான் வேலைக்குப்போனாலாவது நிம்மதியாயிருக்கலாமென்று சொன்னாளல்லவா? பெரியக்காவைப்போல இவவும்...? இல்லையில்லை! கடைசிவரை அப்படியாகவிடமாட்டேன். நான் உழைத்துச் சின்னக்காவைக் காப்பாற்றுவேன். என் உறுதி தீவிரமாகியது.

பிறகும் ஏதோபேச்சுவாக்கில் அக்காவை அம்மா அதட்டவேண்டி வந்துவிட்டது. அப்போது அக்கா மிகவும் நொந்துபோனாள். - நானும் சிஷ்டராகப்போயிருந்தாலும் பரவாயில்லை...'- என்றாள் விரக்தியோடு. எனக்குச் சுரீரென்றது இவவும் பெரியக்கா மாதிரி முக்காடு போட்டுக்கொண்டு- என்று நினைப்பதே மிகவும் துன்பம்பயப்பதாயிருந்தது.

அதைத் தடுப்பதெப்படி? அம்மாவையும், அக்காவையும் சமாதானப்படுத்துவதெப்படி? சின்னக்காவும் வில்லியக்காபோல் போகாதிருக்கவேண்டுமானால் நான் வேலைக்குப் போகவேண்டும். அதற்கு அம்மா விடமாட்டாளே. நான் படித்து முடித்து பஸ் கொண்டக்ரர் உத்தியோகமாவது பார்ப்பேன் என்று அம்மா நம்பியிருக்கிறாளே. அதுவரை அக்கா ... அம்மாவுக்கென்ன அவ அப்படித்தான் சொல்வா. அக்காவை நான் தானே காப்பாற்ற வேண்டும் அதற்கு ஒரே வழி... அதற்கு...ஆமாம் அதுதான் சரியானவழி...!- யோசித்து நான் ஒரு முடிவுக்கு வந்தேன்.

கடவுளிடம் நான் வேண்டுதல் செய்தேன். கடவுளே! எங்களம்மாவை எங்களுக்காகத் துன்பப்படவிடாதே. அவவைச் சித்திரவதைக்குள்ளாக்காதே. அம்மா எங்களுக்காக உழைத்துஉழைத்து எலும்புருவாகி விட்டாள். இனி இப்பிரபஞ்ச உபாதையை அவவுக்குக் கொடுக்காதே. தெய்வமே! உனக்குத் தினமும் நான் தீபம் ஏற்றுகிறேன். என் வேண்டுதலை ஏற்றுக்கொள். இந்த என் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால்தான் நான் ஒரு வேலைக்குப்போய் என் அக்காவையும் காப்பாற்ற முடியும். இதை நிராகரித்து அக்காவின் ஆசைகளையும் பொசுக்கிவிடாதே. கடவுளே என் மன்றாட்டத்துக்கு செவிகொடு. துன்பப்படுகிறவர்கள்பாக்கியவான்களென்றால் எங்களம்மாவையும் பாக்கியம் பெறச்செய். தேவதேவா! நீர் மனுக்குலத்துக்காக மரித்ததைப்போல, அம்மா எங்களுக்காகச் சித்திரவதைப்பட்டு மரிக்கவேண்டாம். நீரே அவவை ஏற்றுக்கொள்ளும். அம்மாவுக்கு விரைவில் மோட்ச சாம்ராஜ்யத்தில் இடம்கொடும். அன்னையே சாகவேண்டும் என யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால்... கடவுளே! எங்களம்மா எங்களுக்காக வேதனையனுபவிக்கக் கூடாதே என்றுதான் இப்படிக் கேட்கின்றேன்—இப்படித்தான் விரும்பினேன்.

அன்றைக்குப் பள்ளியிலிருந்து வந்து நண்பர்களோடு விளையாடிக்கொண்டிருந்தேன். சடுகுடு விளையாடினோம். எனக்குத்தான் வெற்றி. எந்த விளையாட்டானாலும் வெற்றி எனக்காகத்தானிருக்கும். விளையாட்டில்போலத்தான் நான் படிப்பிலும் முதலாவதாக இருப்பேன். மாலையாகிவிட்டது. அம்மாவைக் காணோம். நேரம் போகப்போக என் நெஞ்சுக்குள்ளே ஏதோ பிசைவதைப் போலிருந்தது. கடவுளிடம் வேறுகேட்டுவிட்டேனே. அப்படித்தான் ஏதும்...? ஐயோ! அம்மா...! கடவுளே! கடவுளே! வேண்டாம், அப்படிச்செய்து விடாதே! என் அம்மாவை என்னிடம் அனுப்பிவிடு. தெரியாமல் கேட்டுவிட்டேன், என்னை மன்னித்து விடு. அம்மா இல்லாமல் நான் இடுக்கவேமாட்டேன். உடனே அம்மாவை அனுப்பிவிடு! தேவனே! அம்மாவை அனுப்பிவிடும்... என்று அம்மாவைக்காணாமல் அழுதேன்.

நன்றாகப் பொழுதுபட்டுத்தான் அம்மா வந்தா. வந்தவுடனேயே உடம்புக்கு என்னவோ செய்கிறதென்று படுத்தா. காய்ச்சல் அனலாகத் தகித்தது.

அதற்கடுத்த பன்னிரண்டாவது மணித்தியாலத்தில் வானம் பொத்துக்கொண்டு மழைகொட்டியது. எல்லா இடங்களிலும் வெள்ளம் பெரிகியது. யாழ்ப்பாண நாடே கண்டிராத பேய் வெள்ளம்பெருகியது. பார்க்குமிடமெல்லாம் ஜல சமுத்திரம்தான். எங்களின் குடிசையும் தண்ணீருள் மூழ்கியது. கூரைமாத்திரம்பாறையின் மூக்கைப்போல நீட்டிக் கொண்டிருந்தது. நாங்கள் பக்கத்திலிருந்த கந்தசுவாமி கோவில் மண்டபத்தில்சரணடைந்தோம். நான் மிகமிகச் சின்னப் பையனாக இருந்தபோதுஅந்தக் கோவிலுக்குத் தான்போவோம் ஒருதடவை அப்பாவுடன் சேர்ந்து காவடி எடுத்ததுகூட இன்னமும் எனக்கு நினைவிருக்கிறது. மண்டபத்திலிருந்த எல்லார்க்கும் சாதம் அவித்துப்போட்டார்கள். யார் யாரோ வந்து வெள்ள நிவாரண நிதிதருவதாகச்சொல்லி எங்கள் பெயர்களையெல்லாம் எழுதிக் கொண்டு போனார்கள். அதனால் அந்த வெள்ளம் வற்றாமலே இருக்கக்கூடாதா என்றும்ஏங்கினேன். எங்களைப்போன்றவர்களிடம் கடவுள் அப்படித்தானே உதவிக்கு வர முடியும்.

உலக முடிவைப்போல அந்தவெள்ளம் எங்கள்வாழ்வில் பிரளயத்தைத்தான் கொண்டுவந்து விட்டது. என்னதானிருந்தாலும் கடவுள் கருணையுள்ளவர்தான். எத்தனையோ காலமாக என்னென்னத்துக்காகவோ அப்பா, அம்மா, அக்காமார் எல்லாருமே வேண்டிக்கொண்டிருப்பார்களே அவர்களையெல்லாம் பொருட்படுத்தாத அவர் மட்டும் உடனே இரங்கினார். ஓ! அவர் என் வேண்டுதலுக்கு அருள் பாலித்தார். ஆமாம்.

வெள்ளம் போய்விட்டது. பூமிக்குள்ளே அதுபோய்விட்டது. எங்கிருந்து வந்ததோ அங்கேயே போய்விட்டது. எங்கள் அம்மாவையும் கூட்டிக்கொண்டுபோய்விட்டது. போய்விட்டது.

0 0 0

எனக்குத்தெரியும்என்னைத் தேடிக்கொண்டு இந்தஅக்கா வந்துவிடுவா என்று. வாசலுக்கும்கூட வரவிடுகின்றாளில்லையே. நான் உள்ளே போகவேண்டுமாம். எதற்காம்...? இதோஓயாமல்பெய்யும் மழையில் வெள்ளம் வரப்போகுதே.

அக்கா நீ இங்கே வராதே. நீ காலையில் நெசவுசாலைக்குப் போகவேண்டும். இல்லையா...போ போ! போய்ப்படு.

வேண்டாம் வேண்டாம். நீ போகவேண்டாம்.

இனிப்பாரேன்... வேலைக்குப் போகிறேன். நான், உனக்கு சேலை, சட்டை, காப்பு, மூக்குத்தி. தோடு எல்லாமே கொண்டுவருவேன். நீ இனி வேலைக்குப் போகவேண்டாம் என்ன?

'இங்கே பார் அம்மா வந்துவிட்டாளே' - என்று வெள்ளத்தை அணைத்துக் கொண்டுவிழுகிறேன். அக்கா என்னைத்தூக்கித் துடைக்கிறாள். அம்மாவும் இப்படித்தான் சுகமாக அணைத்துக் கொள்வாள்.

இதென்ன அக்காவின் முகத்தில்? கண்களிலென்ன கண்ணீர்த் துளிகளா? அல்லது மழைத்தண்ணீரா? எனக்கு எல்லாம் ஒன்றுதான். ஓ...ஹோ! அழுதாலும்வெள்ளம் உண்டாகுமா அக்கா? - அக்கா! அப்போ நன்றாக அழு. வெள்ளம் வரட்டும்! பெரிய வெள்ளம் [illegible]

(… )

முற்றும்

# மின்சார பாதுகாப்பு உடை

இப்பொழுது 400,000 'வோல்ட்' மின்சார சக்தியைக் கொண்டு செல்லும் கம்பிகளையும் பயமின்றித் தொட்டு அவற்றிலுள்ள பிழைகளைத் திருத்தலாம். சாதாரணமாக மிகக்கூடிய மின்சக்தியை எடுத்துச்செல்லும் கம்பிகளைத் திருத்த வேண்டுமென்றால் முதலில் 'மின்சார அளிப்பு' முற்றாக நிறுத்தப்படல் வேண்டும். இதனால் இக் கம்பிமூலம் மின்சக்தி பெறுபவர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதுடன், நாளுக்குப் பெருந்தொகையான பணம் மின்சார இலாகாவுக்கு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. இனி இக்கஷ்டங்கள் எதுவும் ஏற்படாதவாறு புதிய பாதுகாப்புக் கவச உடையொன்றைப் பிரிட்டனில் இருக்கும் மத்திய ஆராய்ச்சி ஆய்வுகூடம் உருவாக்கியிருக்கிறது. பருத்தித் துணியில் துருப்பிடியா உருக்குக் கம்பிகளை நெய்து இவ்வாடை அமைக்கப்பட்டிருக்கிறது. உடம்பை முழுதும் மூடக்கூடிய மேலுறை, கை, கால் உறைகள், முகப்பாதுகாப்புடைய தலைக்கவசங்கள் கொண்ட இந்தஉடை ஒன்றோடொன்று சிறுபொத்தான்களால் இணைக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம் தொடர்பறாமல் செல்ல இப்பொத்தான்கள் உதவுகின்றன.

பழுது பார்க்க வேண்டிய கம்பியை அதாவது 40 000 வோல்ட் மின்சாரக் கம்பியை இவ்வுடை அணிந்த ஒருவன் அதன்மேல் இருந்துகொண்டு விசேஷ கைபிடிச் சாதனமொன்றால் பழுதடைந்த இடத்தில் பிடித்தவுடன் கம்பியிலிருக்கும் மின்சாரமானது, அவன் அணிந்திருக்கும் உடைக்குள் பாய்கிறது. உடனே உடையில் இருக்கும் உருக்குக் கம்பிகள் மின்சாரத்தை எடுத்து மனிதனின் உடம்பில் பாயவிடாமல் தடுத்துவிடுகின்றது. இதனால் மின்சாரமளிப்பும் தடைபெறுவதில்லை. மனிதனுக்கும் ஆபத்து ஏற்படுவதில்லை. அவன் இனிமேல் பயமின்றி சாதாரண பழுதடைந்த கம்பியைத் திருத்துவது போல, இந்த 400,000 வோல்ட் மின்கம்பியையும் திருத்தலாம்.



மனிதன் சிறிதும் பயமின்றி 400,000 வோல்ட் மின்சக்தியுடைய கம்பிகளின் மேலிருந்துகொண்டே பழுதுபார்ப்பதை இப்படம் தெளிவாகச் சித்தரிக்கிறது.

# தனிக் குடித்தனம் ...

[11ம் பக்கத் தொடர்ச்சி]

தனிக்குடித்தனம் நடத்துவதால் அதில் எந்தச் சுவையும் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் தெய்வம் இருக்குமிடமே கோவிலாகத் தோன்றுகின்றது. அந்தக் கோவிலில் வீற்றிருக்கும் வாய்பேசாத் தெய்வங்கள் பல உண்டு

குடும்பம் என்னும் கோவிலிலே வாய்பேசும் தெய்வங்கள் பலவற்றை நாம் பார்க்கிறோம், அவற்றுடன் பேசிப் பலநல்லது கெட்டதுகளை அறிந்துகொள்கிறோம்.

இத்தகைய குடும்பத்துடன் ஒன்றித்து புதுமணத் தம்பதிகள் வாழ்க்கைப் படகைச் செலுத்தினால், அவர்களும் அந்தக் குடும்பக் கோவிலில் ஒரு தெய்வமாக மாறுவார்கள்.

தனிக்குடித்தனம் நடத்தி பல நல்ல உள்ளங்களின் மனத்தை நோக வைப்பதில் எந்த இலாபமுமில்லை. லாபமோ நஷ்டமோ குடும்பத்தோடு இருந்துபுதுமணத் தம்பதிகள் நல்ல பெயர் எடுப்பதே சாலச்சிறந்தது.

—எம். இளங்கோ

புதுமணத் தம்பதிகள் தனிக் குடித்தனம் நடத்துவது நல்லதே ஆகும். ஏனென்றால் திருமணமான புதிதில் ஆண் பெண் இருவருடைய மனதிலும் எத்தனையோ ஆசைகள் பிறக்கின்றன. அந்தஆசைக்குத்தடையாக குடும்பத்தோடு இருந்தால்அவர்களுடைய எண்ணஅலைகளும், அழிந்துவிடுகின்றன. இதனால் அவர்கள் தனிக்குடித்தனம் நடத்தினால் இருவர்மனமும் கலந்து உறவாடுவதோடு அல்லாமல் பல வாழ்க்கைச் சுவையும் அறிகிறார்கள். மனம் என்னும் ஊஞ்சலிலே புதுமணத் தம்பதிகள் உல்லாசப்பவனி வந்து ஒருவரையொருவர் அறிய இந்தத் தனிக்குடித்தனமே உகந்ததாகும்.

—செல்வி எம். லலிதா


"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்

★ பெனியன்

★ ஸ்போட் சேட்

★ ரி சேட்

★ ரெறி சேட்

★ ரெறி பிளவுஸ்

★ பேபி வெஸ்ட்

★ கால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 330


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று அணியுங்கள் ! நாளை வீசிவிடுங்கள் !!

— பமிலா லேயன்ஸ் —

இன்று அணியுங்கள்! நாளை வீசிவிடுங்கள்! ஏதோ சிறு சில்லறை நகைகளையோ அல்லது கிழிந்து தேய்ந்து போன காலணிகளையோ அல்ல. இன்று புதிதாகப் போடும் உடையை நாளை வீசி விடலாம் என்று துணிந்து கூறுகின்றனர் ஒரு பிரிட்டிஷ் கம்பனியினா. கடதாசியிலான உடைகளை இவர்கள் உருவாக்குகின்றனர். இந்தப் புதுவித உடைகளுக்குப் பிரிட்டனில் ஒரே கிராக்கி.

**புரட்சிகரமான உடை**

இளம் சிறார் முதல், பெரியோர்வரை இவ்வுடைகளைப் பயமின்றி அணியலாம். இப் புரட்சிகரமான உடை இன்று நேற்று அறிமுகப் படுத்தப்பட்டதல்ல சில ஆண்டுகளுக்குமுன் இவ்வுடை இதே கம்பனியால் உருவாக்கப்பட்டு சந்தையில் விற்பனைக்கு வந்தபோது அதைச் சீண்டுவார் இருக்கவில்லை. கடதாசி உடையை அச்சமயம் பெரியதொரு வேடிக்கையாக மக்கள் கருதினர். அதற்கொரு காரணம் சாதாரண நீண்ட காலம் பாவிக்கக்கூடிய உடையின் விலையிலும் பார்க்க இக் கடதாசி உடையின் விலை மிகக் கூடியதாக இருந்ததே. ஆனால் கடதாசிஉடை அமைப்புத்துறை இப்பொழுது, தீவிரமாக முன்னேறி வருகின்றது. அவ்வுடையின் பலவேறு நன்மைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டி பிரபலப்படுத்தியது பயன்தரத் தொடங்கியிருக்கிறது. கடதாசி உடையென்றால் ஏதோ சாதாரண பேப்பரை எடுத்து வெட்டித் தைக்கப் பட்டது என எண்ணிவிடாதீர்கள். உண்மையில் கடதாசிதான் இவ்வுடைக்குப் பாவிக்கப்பட்டாலும் இது சாதாரண கடதாசியல்ல. நைலோன் அல்லது ரேயன் மூலம் உறுதியாக்கப்பட்ட கடதாசியாகும்.

**பலதரத்தவை**

இந்த உறுதியாக்கப்பட்ட கடதாசிகளை பலவிதங்களில் வெட்டி அழகான உடைகளைத் தைக்கிறார்கள்.

நாம் சில துணிகளை ஒருமுறை கழுவினால் போதும். அவை கவர்ச்சியை இழந்து விடும். இன்னும் சில துணிகளைப் பல தடவை கழுவினாலும், அசையாமல் உறுதியாக நின்று பிடிக்கும். சிலதுணிகளைக் கழுவவே முடியாது. அதேபோன்றுதான் இக்கடதாசி உடைகளையும் நாம் பாவிக்கலாம். சிலவற்றை ஒருமுறை மட்டுமே அணியலாம் சில ஓரிருமுறை அணிய உகந்தவை. இன்னும் சிலவற்றைச் சிலகாலம் கழுவிக் கழுவிப் பாவிக்கலாம்.

**கம்பனிகளின் முயற்சி**

இக்கடதாசியின் பலாபலன்களை மனதிற்கொண்டு இன்னும் சில கம்பனிகள் குழந்தைகளின் தொட்டில் விரிப்புகள், சிறுநீர் உறிஞ்சும் விரிப்புகள், கம்பளிப் போர்வைகள், பிள்ளைகளின் எச்சில் சட்டைகளில் படாவண்ணம் கட்டும் கழுத்துப்பட்டிகள், சாதாரண வீட்டுப்பாவனைக்கான விரிப்புகள், தலையணை உறைகள். ஆகியவற்றை கடதாசியிலேயே உற்பத்தி செய்கின்றன.

இதேபோன்று வேறும் பல ஆடம்பரமான உடைகளை அமைக்கப் பல கம்பனிகள் முயற்சியெடுத்துள்ளன இது மட்டுமல்ல, மிக அழகான வேலைப்பாடமைந்த, அதே சமயம் மிகமிக விலைகுறைந்த மணப்பெண்ணுக்கேற்ற உடைகளை அதுவும் கடதாசியில் செய்து வருகிறது இன்னொரு கம்பனி.






எல்லாச் சிறுமிகளும் போன்று சவுண் அணிந்து பிறந்தநாள் கொண்டாடுவேன் என்று நினைத்தீர்களா? எனது புதுவித உடை அலங்காரமும் சிகையலங்காரமும் அழகுராணிப் போட்டிக்கு நிற்கும் யுவதி போல் இருக்கிறது இல்லையா என்று கேட்கிறார்போல் இருக்கிறது சமீபத்தில் தனது 3-வது பிறந்த தினத்தைக் கொண்டாடிய இணுவிலைச்சேர்ந்த கலைமகள் சந்திரசேகரம்.

படம்: ஏவிஎம்

# தனிக்குடித்தனம் நடாத்தலாமா?

புதுமணத் தம்பதிகள் பெற்றோர் சகோதரர்களைப் பிரிந்து தனிக்குடித்தனம் நடத்தலாமா நடத்தக் கூடாதா என்பது பற்றி மலேசியப் பத்திரிகை யொன்றில் இடம் பெற்ற கருத்துக்களில் சுவையானவை சில இங்கு தரப்படுகின்றன.

புதுமணத் தம்பதிகள் தனிக்குடித்தனம் நடத்தக் கூடாது. காரணம் தனிக்குடித்தனம் நடத்தும் புதுமணத் தம்பதிகள். வரவு செலவுக் கணக்குத் தெரியாமல், பணத்தைக் கண்டபடி செலவு செய்வார்கள். அது மட்டுமா அலங்காரப் பேய்களால் (பெண்கள்) வைத்திருக்கும் பணமெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் கரைந்துவிடும். அதேசமயம் பெற்றோர்களுடன் வாழ்க்கை நடத்தினால். தம் பெற்றோர்கள் இருக்கிறார்களே, தம்பி, தங்கைகள் இருக்கிறார்களே அவர்களை நாம் படிக்கவைக்கவேண்டுமே, அவர்களைப் பெரியவர்களாக்கவேண்டுமே என்ற எண்ணம் அவர்கள் மனதில் இருக்கும். அதனால் அவர்கள் வரவுக்குத் தகுந்த செலவு செய்து குடும்பத்தை நன்கு கட்டிக்காப்பார்கள். இதனால் புதுமணத் தம்பதிகள் தனிக்குடித்தனம் நடத்தக்கூடாது என்பது என் கருத்து.

— ஆர். பாரதிசுந்தர்.

மனித வாழ்வில் பல மேடு பள்ளங்கள் ஏற்றத்தாழ்வுகள் ஒவ்வொருவருக்கும் பிரச்னையாக அமைந்து விட்டன. கடுமையான பிரச்னை பலவற்றை வாழ்வில் தனிக்குடித்தனமாக இருந்தால் எதிர்த்து நின்று போராடி வெற்றிகாணும் வாய்ப்புக் கிடைக்கும். வாழ்க்கை என்பது என்னவென்பதை முதலில் தம்பதிகள் குடும்பத்தோடுபடிக்கவேண்டும். (பழகவேண்டும்) குடும்பம் ஒரு கோயில் நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். கூடிவாழ்ந்தால் கோடி நன்மை. ஆகவே புதுமணத் தம்பதிகள் தனிக்குடித்தனம் நடத்தக் கூடாது.

—செல்வி. எம். வசந்தா.

தனிக்குடித்தனம் நடத்துவதில் புதுமணத் தம்பதிகள் தீவிரமாக இருந்தால், குடும்பம் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் போய்விடும். குடும்பத்தோடு இருந்து

[10ம் பக்கம் பார்க்க]

# ஓரே ஒரு தமிழ்ப் பெண்மணி



கொழும்பு மாநகரசபையில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டதோடு 1956-ம் ஆண்டு தொடக்கம் மாநகரசபைத் தேர்தலில் தோல்வியின்றி வெற்றியடைந்துவரும் ஒரேயொரு தமிழ்ப் பெண்மணியான திருமதி மீனா இம்முறையும் போட்டியிடுகிறார்.

முன்பு கொழும்பு மேயராகவிருந்த டாக்டர் குமாரன் இரத்தினத்தின் மனைவியான திருமதி மீனா தனது கணவர் இறந்தபின்னரே அதாவது 1956லேயே அரசியலில் புகுந்தார். சுயேச்சை அங்கத்தவராகவே போட்டியிடும் இவர் தனது கணவனைப் பின்பற்றி அன்றும் இன்றும்கூட்டணியினருக்கே தனது ஆதரவை அளித்து வருகிறார். சிறந்த சமூக சேவகியான இவருக்குச் சமீபத்தில் நீதியமைச்சு சமாதான நீதவான்பட்டம் அளித்தது சாலப் பொருத்தமுடைத்தாகும்.

எம். எம். சி., சமாதான நீதவான் ஆகிய பதவிகள் மட்டுமன்றி கொழும்பு ஆஸ்பத்திரி குழுவின் அங்கத்தவராகவுமிருந்து சௌக்கிய சேவை சிறப்பாகநடைபெற உதவிவருகிறார் மீனா. வெளிநாடுகளுக்குச் சென்ற கொழும்பு மாநகரசபைத் தூதுக்குழுவில் ஒருவராக ரஷ்யா, யூகோஸ்லேவியா, மேற்குஜெர்மனி, பேர்லின் ஆகிய நாடுகளுக்குச்சென்று அந்நாடுகளின் முன்னேற்றத்தையும் அதற்கானகாரணங்களையும் நன்றாக ஆராய்ந்து அறிந்துவந்துள்ளார். கொழும்பில் பிரபல்யம் வாய்ந்து விளங்கும் இரத்தினம் தனியார் ஆஸ்பத்திரியின் பங்குதாரரான இவரின் மக்களுக்கான சமூக சேவை பெரும்பாலும் சௌக்கியத் துறையிலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணைப் படிக்க வையுங்கள்

ஓர் ஆணைப்படிக்க வைத்தால் ஒருவரை மட்டுமே படிக்கவைத்தது போலத்தான் ஆகும்; ஒரு பெண்ணைப்படிக்க வைத்தாலோ ஒரு குடும்பத்தையே படிக்க வைத்தது போல்ஆகும்.

— டாக்டர் லீவர்

## பெண்ணா ஆணா

வயிற்றில் உள்ள குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதை ஐந்தாவது மாதத்திலேயே கண்டுபிடித்து விடலாம் என்று நியூயோர்க்கைச் சேர்ந்த ஐந்து டாக்டர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு அவர்கள் கையாளும் முறை மிக எளிதாகும். ஒரு பெரிய 'ஹைபோடெர்மிக்' ஊசியைத் தாயின் வயிற்றில் ஏற் குழந்தை மிதந்து கொண்டிருக்கும் திரவத்தைக் கொஞ்சம் எடுத்து ஆராய்கிறார்கள். கரும்புள்ளியிருந்தால் பெண் குழந்தை. இல்லாவிட்டால் ஆண் குழந்தை. நூற்றுக்கு நூறு இந்த டாக்டர்கள் சொல்வது பலிக்கிறது.

மங்கையர் அங்கங்களுக்கு

அதீத அழகைக் கொடுப்பது

நவநாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகைமாளிகையின்
தங்க வைர நகைகள்...
இன்றே விஜயஞ்செய்யுங்கள்.



தெய்வா நகை மாளிகை

173, காங்கேசன்துறை வீதி,
யாழ்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதூற்று

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தெய்வா: கந்தப்பு இதிலையென்னவென்றால், அவன்ர பேச்சைக் கேட்டு வாழணும் என்று சொல்கிறீயே அது தான் எனக்குப் பெரிய வேடிக்கையாக இருக்கு என்ர குடலாலை வந்த பிள்ளை இப்படி விகாரமாக போச்சே என்கிறதுக்காக, அதன் சென்னியைத் திருகி கொன்றுபோடு என்று சொல்லாமல் சொல்கிறானே என்ர தம்பி சண்முகம்-அவனைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்-? கந்தப்பு இந்த உலகத்தில் என்னை 'அம்மா' என்று கூப்பிட உள்ள ஒரே வாரிசு இந்தப் பிள்ளை ராமு ஒருவன் தான். இவன் என்னை அம்மா, அம்மா என்று கூப்பிட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக, அந்த யமனோடையே போர் தொடுக்க நான் தயாராக இருக்கின்றேன் தெரியுமா-?

க. கந்த: யமனையென்ன-யமபரம்பரையையே அழிச்சுப் போடுவியே... "ம்"... இவ்வளவு எல்லாம் சொல்கிறாயே தெய்வானை - நான் ஒன்று கேட்கிறேன்-? நீ திடீரென்று கண்ணை மூடிவிட்டால், இவன்ர கதி என்ன?-

தெய்வா: ஒன்பது பிள்ளைகளோடு உன்ர பெண்சாதி பத்தாவதையும் வயித்திலை கட்டிக்கொண்டு இருக்கிறாளே நீ திடீரென்று கண்ணை மூடிவிட்டால், அவளின்ரை கதி என்னவென்று என்ன நீ மனசில் நினைச்சுக்கொண்டு இருக்கிறியோ அதையே தான் நானும் நினைச்சுக் கொண்டு இருக்கிறேன் கந்தப்பு-

க. கந்த: (அதிர்வோடு) தெய்வானை.

தெய்வா: போதும் கந்தப்பு போதும் "அரைத்த மாவையே நீ திரும்பத் திரும்ப அரைக்காதே" தம்பிக்கு காலைச் சாப்பாடு கொடுக்க வேணும்- நான் வாறன்-

க. கந்த: தெய்வானை கொஞ்சம் பொறு- நான் சொல்வதைக் கேளு என்ன இருந்தாலும் உன்ர தம்பி சண்முகம் நாலு பேர்மதிக்க நல்ல பெயரோடு பெரிய மனுஷனாக வாழுகிறான். அப்படியிருக்க, அவன்ர அக்காள், பிள்ளையார் கோவில் சத்திரத்தில். குடி இருக்கிறாள்-ஓடு சுமந்து வயிற்றைக் கழுவுகிறாள் என்றால் அவனுக்கு வெட்கமாக இராதோ-? சொல்லுபார்ப்போம்?

தெய்வா: 'ஜோவ்'... ஓடு சுமந்துதானே நான் அவனை வளர்த்தேன் அப்போது அவனுக்கு இந்த வேலை வெட்கமாகப்படவில்லையோ? இப்பதான் வெட்கமாக இருக்குதாமோ? கந்தப்பு நேற்றுத்தைச்ச சட்டை, நாளைக்கு அளவில்லாமப் போவதைப்போல- இவனின் இன்றையப்பகட்டு நாளைக்கு அவுட்டு-ஆமா.

க. கந்த: தெய்வானை, வைராக்கியத்தை விட்டிட்டு நான் சொல்வதைக் கேள். பேசாம, சண்முகம்சொன்ன மாதிரி ராமுவை எங்காவது சப்பாணிகள் மடத்தில் சேர்த்துப்போட்டு —

தெய்வா: (ஆக்ரோஷமாக) "கந்தப்பு"!

க. கந்த: வயதான நேரத்தில் நிம்மதியாகதம்பியோடு போய் இரேன். அவலட்சணமான இவனை —

தெய்வா: (ஆத்திரத்தோடு) என்ன சொன்னாய்-? என்ன சொன்னாய்? இன்னொருமுறை இப்படி நீ சொன்னியோ, இந்தச்சல்லி ஓட்டாலே உன்ர மண்டையைப் பிளந்து போடுவேன் தெரியுமா? நான் பெத்த பிள்ளைக்கு இந்தக் கட்டையிலே உசிர் இருக்கிறவரை உழைச்சுச் சோறு கொடுப்பேனே ஒழிய, ஒண்டியாய், தனிமரமாய் தெண்டச்சோறு திண்டு வாழ நான் விடப் போவதேயில்லை. (குமுறி அழுது) கந்தப்பு-கந்தப்பு உலகம் என் பிள்ளையை ஒதுக்கிவிட்டது. ஆசா பாசங்களையெல்லாம் பறித்துக்கொண்டு விட்டது. இந்த நிலையிலை, பெத்ததாய் இருந்தும், அது தனிக்கட்டையாக எங்காவது மடத்திலை இருந்தால் அதன்மனசு என்ன பாடுபடும் கந்தப்பு என்ன பாடுபடும். நின்று அதைக்கொஞ்சம் நினைச்சுப் பார்-நான் வாரன்.

(திண்ணையில் படுத்திருக்கும்ராமுவைஒருமுறைஉற்று நோக்கிவிட்டு தெய்வானை வேகமாக போய்விடுகிறாள்.)

க. கந்த: இந்தஉலகத்தில் பொய்யாக வாழ்பவர்கள் மனுஷர்களே இல்லையென்று சொல்லாமல் சொல்லப் போறாளே தெய்வானை-என்னவிருந்தாலும் அவள் ஒரு தாய்-ஆமாம் அவள் ஒரு தாய் (ராமுவுக்குக் கிட்ட வந்து) பிள்ளையார் உன்னைக் கைவிடவேமாட்டான்.

(அமைதியாக அவ்விடத்தைவிட்டு நகர்கிறார் கந்தப்பு கிழிந்த போர்வையால் இழுத்துப் போர்த்துக் கொண்டிருந்த ராமு போர்வையை விலக்கி வெளியே தலையை நீட்டிப்பார்த்துவிட்டு, அவசரமாக எழுந்து சத்திரத் திண்ணையிலிருந்து கீழே இறங்கி அரைந்து கொண்டு கோவில் முகப்பு வாசலுக்கு வந்துவிடுகிறான்)

ராமு: (குமுறும் உள்ளத்துடன்) பிள்ளையாரே... என்ர பிள்ளையாரே...இப்ப இங்கே என்ர அம்மாச்சியும், அந்த மனுஷனும் கதைச்சதையெல்லாம் நான் கேட்டுக் கொண்டுதானே இருந்திருப்பாய்... (கண்ணீர் சொரிகிறது விம்மியபடி) சொல்லு பிள்ளையாரே மனுஷரைப் போலை எல்லாத்தையும் எனக்குத்தந்து போட்டு, ஒவ்வொண்டிலையும் ஒவ்வொரு பாதியைப் பிடுங்கிக் கொண்டியே-மற்றப் பாதியை நீ என்ன செய்து போட்டே? என்னைப்போல ஒவ்வொருவனையும் வேறு எங்கேயாவது நீ வைச்சிருக்கிறியா? சொல்லேன்-(விம்மி அழுதுகொண்டு) என்ர அம்மாச்சிக்கு என்னாலை எவ்வளவு துக்கம்? எவளவு கஷ்டம்? அதுக்கு இன்னும் நான் பாரமாக இருக்க வேண்டுமா? பிள்ளையாரே... என்னை சாகக்கொல்லு... பிள்ளையாரே என்னை சாகக் கொல்லு...(விம்மி அழுகிறான்)

(அங்கு வந்த தெய்வானை இதைக்கண்டு மலைத்து நிற்கிறாள்) கணபதி என்ர அம்மா பாவம்... என்னைப் பாரு...என்ர தேகத்தாலை இருக்கிற ஊத்தையைப் பாரு... நானும் ஒரு மனுஷனா? சொல்லுகணபதி-

தெய்வா: (கண்களில் நீர் சொரிய) "ராமு"

ராமு: (திடுக்குற்றுத் திரும்பி) "அம்மாச்சி (ஆர்வத்தோடு) என்ர அம்மா... வந்துட்டாயா ... வா ... வா அம்மா...

(கோவில் முகப்பில் கீழிறங்கி அரைந்துகொண்டு வந்து தெய்வானையின் கண்களை வாஞ்சையோடுஅணைத்துக்கொள்கிறான்).

தெய்வா: (அவன் தலையை தடவியபடி) ராமு - பிள்ளை யாரிடம் என்ன கேட்டுக் கொண்டு இருந்தாய்...?

ராமு: ஒன்றுமில்லையணே! கணபதியோடு கொஞ்ச நேரம் கதைச்சுக்கொண்டு இருந்தேன்.

தெய்வா: (நீண்ட பெருமூச்சுடன்) அழுக்கு அவலட்சணம்-ஊத்தை- பயங்கரம், கெதியாய் என்னைக்கொன்று போடு என்றுதானே கேட்டிருப்பாய்?

ராமு: (செல்லமாக) போனையம்மா. உனக்கு நெடுக இந்தக் கதைதான். நான் சும்மா கதைச்சுக் கொண்டு இருந்தனென்றால்?

தெய்வா: என்னதான் சும்மா கதைச்சுக் கொண்டிருந்தாலும் நான் சொல்வதைக் கொஞ்சம் கேள்? இந்தப்பிள்ளையார் இருக்கிறாரே இவரை உமை தன்ர தேக ஊத்தையிலிருந்து படைத்துதனக்குக்காவலாக வைத்துக் கொண்டாளாம்-அதுபோல உன்னையும் இப்படிப் படைச்சு இவருக்குக் காவலாக இந்தத் திண்ணையிலை வைத்திருக்கிறாளோ என்னவோ? ராமு கணபதியின் பிறப்பே அழுக்கென்றால் - இது எம்மாத்திரம்... என்ர ராசா! நீ இதையெல்லாம் நினைச்சு நீ கவலைப் படலாமா?

ராமு: அம்மாச்சி... எணெய் அம்மாச்சி உனக்கு என்னாலை சரியான கஷ்டமும் துக்கமுமல்லவோ?

(தொடரும்)



முப்பது ஆண்டுகளுக்கு மேல்
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்தநாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி ஆபரண மாளிகை
224, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA


# தங்கருமஞ்செய்வார்

உலகில் எத்தனையோ பேர் எத்தனையோ கருமங்களைச் செய்கின்றார்கள். ஆனால் அவர்கள் செய்யும் கருமங்களை உள் நுழைந்து ஆராய்ந்து நோக்கின், அவர்கள் ஏதோ எதிலோ கொண்ட ஆசை காரணமாகவே கருமங்கள் செய்வதாகக்காணப்படுவர். ஆன்மா பிறவி எடுக்கும் பொழுது கூடப்பிறந்தவர்கள் ஐவர். அவர்கள் அவ்வான்மாவுக்கு உறுதுணையாக இருப்பதற்குப் பதிலாக அதன் கொடிய பகைவராய் விடுகின்றனர். ஆன்மாவினை நல்வழியிற் கொண்டு செல்வதற்காக அதை ஒவ்வோர் தீயவழியில் வழிகாட்டிச் சென்று துயரில் ஆழ்த்துவதே அவ்வுடன் பிறப்பாளரின் இயல்பாகின்றது

அவ்வுடன் பிறப்பாளர் தாம் யாரோ? பஞ்சப்புலன்கள் — மெய், வாய், கண், மூக்கு, செவி— ஆன்மாவாகிய குதிரையில் இவர்கள் இவர்ந்து சவாரி செய்யும் வரையும் ஆன்மா ஈடேற்றமடையவியலாது. ஆனால் என்று ஆன்மா தனது உண்மை நிலையையறிந்து, பஞ்சப்புலன்களைக் குதிரைகளாக்கிக் கலினத்தைச் சுண்டப்பிடித்துத்தான் நினைத்தபடி புலன்களையடக்கிச் செலுத்தும் வன்மையைப் பெறுகின்றதோ, அன்றுதான் ஆன்மாவின் நற்காலம் ஆரம்பிக்கின்றது.

இது சாதாரணமாக வந்தெய்துவது இயலுமா? அன்று. தவத்தினாற்றான் ஆகவேண்டும். தவமென்பது மனம் நினைத்தபடி பொறிகளிற் செல்லாமல் தடுத்தற் பொருட்டுச் சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு அனுட்டிக்கப்படும் விரதங்கள். இது கடவுளை முன்னிலைப்படுத்தித் துணையாகக் கொண்டு செல்வது இனித் தவஞ்செய்வோர் பிறவுயிர்களையெல்லாம் தமதுயிராகக் கருதவேண்டும். தமக்கு வரும் துயர்கள் யாவும் முன்வினைப் பயனாக வருவனவாக எண்ணி அவைகளைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். தவம் செய்பவர் எல்லோரையும்ஒரேதன்மையாக நோக்கவேண்டும்.

உலகில் எல்லாரும் தவம் செய்ய உந்தப்படுகின்றாரோவெனில், அதுவுமன்று. பூர்வபுண்ணியப் பயன் உடையவரே தம் நிலையை ஆராய்ந்து நோக்கித் தவஞ்செய்யப் புறப்படுகின்றார். உலகில் எத்தனையோ பெரியோர்கள் தவஞ்செய்து அடைந்த பேறுகளை நாம் புராணங்கள் இதிகாசங்கள் மூலம் அறிகின்றோம். உரிய முறையில் தவஞ் செய்தக்கால் பெறவியலாததுஒன்று

[13ம் பக்கம் பார்க்க]

# நாவலர் தொண்டு...

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

அவமதிக்கவுமில்லை என்கின்றார் நாவலர்.

நீதியே சமயத்தின் ஆணிவேர். நீதிநெறியில் நடந்தவர்கள் எச்சமயத்தினரேயாயினும், அவர்களைப் பாராட்ட நாவலர் எட்டுணையும் தவறியதில்லை. ஒரு முறை ஏழைகளுக்கிரங்கிய பிறசமயத்தவர்களை எல்லை கடந்து பாராட்டினார்.

எச்சமயத்தையும் நிந்தியாத ஒரு சமயம் இருந்தால் அது சைவசமயமேயாகும். எல்லாச்சமயமும் இருப்பது நீதிதான் என்று சொல்லும் சமயம் சைவசமயம் ஒருவனை அவன் தன் சமயநெறியில் ஒழுகவிடாது தடுப்பதைச் சைவசமயம் ஒப்புக்கொள்ளவதில்லை. ஒவ்வொருவரும் தத்தம் சமயத்தை அறிந்து. அவ்வச் சமயநெறிவழி ஒழுகுவதே முறையென்று சொல்லுஞ் சமயம் சைவசமயம்.

பார்சிவற் பாதிரியார், மேன்மை பொருந்தியதாகிய சைவநீதியை, நாவலர் பாற்கண்டார்; கண்ட மாத்திரமே. சற்றுந்தயங்காமல், நாவலரை 'மமகுரு' என்று துதித்தார். 'மம' என்பது சமஸ்கிருத வார்த்தை; எனது என்பது அதன் பொருள். நாவலரை 'எனது குரு' என்றார் பார்சிவல்.

பார்சிவலின் நீதியைக் கண்ட நாவலர், அவர் பெயரைக் கூறும்போதெல்லாம், பார்சிவல்துரை என்றே கூறுவார். நீதியை நீதி மதித்தது.

பார்சிவல், பைபிளை நல்ல தமிழில் திருத்தித் தரும்படி கேட்டபோது, நாவலர் சற்றேனும் தயங்கியதில்லை. திருத்திக்கொடுத்தார். அதே சமயத்தில், நீதியிற் பிறழ்ந்து, மதமாற்றம்நடப்பதைக் காணுந்தோறும், பெரியதொரு எரிமலையாய் வெடிப்பார் நாவலர்.

அன்றூஸ் பாதிரியாருக்கும், மகாத்மா காந்திக்கும் இருந்த தொடர்பு, பார்சிவற் பாதிரியாருக்கும் நாவலருக்கும் இருந்துவந்தது.

மகாத்துமா காந்தியடிகளின் சீர்திருத்தம், மலகூடத்தைச் சுத்தஞ் செய்வதிலிருந்து தேசவிடுதலை பரியந்தம் எல்லாத்துறைகளிலும் பரவியது.

நாவலர் தாம் சிரமேற் கொண்ட நீதியை ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தல் தொடக்கம், இலங்கைப் பிரதிநிதித் தெரிவு வரை பரவச் செய்தார். அதனாலே இன்று உலகம் பாகுபாடு காட்டாமல், நாவலரை மதிக்க முன்வந்திருக்கிறது.

நாவலர் பெருமான் வகுத்த திட்டங்களுள் சிறந்தவொரு திட்டம் ஐந்தாண்டுத் திட்டம்.

குறிப்பிட்ட திட்டம் நாவலரது இளமைப்பருவத்திலேதானே பார்சிவல் பாதிரியாருடன் கிறிஸ்தவ சூழலில இருக்கும்போதே கருக்கொள்ளத் தொடங்கிவிட்டது. பாதிரிமாரின் நடைமுறைகளைப் பார்த்துத்தான் குறித்த திட்டத்தை வகுத்தார் என்று கிறிஸ்தவர்களும் வேறு சிலரும் சொல்வதுண்டு. உண்மையும், விவேகமும், நற்சிந்தனையும் உள்ளவர்கள் வகுத்த திட்டம், வேறு எப்படி இருக்கமுடியும் என்று சிந்திப்பவரும்உண்டு.

நாவலர் திட்டம் இளமையில் கருவுற்றதாயினும் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் 1869-ம் ஆண்டு முதுமைப்பருவத்திலேதான் எழுத்தில் வெளிவந்தது. திட்டம் எழுத்தளவில் இருந்தபோதும் நாவலர் தமது இருபத்திரண்டாம் வயதில், 1845-ம் ஆண்டில் குறிப்பிட்ட திட்டத்தைக் கையாண்டு, ஐந்தாண்டுத் திட்டத்தை, மூன்றாண்டில் நிறைவுசெய்து பெருவெற்றியுங் கண்டார். தம்மோடொத்த வயசினரையும், பிறரையுஞ் சேர்த்து இரவிலும் காலையிலும் படிப்பித்துத் தக்கசமயப் பிரசாரகர்களையும்கற்று வல்ல உபாத்தியாயர்களையும்ஆக்கிக்கொண்டார்.

1847 டிசெம்பர் 31-ந் தேதி இரவு, 1848-ம்ஆண்டு பிறக்கச் சிலமணி நேரங்களுக்கு முன், வண்ணைச்சிவன் கோவிலில் வெற்றிச் சங்கு முழங்கியது. நாவலர் தம் சீடர்களுடன் சைவப்பிரசாரகராய் அங்கே தோன்றினார். 1848 ஆவணியில், வண்ணார்பண்ணையில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலை தாபிக்கப்பட்டது. கற்றுவல்ல உபாத்தியாயர்கள் நியமனம்பெற்றார்கள். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இரண்டாம்உபாத்தியாயர். காசிவாசி செந்திநாதையர் நாவலர் திட்டப்படி வந்த சைவப்பிரசாரகர். சபாபதி நாவலர் முதலிய சபாப்பிரசங்க சிங்கங்கள் தோன்றினார்கள்.

புலோலி, நா. கதிரைவேற்பிள்ளை நாவலரின் மாணவ பரம்பரையில் வந்தவர் பழைய நூலுரைகள் - புத்தம்புதிய நூல்கள் - வெளிவந்தன. நாவலர் வசன உலகின் தந்தையும் ஆயினர். அவர் திட்டம் ஆல்போல் தழைத்துத்தாய்நாட்டுக்கும் தண்ணிழல் செய்தது. பிற்காலத்தில் எழுந்த தாபனங்கள், நாவலர் இட்ட வித்தின் முளைகளே,

கனவான்கள், நாவலரின் நீதிவழுவா நெறிமுறைகளையும், அவர் வகுத்த திட்டங்களையும் சிந்திப்பார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெப்ப நாடுகளில் 'ஈ'க்களின் தொல்லை

அநேக நோய்கள் மனிதனைப் பீடித்து கொள்வதற்குரிய காரணம் ஒட்டுண்ணிகளே. ஒட்டுண்ணிகளை நாம் நோய்காவிகள் என்றும்மறு பெயரால் அழைக்கின்றோம். ஒருவரிடம்இருக்கும்நோய்க் கிருமிகளை இன்னொருவருக்கும காவிச்சென்று அந் நோயைஅவருக்கும்தொற்ற வைப்பதால் இவைகளை நோய்காவிகள் என அழைக்கின்றோம். நுளம்பு, தெள்ளு ஈ, பேன், மூட்டைப் பூச்சி போன்ற நோய்காவிகளில் ஈயே வைத்தியர்களால் பிரதான நோய்காவியென குற்றம் சாட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏனெனில்மற்றயநோய்காவிகள் எல்லாம் ஒன்று இரண்டு நோய்களை மனிதனுக்குப் பரப்புகின்றன. ஆனல் வீட்டு இலையானே அநேக நோய்களை மக்களுக்குப் பரப்புகின்றது.

ஈ அசுத்தத்தில் பிறந்து அசுத்தத்தை உண்டு அசுத்தத்தில் வளரும்ஒருபிராணி. ஒரு பெண் ஈ ஒருமுறைக்கு ஏறக்குறைய 130 முட்டைகள் இடும். இம்முட்டைகள் சூரியனுடைய உஷ்ணத்தினல் இரண்டுவாரங்களில் வீட்டு ஈயாகப்பருவம் அடைந்து விடுகின்றது. ஈயின் முட்டைகள்முறையே புழுவாகவும்பின்னர் உறங்கு புழுவாகவும் பின்னர் 2 நாட்களில் இறக்கைகள் வளர்ந்து வீட்டு இலையானுகவும் மாறுகின்றது இது கிட்டத்தட்ட கால் அங்குல நீளமுடையது.

### எப்படி ஈ'நோயைக் காவிச்செல்லுகிறது?

ஈ எப்படி நோயைக்காவிச் செல்லுகிறது எனநாம் ஆராய்ந்து பார்த்தால் அது இரண்டுவிதமாக நோயை அதாவதுநோய்க்கிருமிகளைக் காவிச் செல்லுகின்றது எனப்புலனும். ஈ தனது வாய், இரைப்பைமூலமும் தனது உடல் கவசத்தின் மூலமும் நோய்க் கிருமிகளைக் காவிச் செல்லுகின்றது.

### வாய்'இரைப்பை'மூலம்

ஈ நீர்த்தன்மையான அசுத்தங்களையே விரும்பி உண்ணும் போது அசுத்தங்களும் அசுத்தத்திலுள்ள நோய்கிருமிகளும் இதன்

— ஏ. சத்தியசீலன் —

வாய்வழியாக இரைப்பையை அடைந்து அங்கு தங்கிநிற்கும். தனது சாப்பாட்டை முடித்துக் கொண்ட ஈ வேறு வேறு இடமெல்லாம் சென்று வரும்போது இரைப்பையில் வெவ்வேறு விதமான நோய் கிருமிகளைக் காவிக்கொண்டு வரும்.

இந்த ஈ நீர்த்தன்மையான உணவுகளையே விரும்பி உண்ணும் என்று கூறினேன். சோறுபோன்ற கனத்த உணவுகளையும் ஈ உண்ணும். சோறு போன்ற கனத்த உணவுகளை ஈ உண்ணவேண்டுமானல் அதை மென்மைப் படுத்தவேண்டும். ஈ கடின உணவுப்பொருட்களை மென்மைப்படுத்துவதற்கு இரைப்பையிலிருந்து ஒருவித அசிட் தன்மையான நீரை உணவின் மேல் பாய்ச்சுகின்றது இந்த நீர் உணவை மென்மைப் படுத்துகின்றது. ஆனல் உணவின்மேல் ஈயினல்பாய்ச்சப்பட்ட அசிட் நீரில் நோய்களை உண்டாக்கக்கூடிய நோய்க்கிருமிகளும் கலந்து வந்து, உணவின்மேல் பரவுகின்றது ஈ தன்போசனத்தை முடித்துக்கொண்டு எழுந்து

(14-ம் பக்கம் பார்க்க)

## உங்களுக்கு தான்....

மாணவர் மலருக்குத் தாங்களும் விஷயதானங்களை எழுதி அனுப்பினல் பிரசுரிப்பீர்களா என பல மாணவ மாணவிகள் கடிதம் எழுதிக்கேட்டுள்ளனர். அனைவரது ஊக்கத்திற்கும் எமது பாராட்டு. மாணவர்மலரில் எல்லோருமே பங்குகொள்ளலாம். மாணவ மாணவிகள் எவராலும் எழுதவிரும்பும் விடயங்களை எமக்கு அனுப்பிவையுங்கள். உங்களுக்காகத்தானே 'மாணவர் மலர்' வாராவாரம் மலர்கிறது!

பல மாணவர்கள் அனுப்பிவைத்துள்ள விடயங்கள் கடந்த சில வாரங்களாக இடமின்மையால் பிரசுரமாகவில்லை. இடமிருக்கும் போது அவை வெளியாகும். நீங்கள் விடயங்களைத்தொடர்ந்து அனுப்பிவையுங்கள்.

— காசி

## இவரிடம் இலகுவாகப் பெறலாம்

1963-ம் ஆண்டு வெளிவந்த 'ஈழநாடு' 'மாணவர் மலரில்' பிரசுரமாகியிருந்த ஒரு கட்டுரையின் பிரதி ஒன்று தமக்குத் தேவையெனவும், அதைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்றும் ஒரு மாணவர் அண்மையில் கேட்டிருந்தார். திகதி சரியாகத் தெரியாததால் எம்மிடம் அதைப்பெற்றுக் கொள்வது சிரமம். ஊரெழு மேற்கைச் சேர்ந்த செல்வன் ஏ. கனகசூரியர் 1962-ம் ஆண்டு தொடக்கம் வெளியான மாணவர் மலரை ஒன்றும் தவறவிடாமல் வைத்திருப்பதாகக் கூறுகிறுர். தேவையான பிரதிகளை இவருடன் தொடர்பு கொண்டால் இலகுவாகப் பார்த்துக் கொள்ள முடியும். விலாசம்: ஏ. கனகசூரியர், ''அருள் வாசா, ஊரெழு மேற்கு, சுன்னுகம்.



சைக்கிள் மீது சவாரிசெய்யும் இவர் கைதடியைச் சேர்ந்த செல்வி சாந்தினி சுப்பையா. இவர் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று கொண்டாடுகிருர். இவர் என்ன யோசித்துக்கொண்டு சவாரிசெய்கிருர்? என்பதை ஐந்து வரிகளுக்கு மேற்படாது இம்மாதம் 12ம் திகதிக்கு முன்னர் மாணவர் மலருக்கு அனுப்பி வையுங்கள். அடுத்த மாணவர் மலரில் அவை உங்கள் பெயருடன் வெளியிடப்படும்.

## உலகில் பெரிய தொலைநோக்கி

இங்கிலாந்திலுள்ள வானொலி தொலைநோக்கி உலகிலேயே மிகப் பெரியது. இதன் எடை 2000 டன். ஆனலும் அதைச் சிறிய விரலால் நகர்த்தமுடியும். இதில் பிரதிபலிக்கும் பரப்பினைக் கொண்ட பகுதிமட்டும்750 டன். 83 கஜ விட்டம்உடையது. வானவெளியில் 1000,000,000 ஒளி ஆண்டுத் தொலைவுவரையில் ஏற்படும் வானொலி அலைகளை இந்தக் கருவி பதிவுசெய்யும் ஆற்றல்கொண்டது.

## தம்பலப் பூச்சி

— வே. குமாரசாமி —

தம்பலப் பூச்சி—
குங்குமப் பொட்டாய்
செம்பவ ளம்போற்
செல்வது பாரீர்!

பஞ்சினைப் போலே
பட்டுடல் தொட்டால்
நெஞ்சிலே இன்பம்
நிறைவது காணீர்.

வெற்றிலை போட்ட
சித்தப்பா வாய்போல்
முற்றுமே இரத்தம்
மூடிய உடலே.

தவழுவ தெங்கும்
தயவுட னேநீர்
கவனமாய் நடந்து
காத்திடுவீரே.



தன் தாயைப்போலவே குதிரைச்சவாரியில் மிக நாட்டங்கொண்டவர் இளவரசி ஆன். குதிரையோட்டப்போட்டி எங்கு நடப்பினும், அங்கு அவரைக் காணலாம். சமீபத்தில் இவர் வெம்பிளியில் நடந்த 'இவ்வருடத்திய குதிரைப்போட்டியில் தமது பிரியமான 'ரேயல் ஓஷன்' என்ற குதிரையுடன் பங்குபற்றினர்.

## தங்கருமஞ்செய்வார் ....

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

மில்லை. மேலும் தவஞ்செய்யப் புறப்படுவோர் இடையில் பல துயர்களையடைய வேண்டியிருப்பதும் உண்மையே. பொன்னை அக்கினியிற் காய்ச்சக் காய்ச்சத்தான் மாற்று ஏற்றமடைகின்றது. அதுபோல் எம்மைப் பீடித்த குற்றங்கள் நீங்கி நாம் பரிசித்த நிலையடைதற்குத் துயர் துக்கங்களை இடையில் அடைவதும் வேண்டப்படுவதே.

ஆகவே ஆன்மாக்களாகிய நாம் எமக்குரிய தவமாகிய எமது கருத்தைச் செய்தல் வேண்டும். பலவித ஆசைகளால் உந்தப்பெற்று மயக்கமடைந்து அவச் செயல்களை நாம் ஒழித்தல் வேண்டும். இதுவே நாம் உய்யவழி.

'தவஞ்செய்வார் தங்கருமஞ்
செல்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட்
பட்டு.'

(தங்கருமஞ் செய்வார் யாரெனில் ஆசைகளைக் கைவிட்டுத் தவஞ்செய்பவர். இவர்களையன்றிப் பொருளின்பங்களைப்பெற முயல்வோர் அவற்றில் ஆசை கொண்டு தமக்குக் கேடு செய்பவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பு கடித்துவிட்டால் உடன்செய்யவேண்டியதென்ன

## மக்களைக் கடித்துக் கொல்வதற்காக பாம்பு படைக்கப்படவில்லை

பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பர். பாம்பென்று சொல்லும் போதே பயமுண்டாகும் போது, பாம்பைக் கண்டு விட்டாலோ...... இருட்டில் நாம் நடந்து வரும்போது வழியில் பாம்பு போன்று கயிறோ அல்லது மரவேரோ கண்ணுக்குப் பட்டுவிட்டால் பயத்தால் உடல் நடுங்கித் துள்ளிக் குதித்து ஓடுகின்றோம், இப்படியாகப் பாம்பென்று சொல்லக் கேட்டாலே பயந்து நடுங்கும் நமக்கு, பாம்பு கடித்தது என்றால் பயத்துக்குச் சொல்லவேண்டியதில்லை.

கொட்டடி பாம்புக்கடி வைத்தியர்
### க. சிற்றம்பலம்

சிலர் பாம்பு கடித்தவுடனே செய்வதென்னவென்று தெரியாது, பதற்றமடைந்தும், பயங்கொண்டும், இனிப் பிழைக்கமாட்டோம் என்று எண்ணியும் தன்னம்பிக்கையிழந்து, விஷத்தினால் ஏற்படும் ஆபத்திலும் பார்க்கப் பயத்தினால் ஏற்படும் அதிர்ச்சியால் மரணத்தைத் தாங்களாகவே வருவித்துக் கொள்கின்றார்கள்.

**பாம்புக்கடி**

இறைவனின் படைப்பில் மக்களைக் கடித்துக் கொல்ல வேண்டும் என்பதற்காகப் பாம்பு படைக்கப்படவில்லை பாம்பும் பல வழிகளில் மக்களுக்கு உதவிக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றது என்றாலும் பொருத்தமுடையதே. காரணம், உலகில் வாழும் சிறு பிராணிகளை அவை பிடித்து உண்பதன் மூலம் மனித சமுதாயத்திற்கு நன்மைகள் கிடைக்கின்றன. கமக்காரனின் தானியங்களை நாசம் செய்யும் எலி, தவளை முதலியவைகளை அவை பிடித்து உண்ணுவதால் அவை மனிதனுக்கு உதவி செய்கின்றன எனலாம். உலகில் விளையும் தானியங்களில் கோடிக்கணக்கான புசல் தானியங்களை எலி தின்று அழித்து விடுவதாக ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டிருக்கின்றார்கள். இப்படிப் பரந்த நோக்குடன் நோக்குகையில் பாம்பும் உலகில் வேண்டுவதாக இருக்கவில்லையா?

பாம்புக்கு விஷமிருப்பதால்தானே அதைக் கொடுமையுள்ளதென எண்ணுகிறோம். அதற்கு ஏன் கடவுள் விஷத்தைக் கொடுக்கவேண்டும் என ஆராய்ந்தால், அதன் தற்பாதுகாப்பு ஆயுதமாகவே அமைந்துள்ளதைக் காண்கின்றோம். இப்படியே உலகிலுள்ள ஒவ்வொரு பிராணிக்கும் இறைவன் தற்பாதுகாப்புக்கான ஆயுதத்தை வழங்கியிருக்கிறார். பாம்பு தன்னைப் பாதுகாத்துக்கொள்ள எண்ணியே நம்மைக் கடித்து விஷத்தைக் கக்குகின்றது.

இனிப் பாம்பு கடித்து விஷம் நமக்குத தாக்கப்பட்டால் என்ன செய்யலாமென்பதை ஆராய்வோம். பாம்பு கடித்தவுடன் தக்க முதலுதவி செய்யப்பட்டால் பாம்புக்கடியால் ஏற்படும் விஷத்தால் மரணம் விளையாது தப்பலாம்.

எப்படியான பாம்பு கடித்தாலும் கடித்தவுடன், கடித்த இடத்திலிருந்து விடத்தை எவ்வளவு எடுக்கமுடியுமோ அவ்வளவு எடுக்க வேண்டும். மற்ற இடங்களில், அவ்விஷம் பரவாது உடனே தடைசெய்யப்பட வேண்டும்.

1 கடித்த இடத்திற்கு மேல் உடனே துணியினாலோ கயிற்றினாலோ அல்லது ரப்பர்துண்டினாலோ இரண்டல்லது மூன்று அங்குல மேலாக இறுக்கிக் கட்டப்படல் வேண்டும். இதனால் இரத்தம் இரத்தாசியத்திற்குப் போகாது தடைப்படுத்தப்படும்.

2 உடனே கடித்த இடத்தைத் துப்புரவு செய்து, கழுவுதல் வேண்டும். அல்லது உடனடியாகக் கடிக்கிலக்கானவர் தன்னுடைய சிறுநீரையாவது கடித்த இடத்தில் பெய்து விட்டாலும் பரவாயில்லை. கடித்த இடத்தைத் துப்புரவு செய்தபின்னர் துருப்பிடியாத கூரான கத்தியினால் தாக்கப்பட்ட பற்களைத் தொடுத்துப் புள்ளடிபோல் (X) சிறுகீறு போட்டு இரத்தத்தைக் கறந்து எடுத்தல் வேண்டும். வாய்ப்புண் இல்லாதவர்கள் வாயைவைத்து இரத்தத்தை உறிஞ்சி உமிழ்ந்து விடவேண்டும்.

3 கடிபட்டவருக்கு இரத்தோட்டத்தை அதிகரிக்கக்கூடிய உணவுப்பொருட்களையோ மதுபானவகைகளையோ, கோப்பி தேநீர் போன்றவைகளையோ குடிக்கக் கொடுக்கக்கூடாது.

4 பய உணர்வு தரக்கூடிய செய்திகளைக் கடிபட்டவருக்குக் கூறக்கூடாது. திடமான வார்த்தைகளைக் கூறி தன்னம்பிக்கையை உண்டாக்க வேண்டும்.

5 உடனடியாகத் தக்க வைத்தியரிடம் கொண்டு செல்ல வேண்டும். சிலர் பாம்பு கடித்தவுடன் தகுதியான வைத்தியர்களிடம் கொண்டு செல்லாமல், தாம் நினைத்தவாறெல்லாம் வைத்தியம் செய்து, முடியாத நிலையில்தான் வைத்தியரை நாடிச் செல்வார்கள். இதனால் அவமாக அவர்களின் உடலில் விஷம் பரவச் செய்து ஈற்றில் துன்பப்பட ஏதுவாகின்றது.

**பயமும் விடமும்**

சிலர் பாம்பு கடித்தவுடன் மயங்கி விழுவதுண்டு. இந்த மயக்கம் சிலருக்குப் பயத்தினாலும் ஏற்படக்கூடும். ஆகவே மனோதைரியம் கூடச் சிலரைப் பிழைக்கவைக்கவும் செய்யும். ஆகவே பயங்கொள்ளக் கூடாது.

**பயத்தினால் ஏற்படும் மாற்றங்கள்:**

1 திடீரெனச் சோர்வுண்டாகும்.
2 தன்னறிவற்று நிற்க முடியாமல் போகும்,
3 முகம் திடீரென வெளுத்து விடும்.
4 தேகம் குளிர்ந்து விடும்
5 நாடி தெளிவாக இருக்காது.
6 சாதாரணமாக மூச்சு விடப்படும்.
7 முகத்தில் வியர்வை ஏற்படும்

**விஷம் நீண்டினால்......**

1 படிப்படியாகச் சோர்வு ஏற்படும்.
2 தன்னறிவுடன் சிறிது தூரத்திற்கு நடக்கமுடியும்.
3 கண் இமை திறக்கமுடியாது.
4 கண் ஒளியில் மங்கல் ஏற்படும்.
5 [illegible]

[15ம் பக்கம் பார்க்க]

## வெப்ப நாடுகளில்....

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுவிடும். பின்னர் மனிதன் தன் போசனத்தைத் தொடங்குகின்றான். அவன் உண்ணும் அந்த உணவுடன் நோய்க்கிருமிகளும் அவனுடலில் செல்லுகின்றது. இதனால் மனிதன் காலகதியில் நோயினால் பாதிக்கப்படுகின்றான்.

**ஈயின் உடல் கவசத்தின்மூலம்**

நாம் ஈயை நன்கு அவதானித்தால் ஈயின் உடல் கவசம் முழுவதும் சிறியஉரோமங்களைக் காணலாம். இன்னும் நாம் அவதானித்தால் இந்த உரோமங்களில் அழுக்குப் பொருட்கள் ஒட்டிக்கொண்டு இருப்பதைக்காண முடிகின்றது. ஈயின் கால்களில் பிசின் போன்ற பொருள் எப்பொழுதும் காணப்படுகின்றது. இதுதலைகீழாக சுவர்களில் ஒட்டிக்கொண்டுநிற்பதற்கு இதுவே உதவிசெய்கின்றது. இப்படிப்பட்ட பிசின் ஈ அசுத்தங்களில் இருக்கும்போதும் அசுத்தத்தைத் தன்னுடன் ஒட்டிக்கொள்ளுகின்றது. பின்னர் இது உணவுகளிலும் மனிதனுடைய அவயவங்களிலும் இருக்கின்றது. இது இருந்த இடத்தில் நோய்க்கிருமிகள் பற்றிக்கொள்ளுகின்றன. இதனால் சுகதேகியான மனிதன் நோயினால் பீடிக்கப்படுகின்றான். ஈ, கண்ணோய், வாந்திபேதி, சீதபேதி, இரத்தபேதி, தொண்டைக்கரப்பன், சின்னம்மை, கைபோயிட்டுக்காச்சல், வயிற்றுளைவு, குடற் காச்சல் போன்ற நோய்களை உண்டாக்குகின்றது.

### நோய்கள் பரவாமல் என்ன செய்யலாம்?

1. உணவுப்பொருட்களைத் திறந்து வைக்கக்கூடாது.

2. அழுக்குகளையும் கழிவுப்பொருட்களையும் நாள்தோறும் அப்புறப்படுத்தல் வேண்டும்.

3 குதிரை, ஆடு, மாடு முதலியவைகளின் கழிவுகளை வீட்டுச்சுற்றாடலில் வைத்துவிடாது அப்புறப்படுத்துதல் வேண்டும்.

ஈயினுடைய தொல்லை உஷ்ணநாடுகளிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. உஷ்ணநாடான இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் ஏற்படும் தொல்லைகளைப்பற்றி நாம் அடிக்கடி பத்திரிகைகளில்படித்து அறியக்கூடியதாக இருக்கின்றது, ஈயை இயம தூதர்களென அழைக்கலாம். இவைகளின் அபாயத்திலிருந்து நம்மைக் காப்பாற்றவேண்டும். யாத்திரைத்தலங்களில் விற்கப்படும் அதாவது திறந்து வைத்துவிற்கும் உணவுப் பண்டங்களை நாம் சாப்பிடக்கூடாது. ஏனெனில் ஈக்கள் அவ்வுணவுகளை அசுத்தமாக்கிவிடுகின்றன. ஆதலால் நாம் ஈக்கள் என்னும் இயமதூதர்கள்மட்டில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

### பொத்தான் நாகரீகம்

சட்டையில் பல வகையான பொத்தான்கள் அணிவது இன்றைய நாகரீகமாக விளங்குகிறது. எகிப்தியர் காலத்துக்கு முன் ஆயிரம் ஆண்டுகளாகப் பொத்தான் அணிவது நாகரீகமாக இருந்தது.

அக்காலத்தில் தங்கத்தாலும் வைரத்தாலும், அழகிய கற்களாலும் பொத்தான்கள் அணிந்தார்கள். ஆங்கிலேயர்கள் பொத்தான் தொழிற்சாலையை ஆரம்பித்து 300 ஆண்டுகள்தான் ஆனது. நம் இலங்கைகூட பல வர்ண பல உலோகப் பொத்தான்களைத் தயாரிக்க ஆரம்பித்துவிட்டது.

### குழந்தைகளிடம் அன்பு

நமக்குள்ள உரிமைகளைப் போல் குழந்தைகளுக்கும் இருக்கின்றன. அவர்களை மனிதப் பிறவிகளென்று கருதி நாம் நடத்தவேண்டும். அவர்களை நாம் மிருகத்தனமாக நடத்தக்கூடாது. அன்பாக, இனிமையாக, அவர்களை நடத்தவேண்டும்.

—இங்கர்சால்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,9-30
பிரிபோயா,போயா 2-30மணி
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது.
எம்.ஆர்.ராதா-எஸ்.எஸ்.ஆர். நடித்த
இரத்தக் கண்ணீர்
[புதிய கொப்பி]

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-கே.ஆர்.விஜயா நாகேஷ் நடித்த
தங்கை

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
SPREE

REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Poya, Pre-Poya 4 shows
George Setall,
Santa Dardar
in
QUILLER MEMORANDUM

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
நடித்த
ஜெய்சங்கர்-விஜயலட்சுமி
அன்பு வழி

MANOHARA
Daily 4-45,7&9-45,P. M
Poya. Pre-poya 4 shows
Shirley Macmaile,
Richard Attelborough
James Booth
in
THE BLISS OF MRS BLOSSOM

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தென்னகத் திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
எதிர் நீச்சல்

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி எஸ்.எஸ் ஆர் -ராஜசுலோஜனு நடித்த
குலவிளக்கு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ரவிச்சந்திரன்—கே ஆர். விஜயா நடித்த
நினைவில் நின்றவள்

கிங்ஸ்லி [கொழும்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
(விரைவில் வருகிறது]
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான மற்றுமோர் வெற்றிச்சித்திரம்
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே ஆர்.விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைச்சலார்

1-1-70 முதல் 15-1-70 வரை

கொழும்பு ஸ்ரூடியோ

யாழ்ப்பாணம்.

## பாம்பு..:

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறுதல் அடையும்.

6 தேகத்தின் வெப்பநிலை உடனடியாக மாற்றமடையாது. 7 மூச்சுவிடமுடியாது திணறல் ஏற்படும்.

8 நெஞ்சடைப்பதாக உணர்ச்சியுண்டாகும்.

9. வாந்தி வருவதுபோல இருக்கும். 10 தேகம் முழுவதும் வியர்த்துக் கொட்டும்.

11 கடிபட்ட இடம் அதிக நோவும், அழற்சியும் உண்டாகி, வீக்கம் காணும்.

இப்படியான அறிகுறிகளை அவதானித்தால் பாம்பு விஷத்தின் நிலைகளை அவதானிக்கலாம். எதற்கும் உடனடியாகத் தக்க வைத்தியனைக் கொண்டு சிகிச்சை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

பாம்பு கடித்த இடத்தை நன்கு அவதானித்தால் விஷத்தின் கொடுமையையும் கணக்கிட்டறியலாம். கடித்த அடையாளத்திலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டு கசிவு ஏற்பட்டாலும், கடித்த இடம் தடித்து வீங்கினாலும், கடித்த காயம் துவாரமாக இருந்தாலும், தாக்கப்பட்ட இடத்தில் நிறவேறுபாடு இருந்தாலும் விஷம் அதிகமென அனுமானிக்கலாம். இவற்றை நன்குணர்ந்து தக்க சிகிச்சை செய்தால் பாம்புக்கடியிலிருந்து தப்பிப் பிழைக்கவும் முடியும்

### விற்பனைக்கு

சகல பகிரங்க பரீட்சைகளுக்குமுரிய பொதறிவு வினா—விடை புதிய பதிப்பு 2000க்கு மேற்பட்ட வினா—விடைகள். ஆக்கம்: திரு. த. ந. பஞ்சாட்சரம். விலை: 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம்— புத்தகசாலை, 213, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1590

### தேவை

துவிச்சக்கரத்திலும், காரிலும் சென்று சோப்பும், பற்பொடியும் வியாபாரம் செய்ய அனுபவமுள்ள ஒருவர் தேவை. 23-12-69க்குமுன் விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் ரூபா 500 கட்டவேண்டும். ச. மா. செந்திவேல். நடராஜா வீதி, வல்வெட்டித்துறை. 1586

### குத்தகைக்கு

தென்னந்தோட்டம் இடம்: எழுதுமட்டு வாள். 20 ஏக்கர் நன்றாகக் காய்க்கின்ற மரங்கள். நீண்ட காலக் குத்தகை. விபரங்கட்கு நேரில் காணவும். திருமதி சோமசுந்தரம், கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோவிலடி, தெல்லிப்பழை. 1587

# உலக மேடை

[2ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டது. இனி அது ஒன்று சேருமென்று பிரிந்தவர்களே நினைக்க மாட்டார்கள். நிஜலிங்கப்பா காங்கிரஸ் என்றும் இந்திரா காங்கிரஸ் என்றும் அழைக்கலாம். தமிழ் நாட்டில் காமராஜர் காங்கிரஸ் என்றும் சுப்பிரமணியம் காங்கிரஸ் என்றும் அழைப்பது தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்குச் சுலபமாக விளங்கிக்கொள்ள உதவும் காந்திக் காங்கிரஸ் என்ற நிலை போய்விட்டது.

இந்திராவின் காங்கிரஸ் அக்ராசனராக திரு. ஜெகஜீவன்ராம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இந்தக் காங்கிரஸின் மகாநாடு பம்பாயில் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கிறது. பம்பாயில் திரு. சவானுக்கு நிறையச் செல்வாக்கிருக்கிறது. திரு. ஜெகஜீவன்ராம் அக்ராஸனராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதால் அமைச்சர் பதவியை அவர் துறந்துவிடுவார். அவரே இதைத் தெரிவித்திருக்கிறார். இந்திரா தமது மந்திரிசபையிலிருந்து பலரை விலக்கியிருப்பதால் தமது மந்திரிசபையை மாற்றியமைத்தேயாகவேண்டும். காங்கிரஸின் இடைக்காலத் தலைவராகவிருக்கும் திரு. சுப்பிரமணியம் புதிய மந்திரி சபையில் ஒரு மந்திரியாகும் வாய்ப்பு இல்லாமலில்லை. திரு. ஜெகஜீவன்ராம் மந்திரிப் பதவியைத் துறப்பதன்மூலம் வருமானவரி கட்டவில்லை என்ற எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடலாம்.

பம்பாய் மகாநாட்டுக்குப் பின் நிலைமை எப்படிமாறுகிறதென்று பார்ப்போம்.

# மெக்ஸ்வெல்—2

[ரேடியோ, டெலிவிஷன், எக்ஸ்ரே, ராடார் போன்ற எண்ணற்ற விஞ்ஞான சாதனங்களின் கண்டுபிடிப்புக்கு அடிப்படையாக அமைந்த பேருண்மைகளை உலகுக்கு அறிவித்த ஒப்பற்ற விஞ்ஞானி மெக்ஸ்வெல் பற்றிய கதையின் இரண்டாம் பகுதி இது. முதற்பகுதி சென்ற 'ஈழநாடு' வாரமலரில் வெளிவந்தது.









கதரைன் தேவார் என்ற பெண்ணை மணம் செய்துகொண்ட மெக்ஸ்வெல் லண்டனுக்குச் சென்றார். தனது வீட்டின்மேல், மாடியில் ஆராய்ச்சிக்கூடமொன்றை அமைத்து அங்கே தனது அருமை மனைவியின் பேராதரவுடன் நீராவிகளைப்பற்றிய தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அடிக்கடி ஜன்னல் வழியே கணவனும் மனைவியுமாக வெளியே எட்டிப்பார்த்துக் கொண்டிருப்பது, அக்கம் பக்கத்திலிருந்தவர்களுக்குப் புரியாத புதிராகத்தானிருந்தது. ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த இந்தஜோடி சுத்தக்காற்றைச் சற்றே சுவாசிக்கத்தான் இப்படி அடிக்கடி வெளியே வருகிறார்களென்பது அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது.

மைக்கல் பரடே என்ற பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானியை அடிக்கடி சந்திக்கக் கூடிய வாய்ப்பு மெக்ஸ்வெல்லுக்குக் கிடைத்தது. அடிக்கடி நடைபெற்ற இந்தச் சந்திப்புக்களால் 29 வயதான மெக்ஸ்வெல்லும் 70 வயதான மைக்கல் பரடேயும் நெருங்கியதோழர்களானார்கள். இதன்பின்புதான் தனது அசாத்திய ஆராய்ச்சியால், கணிதமூளையால், கணிதத்தின்மூலமாக, காந்தம், மின்சாரம், ஒளியெல்லாமே சக்தியின் வெவ்வேறு வடிவங்களே என்றும் அவை ஒன்றோடொன்று தொடர்புடையனவென்பதையும் நிரூபித்தார் மெக்ஸ்வெல்.

கதரைன் மெக்ஸ்வெல், ஒப்பற்ற அறிவாளியான தனது கணவனுக்குப் பக்கத்திலிருந்து பணிவிடை செய்வதற்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். ஒருமுறை, மெக்ஸ்வெல்லுக்கு அம்மை நோய் பற்றிக் கொண்டது. தனக்கும் அந்த நோய் தொற்றிக் கொள்ளலாம் என்ற கவலை ஏதும் இன்றி, இல்லத்தைவிட்டு எங்கும் செல்லாது, கணவரது கட்டிலருகிலேயே இராப்பகலாக விழித்திருந்து தக்க பணிவிடைகளைச் செய்தார், இந்த அன்பு மனைவி.

பௌதிக உண்மைகளையும், தத்துவங்களையும் கணிதத்தின் மூலமாக நிரூபிக்க முடியும் என்பதைச் செய்து காட்டிய மெக்ஸ்வெல், கண்டம் முழுவதும் மின்சாரமும், காந்தமும் அலைகளாகப் பிரயாணம் செய்கின்றன என்று அறுதியிட்டுக் கூறினார். இதுதான் இன்றைய ரேடியோவின் கண்டுபிடிப்புக்கு அடிப்படையாக அமைந்த சித்தாந்தமாகும்.









மின்சார, காந்த அலைகளைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த மெக்ஸ்வெல்லுக்கு, ஒளியும் அலைகளாகத்தான் பிரயாணம் செய்கிறது என்ற உண்மை புலனாகியது. அன்று மெக்ஸ்வெல் அறிந்திராவிட்டாலும் ஒளியும் அலைகளாகத்தான் பிரயாணம் செய்கின்றது என்ற இந்த உண்மைதான்- இன்றைய தொலைக்காட்சி, 'டெலிவிஷன்' கண்டுபிடிப்புக்கு அடிப்படையாக அமைந்தது.

இதேபோல் போர்க்காலங்களிலும், சமாதான காலங்களிலும், எதிரிகளின் விமானங்களின் வரவை பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலேயே கண்டுபிடித்து, அறிவிக்கும் ''ராடார்'' (Radar) சாதனங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கும் மெக்ஸ்வெல் 70 ஆண்டுகளுக்கு முன் செய்த ஆராய்ச்சிகள் பெரிதும் உதவின. ராடாரைக் கண்டுபிடித்தஸ்வீடிஷ் விஞ்ஞானி சர். ரொபர்ட் வொட்ஸன் வாட், மெக்ஸ்வெல்லின் ஆராய்ச்சிக்கட்டுரைகளின் துணைகொண்டே ராடார் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்.

மெக்ஸ்வெல்கண்டுபிடித்த மின்சார-காந்தஅலைகள் பற்றிய இந்தப் பேருண்மை ஒரு காலத்தில் மருத்துவத்துறையிலும் இன்றியமையாததாக இருக்கும் என்றுஅன்று மெக்ஸ்வெல் நினைத்திருக்க முடியாது. உடலின் உற்புறத்தை ஆராயப்பெரிதும் உதவும் ''எக்ஸ்றே (X-Ray) புற்றுநோய்த்தடுப்புக்குப் பாவிக்கப்படும் ஒருவகைக்கதிர்களும், மெக்ஸ்வெல்லின் கண்டுபிடிப்புகள் தாம்-புற்றுநோய்த்தடுப்புக்கு இப்போது பாவிக்கப்படும் கதிர்களைக் கண்டுபிடிக்கக் காலாக இருந்த மெக்ஸ்வெல்லை அதே புற்றுநோய் 48 வயதில் கொள்ளை கொண்டது!

நிறம், ஒளி, உஷ்ணம், பார்வை, நீராவிகள், மின்சாரம், காந்தம்- இப்படி எடுத்துக்கொண்ட துறைகளில் எல்லாம் முன்னணி வகித்தார் மெக்ஸ்வெல்.

மெக்ஸ்வெல்லின் கண்டுபிடிப்புகள் இன்று சந்திர மண்டலத்திற்கு மனிதனை அனுப்பப் பயன்படுத்தப்படும் ராட்சத ராக்கட்டுகளை விண்வெளிக்கு உந்தித் தள்ளவும் உதவுகின்றன. மெக்ஸ்வெல்லின் ஆராய்ச்சியின் திறன்தான் என்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகாத்மா மணிமொழிகள்

வருங்காலத்தில் என்ன நடக்குமென்று நான் அறிய விரும்பவில்லை. இப்போது உடனடியாகச் செய்யவேண்டியது என்ன என்பதே என் கவலை! அடுத்த கணத்தின் மீது கடவுள் எனக்கு அதிகாரம் அளிக்கவில்லை.

0 0 0

சமயம் என்பது ஆதரவற்ற ஏழைமக்களுக்கு ஊழியம் செய்வதே ஆகும். ஏழை எளியோர் உருவிலேயே கடவுள் நமக்குக் காட்சி அளிக்கிறார்.

0 0 0

சமயங்கள் என்பவை ஒரே இடத்தில் போய்ச் சேரும் பல்வேறு சாலைகள். நாம் எல்லோரும் ஒரே இடத்தில் போய்ச் சேருவதால் நமக்கென்ன நஷ்டம்.




### யாழ்ப்பாணப் பகுதியில்

# குற்றச் செயல்களைத் தடுக்க பொதுமக்களின் ஒத்துழைப்பை நாடுகிறார்கள் பொலிஸார்

## கல்வியில் சிறந்த பெண்ணுக்கு தங்கப்பதக்கம்

மதுரை, டிச. 7

கல்வித்துறையில் சிறந்து விளங்கும் பெண்ணுக்கு தங்கப்பதக்கம் வழங்க மதுரை பல்கலைக்கழக பெண்கள் சங்கம் முடிவுசெய்துள்ளது. வருடாவருடம் இந்தப்பதக்கம் வழங்கப்படவிருக்கிறது. இதற்கான பணத்தொகையை இச்சங்கத்தினர் மதுரை பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் கையளித்துள்ளனர்.

## 'சம்பள உயர்வுக்கு ஆதரவு'

யாழ்ப்பாணம், திங்கள்

சுருட்டுத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு சுமார் 130 உற்பத்தியாளர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் சம்பள உயர்வுதர முன்வராத தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்துவருவதாகவும் அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்தில் மிக வேகமாக அதிகரித்து வரும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை நாடுகிறார்கள் வடபகுதிப் பொலிசார்.

சட்டத்தைமீறி வீதிகளில் கத்தி, வாள், பொல் ஆகியனவற்றை வைத்துக் கொண்டு வீதிகளில் கலாட்டா செய்வது போன்ற வன்முறைச் சம்பவங்கள் பட்டப்பகல் நேரங்களில் நடந்து கொண்டிருப்பதாகப் புகாருக்குமேல் புகாராகவடபகுதி பொலிசாருக்கு கிடைத்துக்கொண்டிருப்பதைத் தொடர்ந்து கடும் நடவடிக்கை மேற்கொள்ளும்படி வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வீதிகளில் வேலையின்றி அனாவசியமாக நிற்பவர்களையும் கலகங்களில் ஈடுபடுபவர்களையும் அதற்குத் தூண்டுகோலாக இருப்பவர்களையும் உடன்கைதுசெய்து பொலிஸ்பாதுகாப்பில்வைக்குமாறு வடபகுதி பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர்களுக்கும் பணிக்கப்பட்டது.

குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு பொலிசாருக்கு உதவியாக பொதுமக்கள் ஒத்துழைப்புத்தந்து உடனுக்குடன் பொலிசாருக்குத் தகவல் தந்துதவுமாறு வடபகுதி பொலிஸ் அதிபர் திரு சுந்தரலிங்கம் வேண்டுகோள்விடுக்கிறார்.

## யாழ். தபால்..

1 பக்கத் தொடர்ச்சி]

லாளர்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தபாற் கந்தோர் கட்டட மேல்மாடியில் உள்ள தபால் ஊழியர்களின் மலசலகூடைப் உடைந்துவிட்டதால், கீழ்மாடியில் உள்ள 'கரியர் அறையின்' சுவர் வழியாக அழுக்கு நீர் வடிந்து வருவதாகவும், இதனால் பொறியியலாளர்பகுதி ஊழியர் அந்த அறையில் வேலை செய்ய முடியாமல் இருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வேலைகள் உடனடியாகத் திருத்தப்படாவிடில் பரிசோதகர்கள் வெளிநடப்புச் செய்வார்களெனத் தொலை தொடர்பு பரிசோதகர் சங்க, உபதலைவர் வடபகுதி பொறியியலாளருக்கு, தந்திமூலம் இன்று அறிவித்துள்ளார். வடபகுதி தொலை தொடர்பு பொறியியலாளர் திரு. சி. கந்தசாமி, பிரதம பொறியியலாளருக்கு இவ்விபரத்தை உடனடியாக அறிவித்துள்ளார்.

## பாடசாலை அறையை உடைத்து திருடினாராம் மாணவன்

மல்லாகம், திங்கள்

கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாசாலை அறையை உடைத்து சியவஸ சுவீப் ரிக்கெட்டுகள், ரொக்கப் பணம் களவாடியதாக பன்னாலை வாசியான எம். ஜெகநாயகம் (வயது 15) என்ற பாடசாலை மாணவன் மீது குற்றஞ்சாட்டி மல்லாகம் பதில் நீதிபதி திரு. ரி. தம்பிரத்தினம் முன்னிலையில் காங்கேசன்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு ஆர். ஜே. செல்வரத்தினத்தின் விண்ணப்பத்தின் பேரில் நீதிபதி எதிரியை 200 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து வழக்கு விசாரணையை இம்மாதம் 21-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பிரஸ்தாப எதிரி மீண்டும் இம்மாதம் 5-ம் திகதி இதே பாடசாலையில் உட்புகுந்து திருடிய சமயம் பாடசாலை தலைமையாசிரியரிடம் அகப்பட்டு பொலிசாரிடம் கையளிக்கப்பட்டார். இதையடுத்து இவர்மீது மற்றொரு களவு சம்பந்தமான வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

## வி. ஏ. கந்தையாவுக்கு புங்குடுதீவில் சிலை

(ஊரைதீவு நிருபர்)

தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினராகவிருந்தகாலம் சென்ற திரு. கந்தையாவுக்குச் சிலை நிறுவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. சிலை புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகத்தில் அமைக்கப்படும். சிலையின் திறப்புவிழா அடுத்த வருட முற்பகுதியில் இடம்பெறவிருக்கிறது.

தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவரும் தற்போதைய தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு. வ. நவரத்தினத்தைக் கொண்டே சிலையைத் திறந்துவைக்கப்போவதாக சிலை அமைப்புக் குழுப் பொறுப்பாளரான திரு. புஷ்பதாசன் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலகத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இந்த வருடத்தில் ஏழரைக்கோடி புசல்

கோட்டை, திங்கள்

இந்த வருடத்தில் இருபோகத்திலும் 7 கோடி 50 லட்சம் புசல் வரை நெல் உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது சென்ற வருடத்தைவிட 5 சத வீதம் அதிகமாகும்.

## சென்னை புறப்பட்டார்

யாழ்ப்பாணம், திங்கள்

சென்னையில் இம்மாதம் 12-ம் திகதி நடைபெறும் காலம் சென்ற திருவாவடுதுறை நாதசுரஇசைபேரரசு என். இராசரத்தினம்பிள்ளையின் நினைவு விழாவில் கலந்துகொள்வதற்காக கைதடியைச் சேர்ந்த திரு. கே. பழனிமலை நேற்று சென்னைக்குப்புறப்பட்டார்.

## புதிய நூறு ரூபாய் நோட்டுகள்

கோட்டை, ஞாயிறு

புதிய நூறு ரூபாய் நோட்டுகள் விரைவில் பாவனைக்கு வரும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்திருக்கிறது.


### விற்பனைக்கு

மெஸி பெர்குசன் டிராக்கர் 25 ஸ்ரீ 58 தொடரிலக்கம் உடனடி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ந. பூபாலபிள்ளை, வேலணை, மேற்கு வேலணை. 1596

லொறி

நல்ல நிலையிலுள்ள 24 சிறீ இலக்கமுடைய தேக்கு பொடி அடித்த லொறி பெரிய லொறி எடுப்பதற்காக விற்பனைக்குண்டு. கூடியவிலை கேட்பவர்க்குக் கொடுக்கப்படும். 7-ம், 8-ம் திகதியில் பார்வையிடலாம். மங்களா பேணிச்சர் ஸ்ரோர், 250, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1591

தானே இயங்கும் சிங்கர் தையல்மெஷின் மொடல் K 319 K விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ப. பொன்னைகம, சம்பியன் வீதி, கொக்குவில். 1594


ஈழநாடு

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 23-ந் திகதி [8-12-69]

## ஏ. பி. சி. சமஷ்டி

ஆப்கானிஸ்தான் (ஏ), பர்மா (பி), இலங்கை (சிலோன்-சி) ஆகிய மூன்று நாடுகளுடனும் இந்தியா, பாகிஸ்தானை உள்ளடக்கிய முக்கோண மகாசமஷ்டியை உருவாக்கவேண்டுமென்றும் இவ்வித சமஷ்டி அமைந்தால் ஆசிய நாடுகளுக்குள் நிலவும் பல பிரச்னைகள் நீங்கி கூட்டுறவு ஏற்பட்டு இந்த நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேறமுடியுமென்றும் ஆச்சார்ய விநோபாபாவே யோசனை தெரிவித்திருக்கிறார்.

இந்த ஆசியநாடுகளுக்கிடையில் முதலில் சமஷ்டி அமைப்பு ஏற்பட்டால் இதரபகுதிகளிலும் அயல்நாடுகளுக்குள் ஒற்றுமையேற்பட்டு அந்தந்தப் பகுதியில் சமஷ்டி அமைப்பு ஏற்படுமென்றும் இதன் மூலம் உலகம் ஒரு குடும்பம் என்ற இலட்சியத்தை அடையமுடியுமென்றும் விநோபாஜி கருதுகிறார்.

சாம்ராஜ்யப் பிரதமர்களின் மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு நமது பிரதமர் திரு. டட்லி சேனநாயகா லண்டன் சென்றிருந்தபோது உலக சமஷ்டி ஏற்படும் காலம் வெகுதூரத்திலில்லையென்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்.

யார் செய்த தவறோ 'சமஷ்டி' என்ற வார்த்தையைச் சொன்னாலே நமது நாட்டில் பலருக்கும் நாராசமாக விழுகிறது.

சந்திரனுக்கு மனிதன் போய்வரும் காலம் இது. லட்சக்கணக்கான மைல் தொலைவிலுள்ள சந்திரனில் மனிதன் இறங்கிப் பூமியிலுள்ளவர்களுடன் பேசுகிறான். சந்திரன்கூட பூமியிலுள்ள மனிதனுக்குத் தூரத்தில் இல்லையென்பதை விஞ்ஞானம் உணர்த்துகிறது. போக்குவரத்துச் சாதனங்களினாலும், தொலைபேசி, தொலைக்காட்சி முதலியவைகளினாலும் மனிதகுலம் மிக மிக நெருக்கமாகிக் கொண்டிருக்கிறது. அதாவது உலகம் ஒரு குடும்பமாக உருவாகிக்கொண்டிருக்கிறது.

ஆனாலும் வேலித் தகராறும், காணித் தகராறும் மொழிப்பிரச்னையும், இனப்பிரச்னையும், மதப்பிரச்னையும், சாதிப் பிரச்னையும் மனிதனிடமிருந்து இன்னும் மறையவில்லை.

பூஜ்யர் விநோபாஜியின் பூதான இயக்கம் இலங்கையுட்பட ஆசிய நாடுகள் பலவற்றிலும் பரவி வெற்றியளித்தால், அவர் கனவுகாணும் மகா சமஷ்டியும் உலக அரசும் உருவாகி, உலகம் என்ற ஒரு குடும்பம் தோன்றுவது கடினமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org